
பெப்ரவரி 2013

# ஞானம்

153

## கலை இலக்கியச் சஞ்சிகை





www.gnanam.info

விலை : ரூபா 65/=

தரமான தங்க நகைகளுக்கு....

Nagalingams

Jewellers



Designers and Manufacturers of
22kt Sovereign Gold
Quality Jewellery

101, Colombo Street, Kandy.
Tel: 081 - 2232545

CENTRAL ESSENCE SUPPLIERS

Suppliers to Confectioners & Bakers

DEALERS IN ALL KINDS OF FOOD ESSENCES,
FOOD COLOURS, FOOD CHEMICALS,
CAKE INGREDIENTS ETC.

76B, Kings Street, Kandy.
Tel: 081 - 2224187, 081 - 2204480, 081 - 4471563

பகிர்தலின் மூலம்
விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்

ஒளி - 13 சுடர் - 9

**ஆசிரியர்**
*தி.ஞானசேகரன்*

*நிர்வாக ஆசிரியர்:* ஞா. பாலச்சந்திரன்

**இணை ஆசிரியர்**
ஞானம் ஞானசேகரன்

**ஓவியர்**
சிவா கௌதமன்

**தொடர்புகளுக்கு**
'ஞானம்' அலுவலகம்
3-B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06, இலங்கை.

**தொலைபேசி**
*0094 - 11 2586013, 0094 - 777 306506*
*0061 - 286778989 (Aus)*

**தொலைநகல்**
*0094 11 2362862*

**மின்னஞ்சல்**
*editor@gnanam.info*

**இணையத்தளம்**
*http://www,gnanam.info*
*http://www.t.gnanasekaran.lk*

**உள்நாட்டு சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | : | ரூபா 1,000/= |
| ஆறு ஆண்டுச்சந்தா | : | ரூபா 5,000/= |
| ஆயுள் சந்தா | : | ரூபா 20,000/= |

| வெளிநாட்டு சந்தா | ஓராண்டு |
|---|---|
| Australia(AU$) | 50 |
| Europe(•) | 40 |
| India(Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada($) | 50 |
| UK(£) | 35 |
| Singapore(S$) | 50 |
| Other(US$) | 50 |

**வெளிநாட்டு உள்நாட்டு வங்கித் தொடர்புகள்**
SwiftCode :- HBLILKLX
T.Gnanasekaran
Hatton National Bank, Wellawatha Branch
A/C No.009010344631

மனியோடர் மூலம் சந்தா அனுப்புபவர்கள் அதனை **வெள்ளவத்தை** தபாற் கந்தோரில் மாற்றக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்

# இதழினுள்ளே ...


**கவிதைகள்**

| | |
|---|---|
| வீக்கேயெம் | 10 |
| அன்புடீன் | 14 |
| கா. தவபாலன் | 22 |
| ஏ. இக்பால் | 27 |
| ஆ. முல்லைதிவ்யன் | 27 |
| கலைமகள் ஹிதாயா ரிஸ்வி | 31 |
| தமயந்தி | 36 |

**கட்டுரைகள்**

| | |
|---|---|
| ப. பிரசாந் | 05 |
| ஆசி. கந்தராஜா | 07 |
| சை. பீர்முகம்மது | 37 |
| அகளங்கன் | 41 |

**சிறுகதைகள்**

| | |
|---|---|
| வீ. என். சந்திரகாந்தி | 15 |
| கே. எம். இக்பால் | 23 |
| கு. குணறுபேஸ் | 32 |

**பத்தி எழுத்து**

| | |
|---|---|
| துரை. மனோகரன் | 20 |
| கே. ஜி. மகாதேவா | 28 |
| சோ. பத்மநாதன் | 40 |
| மு. பொ. | 43 |

**நூல் அறிமுகம்**

| | |
|---|---|
| குறிஞ்சி நாடன் | 46 |

**சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்**

| | |
|---|---|
| கே. பொன்னுத்துரை | 44 |

| | |
|---|---|
| **வாசகர் பேசுகிறார்** | 48 |


ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகட்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல் வேண்டும். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு. - **ஆசிரியர்**

ஞானம்
கலை,இலக்கிய
சஞ்சிகை,

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப்பதவி கொள்வார்

# தவத்திரு தனிநாயக அடிகளார் பிறந்த நூற்றாண்டு

தனிநாயக அடிகளார் என்றவுடன் எம் எண்ணத்தில் வருவது அவர் ஏற்பாடு செய்த உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளே!

அடிகளார் உலகமெல்லாம் தமிழைக் கண்டவர். பல நாடுகளுக்கும் சென்று தமிழைப் பரப்பிய தமிழ்த்தூதுவர்.

பிற நாட்டவர்கள் தமிழ்க் கலையையும் தமிழ்க் கல்வியையும் தமிழாய்வையும் பெற வித்திட்டவர்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அமைவதற்கு வழிவகுத்தவர்.

தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் நிறுவியதோடு தமிழ்ப் பண்பாடு பற்றிய ஆங்கில இதழ் (Tamil Culture) நடத்தியவர். தமிழியல் பற்றிய ஆய்விதழை ஆங்கிலத்தில் தொடங்கி நடத்தியவர் (Jurnal of Tamil Studies). தமிழே மூச்சாக வாழ்ந்தவர்.

இத்தகைய தமிழ்ப் பெருமகனார் நம் ஈழ நாட்டைச் சேர்ந்தவர் என்ற வகையில் நாமெல்லாம் பெருமை கொள்ளலாம்.

அடிகளார் இலங்கையில் உள்ள ஊர்காவல்துறையைச் சேர்ந்த கரம்பன் என்னும் சிற்றூரில் **21-08-1913** அன்று ஹென்றி ஸ்தனிஸ்லாஸ் அவர்களுக்கு மகனாகப் பிறந்தார். அடிகளாரின் தந்தை கிறிஸ்தவ சமயத்துக்கு வருமுன்னர் சைவசமயத்தவராய் இருந்தவர். அப்போது அவரது இயற்பெயர் நாகநாதன் கணபதிப்பிள்ளை. அடிகளாரின் தாயின் பெயர் சிசில் இராசம்மாள் வஸ்தியாம்பிள்ளை. அடிகளாரின் இயற்பெயர் சேவியர். அடிகளார் பிற்காலத்தில் தம் தந்தை வழி முன்னோர் பெயராகிய "தனிநாயக முதலி" என்பதைக் கொண்டு தமது பெயரைத் தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்டார்.

யாழ்ப்பாணம் தூய சம்பத்திரிசியார் கல்லூரியில் படித்து 'கேம்பிரிட்ஜ்' தேர்வில் சித்தியடைந்த சேவியர் துறவறத்தில் நாட்டம் கொண்டு துறவறக் கல்வியை கொழும்பில் மேற்கொண்டார். பின்னர் தமிழகத்திலுள்ள திருவனந்தபுரம் (Diocese) மறைமாவட்டத்தில் சேர்ந்தார். அங்கிருந்து உரோமாபுரி சென்று 'உர்பன்' பல்கலைக்கழகத்தில் மறையியல் கலாநிதி பட்டம் பெற்றார். அதனைத் தொடர்ந்து கத்தோலிக்க மதகுருவானார்.

பின்னர் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் ஆசிரியப்பணி மேற்கொண்டார். வடக்கன் குளம் என்ற இடத்தில் ஆசிரியப் பணியும் சமயப் பணியும் மேற்கொண்ட காலகட்டத்தில் சிதம்பரத்திலிருந்து அங்கு வந்து தங்கியிருந்த குருசாமி சுப்பிரமணிய ஐயரிடம் நான்கு வருடங்கள் தமிழ் கற்றார். தொடர்ந்தும் தமிழ் கற்க ஆர்வமுற்று சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து எம். ஏ; எம் லிட். ஆகிய பட்டங்களைப் பெற்றார்.

தூத்துக்குடியில் தனிநாயக அடிகளார் **1948**ல் தமிழ் இலக்கியக் கழகத்தை ஏற்படுத்தி அதன்வழி பல ஒப்பற்ற நூல்களை வெளியிட்டார். இரண்டு ஆண்டுகள்(**1949-1950**) சீனா, ஜப்பான், அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்று தமிழரின் கலை, இலக்கியம், பண்பாடு, வரலாறு முதலிய வற்றைப்பற்றி சொற்பொழிவாற்றினார்.

அடிகளார் தமிழ், ஆங்கிலம், லத்தீன், சிங்களம், இத்தாலியம், கிரேக்கம், எபிரேயம் போன்ற மொழிகளில் தேர்ச்சியுடையவராக இருந்தார்.

மிகச் சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும், இதழியலாளராகவும் விளங்கினார்.

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை விரிவுரையாளராக **1952** முதல் **1661** வரை பணியாற்றினார். கொழும்பில் **1952**ல் தமிழர் பண்பாட்டுக்கழகத்தை ஏற்படுத்தியதோடு 'தமிழ் கல்ச்சர்' என்னும் ஆங்கில இதழை வெளியிட்டார்.

சிங்கள மொழிச்சட்டத்தை எதிர்த்து ஈழத்தமிழ் மக்கள் நடத்திய அறப்போராட்டங்களில் **1956, 1958, 1961** ஆகிய ஆண்டுகளில் தனிநாயக அடிகள் கலந்து கொண்டார்.

தமிழ் மொழி உரிமை பற்றி தனிநாயக அடிகளாரின் சொற்பொழிவுகள் அரசியல் உள்நோக்கம் கொண்டவையாகக் கருதி அரசு அவரை எதிரியாக நடத்தத் தொடங்கியது. அவர் சிறை செய்யப்படலாம் என்னும் சூழ்நிலை இருந்தது. எனவே அவர் 1961ல் மலேசியா சென்று அங்குள்ள மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்திய மொழிகள் துறையின் தலைவராகப் பணியேற்றார். அங்கு 1969 வரை பணியாற்றினார்.

அங்கிருந்தவேளை முதலாவது உலகத்தமிழ் மாநாடு மலேசியாவில் 1966ல் நடைபெறுவதற்கு அடிகளாரே வித்திட்டார். அதைத் தொடர்ந்து இரண்டாம், மூன்றாம், நான்காம் மாநாடுகள் அடிகளாரின் கருத்துக்களை ஏற்று நடத்தப்பட்டன. இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு சென்னையில் நடந்தபோது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நிறுவப்படவேண்டும் என்ற கருத்தை அடிகளார் உருவாக்கினார். அதன்படி தமிழக அரசு சென்னையில் 21-11-1970ல் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தை அமைத்தது. அந்நிறுவனம் தமிழ் தொடர்பான ஆய்வுப்பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

மலாயாப் பல்கலைக்கழகத்திலிருந்து விலகி இலங்கை வந்த தனிநாயக அடிகளார் கண்டியில் தங்கியிருந்தார். ஆசிய, அமெரிக்க, ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களுக்கு அடிக்கடி வருகைப் பேராசிரியராகச் சென்று வந்தார். பிற்பட்ட காலத்தில் பண்டத்தரிப்பு என்னும் இடத்தில் தியான இல்லத்தில் தங்கியிருந்தார். 1-9-1980ல் மீளாத்துயிலில் ஆழ்ந்தார்.

தமிழ் மொழிக்கு தனிநாயக அடிகளார் செய்த பணிகள் அளப்பரியன.

தனிநாயக அடிகளாரின் பிறந்த நூற்றாண்டாக விளங்கும் இந்த ஆண்டில் அவரை நினைவு கூருவதும், இளைய தலைமுறையினருக்கு அவர்பற்றி அறிமுகம் செய்வதும், தமிழ்சார்ந்த நிறுவனங்கள் அன்னாரது பணிகளை முன்னெடுப்பதும், பாடசாலைகளில் அன்னாரது பெயரில் தமிழ் மொழிசார்ந்த போட்டிகளை மாணவர்களிடையே நடத்தி பரிசில்கள் வழங்குவதும், இத்தகைய பிறபணிகளும், தமிழே தமது வாழ்வாகக் கொண்ட தனிநாயக அடிகளாருக்கு தமிழ் மக்கள் செய்யும் நன்றிக்கடனாக அமையும்.

இந்த வகையில் ஞானம், தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் பிறந்த நூற்றாண்டினை நினைவுகூரும் முகமாக "ஈழத்து மண்வாசனைச் சொற்கள் விளக்க அகராதி' ஒன்றினை வாசகர்களின் பங்களிப்புடன் தயாரித்துத் தமிழுலகுக்கு அளிக்கும் பணியில் ஈடுபடுகிறது என்பதனைப் பெரு மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இது தொடர்பான விபரத்தினை இந்த இதழின் பக்கம் நான்கிலே (4) காணலாம்.

## கம்பன் விழா 2013

"கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்" என்ற குறிக்கோளுடன் இயங்கிவரும் கொழும்புக் கம்பன் கழகத்தினர் 32 ஆண்டுகளாகத் தமிழுக்கும், சைவத்திற்கும், சமூகத்திற்கும் பெரும் பணியாற்றி வருகிறார்கள். யாழிலும் கொழும்பிலுமாக இரண்டு கம்பன் கோட்டங்கள் அமைத்தமை, வெள்ளவத்தையில் நான்கு தளங்களைக் கொண்ட தத்துவ ஆலயத்தை அமைத்து வருகின்றமை, முப்பது தமிழ் விழாக்களையும் இருபது இசைவிழாக்களையும் நடத்தியமை, நூற்றுக்கு மேற்பட்ட அறிஞர்களைக் கௌரவித்தமை, இருபது நூல்கள் வெளியிட்டமை, உலகளாவிய சாதனை செய்த தமிழர்க்கு விருது வழங்கியமை, இளையோர்க்கான தமிழ்ப்போட்டிகள் பல நடத்தியமை, புதிய பேச்சாளர்களையும் கவிஞர்களையும் உருவாக்கியமை, தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்தமை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள் வழங்கியமை என இந்நிறுவனத்தினரது பணிகள் விரிகின்றன.

இப்பணிகளின் தொடர்ச்சியாக இவ்வருடமும் 'கம்பன் விழா' பெப்ரவரி 22-25 ஆம் திகதிகளில் மிகவும் கோலாகலமாக நடந்தேறியிருக்கிறது. தமிழகம், மலேசியா நாடுகளிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் பெருந்தொகையான அறிஞர்கள் கலந்துகொண்ட நான்கு நாள் விழாவில் சிறப்புரைகள், நாட்டியார்ப்பணம், பரிசளிப்பு, விருது வழங்கல், சமூக நிதியுதவி, அஞ்சலி அரங்கு, மாணவர் அரங்கு, இளைஞர் அரங்கு, கருத்தரங்கம், கவியரங்கம், இலக்கிய ஆணைக்குழு, குறள் அரங்கம், ஆன்றோர் கௌரவம், வழக்காடு மன்றம் ஆகிய நிகழ்வுகள் மிகவும் தரமானவையாக அமைந்தன. வழமைபோல நேரத்தைப்பேணல், கச்சிதமான நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு, மேடை ஒழுங்கு, மண்டப ஒழுங்கு உபசரணை போன்றவற்றைத் திறம்பட நடத்தி சகலருடைய ஏகோபித்த பாராட்டுதலையும் இவ்வாண்டும் கம்பன் கழகத்தினர் பெற்றுள்ளனர். முன்னைய ஆண்டுகளை விட இவ்வாண்டு அதிக இரசிகர்கள் கம்பன் விழாவைக் கண்டுகளித்தமையும் குறிப்பிடத்தக்கது. இவற்றிற்குப் பின்னால் காரணகர்த்தாவாக நின்று இயங்கும் கம்பவாரிதி இ. ஜெயராஜ் போற்றுதலுக்குரியவர். கம்பன் கழகத்தினர் பெரும்பாராட்டுக்குரியவர்கள்.

# "ஈழத்து மண்வாசனைச் சொற்கள்"

## விளக்க அகராதிக்கான

## சொல் அடைவு

'ஈழத்து மண்வாசனைச் சொற்களுக்கான விளக்க அகராதி'யினை தொகுத்து நூலாக்கும் நோக்குடன் அனைவரையும் ஈழத்து மண்வாசனைச் சொற்களை அனுப்பி வைக்குமாறு நாம் வேண்டுகிறோம்.

- அனுப்பி வைக்கப்படும் சொற்கள் பரிசீலனையின் பின்னர் அனுப்பியவர் பெயருடன் தொடர்ந்து வரும் ஞானம் இதழ்களில் பிரசுரிக்கப்படும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி - dictionary@gnanam.info

அஞ்சல் முகவரி - 3B - 46th Lane, Colombo - 06 (அகராதி / dictionary என்று கடித உறையில் குறிப்பிடவும்)

**உதாரணங்கள் :**

***ஒய்த்தா மாமா,***

*1.* பெயர்ச் சொல்

*2.*

*3.* முஸ்லிம்

*4.* முஸ்லிம் சமூகத்தில் 'சுன்னத்' செய்பவரைக் குறிக்கும் தொழிற் பெயர்

*5.* "எனக்குப் பெருமையாக இருந்தாலும் மாலை நடக்கவிருக்கும் **ஒய்த்தா மாமா**வின் அறுப்பை எண்ணி எண்ணி பயந்து கொண்டிருந்தேன்" ('ஒய்த்தா மாமா', தீரன். ஆர். எம். நௌஸாத், ஞானம் *147*, பக்கம் *7*)

[ஞானம், *3B - 46th Lane, Colombo - 06, dictionary@gnanam.info, 0112 586 013*]

**குறிப்பு:** இதில் சொல்லின் வேர் (மூலம்) தெரியவில்லை (இலக்கம் *2*) தவிர்க்கப் பட்டிருப்பதைக் காண்க)

***கொம்மா,***

*1.* பெயர்ச் சொல்

*2.* அம்மா

*3.* யாழ்ப்பாணம்

*4.* தாய்

*5.* "உன்ரை **கொம்மா** இதைக் கேள்விப்பட்டால் சண்டைக்கு வந்திடுவா எண்டு சொன்னன்" ('புதிய சுவடுகள்', தி.ஞானசேகரன், வீரகேசரி பிரசுரம் *- 58*, பக்கம் *159*)

[ஞானம், *3B - 46th Lane, Colombo - 06, dictionary@gnanam.info, 0112 586 013*]

***நொட்டல்,***

*1.* வினைச் சொல்,

*2.*

*3.* மலையகம்

*4.* இடையூறு தருதலைக் குறிக்கும்

*5.* "நாம முழிப்பாயிருக்கோம் பாரு நம்மள **நொட்டிக்**கமாட்டாங்க" ('மூட்டத்தினுள்ளே', சு.சதாசிவம், வீரகேசரி பிரசுரம் *- 75*, பக்கம் *16*)

[ஞானம், *3B - 46th Lane, Colombo - 06, dictionary@gnanam.info, 0112 586 013*]


அனுப்பப்படும் சொற்களில் கீழ்க்கண்ட கூறுகள் இடம்பெறுதல் விரும்பத்தக்கது. குறித்த ஒரு கூறு தெரியாதவிடத்து அதைத் தவிர்த்து அனுப்பி வைக்கலாம். இருப்பினும் **சொல், பொருள், பாவனை உதாரணம்** ஆகிய கூறுகள் கட்டாயமானவை. (மேற்கண்ட உதாரணங்களைக் கவனிக்க)

**சொல்**

1. **சொல்–வகுப்பு** – பெயர்ச் சொல், வினைச் சொல்,........
2. **சொல்லின் வேர்** (மூலம்) – குறித்த சொல் தோன்றிய /தோன்றியிருக்கக்கூடிய அடி
3. **பிரதேசம் / இனம்** – யாழ்ப்பாணம், கிழக்கிழங்கை, மட்டக்களப்பு, மன்னார், மலையகம், முஸ்லீம், ........
4. **பொருள்** – குறித்த சொல்லிற்கான பொருள்
5. **பாவனை உதாரணம்** – குறித்த சொல்லை நடைமுறையில் பாவிக்கக்கூடிய உதாரணம். இதற்கு இலக்கிய உதாரணம் விரும்பத்தக்கது. இலக்கிய உதாரணம் குறிப்பிடப்படும் இடத்து நூலின் விபரங்களும் உள்ளடக்கப்படல் வேண்டும். இலக்கிய உதாரணம் இல்லாதவிடத்து பொருத்தமான உதாரணம் தரப்படல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட உதாரணங்கள் தருதல் விரும்பத்தக்கது.

**அனுப்பியவர் விபரம்** - பெயர், முகவரி, மின்னஞ்சல், தொலைபேசி விபரங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். சஞ்சிகையில் அனுப்பியவர் பெயர் மட்டுமே பிரசுரிக்கப்படும். - ஆசிரியர்

அட்டைப் பட அதிதி



# அகவெளியினூடான கலையாழுமை மிக்க

# ஓவியர் ஆசை இராசையா

கடந்து செல்லும் காலத்தை அவ்வப் போது கைதுசெய்து படைப்பாக்கமாகப் பரிணாமம் கொடுக்கும் கலைஞர்களின் அவசியம் அன்றுதொட்டு இன்றுவரை நீண் டுள்ளது. இவர்கள் சமூகத்தின் பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் தளவாடிகளாக வும், சாதாரண சமூக மக்கள் நிலையிலிருந்து வேறுபட்டு கலைப் படைப்புக்களைப் படைப்பதில் மட்டுமே பெரிதும் தமது மனத்திருப்தியைப் பெறுபவர்களாகவும் எந்தவொரு தமது படைப்பிலும் பூரண திருப்தியைக் காணாதவர்களாகத் தமது தேடலிலும், பரிச்சயத்திலும் புதுமையைக் கண்டடைபவர்களாகவும் காணப்படுவர்.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் அச்சுவேலி என்ற கிராமத்தில் நற்பண்புகள் மிக்க தந்தையார் ஆசை, தயார் செல்லம்மா தம்பதிக்கு மூத்த மகனாக 16.08.1946இல் இராசையா பிறந்தார். ஏற்கனவே மூத்த ஓவியர் Ambalavanar Rasiah என்பவர் தனது கையொப்பத்தை A.Rasiah என இட்டிருப்பதால் இவர் A.Rasiah என்ற தனது ஆரம்பகாலக் கையொப்பத்திலிருந்து மாறுபடுத்தித் தனது தந்தையாரின் பெயரினையும் இணைத்து Asai Rasiah எனத் தனது பிந்திய படைப் புக்களில் கையொப்பமிடும் வழக்கத்துக்குக் காரணமாய் அமைந்ததுடன் அவரது தந்தையாரின் மறைவுக்குப் பின்னர் அவ ரின் பெயரும் பேசப்படுவதில் ஆத்ம திருப் தியைக் காண்பவராகவும் உள்ளமை குறிப் பிடத்தக்கது.

'கண் பார்த்தால் கை செய்யவேண்டும்' என்ற கருத்துடைய தாயார் செல்லம்மாவின் தையற் கலையாளுமை இவருடைய சிறு பராயத்திலிருந்து ஏற்படுத்திய தாக்கமும் வேறும் பல காண்பியல் அனுபவமும் ஒன்றிணைந்து ஓர் படைப்பாற்றல் கொண்ட கலைஞனாகப் பரிமளித்துக் கொண்டிருப்பது நிசம்.

இவரது சிறுபராய காலங்களில் ஓவியப் படைப்பாக்கம் செய்வதற்கான சரியான வழிகாட்டல்கள் இல்லாதிருந்த போதிலும் இவருக்குள் இருந்த படைப்பாற்றலுக்குரிய பாராட்டுக்கள் கிடைத்துள்ளன. பின்னர் அச்சுவேலியைச் சேர்ந்த சிங்காரம் எனப்படும் இந்தியாவின் சினிமாத்துறையில் சிறிதுகாலம் ஓவியராகச் செயற்பட்டவரிடம் நீர்வர்ணப் பயிற்சியைப் பெற்றுள்ளார். இவரது G.C.E. சாதாரணப் பரீட்சைப் பெறுபேற்றின் பின்னர் அக்காலத்தில் கொழும்பில் மட்டுமே இயங்கிய "நுண்கலைக் கல்லூரியில்" (College of Art & Craft, Colomb-07) பயில்வதற்கான வாய்ப்பு *1996* தொடக்கம் *1969* வரை கிடைத்துள்ளது. இந்த மூன்று வருடக் கற்றலில் எண்ணெய் வர்ணப் பயிற்சி நெறி இல்லாமை ஏற்கனவே எண்ணெய் வர்ண ஓவியப் படைப்பாக்கத்தில் (Oil Painting) தனது திறமையை வளர்த்தெடுக்க ஆவலுடன் இருந்த இவருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்ததாயினும் மனம் தளராமல் கொழும்பு கலாபவனத்தில் (Colombo Art Gallery) காட்சிப்படுத்தப்பட்டிருந்த இலங்கையின் புகழ்பூத்த ஓவியர்களான A.C.G.S.Amarasekara, G.S.Fernando, lankatilake, Stanly, Abayasinhe, David Payneter, J.D.A.Perera போன்றோருடைய படைப்புக்களைப் பார்த்துக் கிரகித்துக் கொண்டு சுய பயிற்சியூடாகத் தனது தனித் துவத்தினை வளர்த்துக் கொண்டுள்ளமை கலை மாணவர்களுக்கு முக்கியமான படிப் பினையெனலாம்.

A.C.G.S.அமரசேகராவின் படைப்புக் களால் உந்தப்பட்ட இவரின் ஆரம்பகாலப் படைப்புக்களாக 'ஏழ்மை', 'வீழ்ந்த சருகுகள்' போன்ற எண்ணெய் வர்ண ஓவியங்கள் அமரசேகராவின் 'தச்சு வேலையாளின்

**ப.பிரசாந்** (B.F.A), **மாணவன்**

குடும்பம்' என்ற ஓவியத்தை நினைவூட்டுவது குறிப்பிடத்தக்கது. 1968ஆம் ஆண்டு Ceylon cold stores தாபனத்தினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை ஓவியப் போட்டியில் இவரது 'தைல வர்ண ஓவியம்' (Oil Painting) தெரிவு செய்யப்பட்டு 1969இல் அவர்களால் வெளியிடப்பட்ட நாட்காட்டியில் பிரசுர மாகியமை குறிப்பிட்ட காலப்பகுதியில் நடை பெற்ற தேர்ச்சியினைக் காணலாம்.

இவற்றைவிட முக்கியமாக Rembrandt, John Constable போன்ற ஐரோப்பியக் கலைஞர் களுடைய ஓவியச் செயற்பாடுகளின் அதிர்வு இவரது பிரதிமை ஓவியம் (Portrait Painting) தரைக்காட்சி ஓவியங்களில் (Land scap Painting) போன்ற படைப்புக்களில் காணக்கூடியதாக உள்ளது. இவரது தரைக் காட்சி ஓவியங்களில் Palatte Knife இன் வேகமான கையாளுகை படைப்பைப் புதிய பரிமாணத்துக்கு இட்டுச் செல்வதைக் காண லாம். யாழ் இந்துக் கல்லூரியின் பழைய அதிபர்கள், தாபகர்களின் பிரதிமைகளை வரைந்தமையூடாக யாழ்ப்பாணத்தில் தன்னை அடையாளப்படுத்திய ஆசை இராசையா அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் வித்தியானந்தன் பீடாதிபதி மகேஸ்வரன் ஆகியோரின் பிரதிமை ஓவியப் படைப்பாளியுமாவார்.

1975 தொடக்கம் 1983 வரையான காலப்பகுதியில் கொழும்பு றோயல் கல்லூ ரியில் ஆசிரியராகக் கடமைபுரிந்துள்ள இவர் இலங்கை முத்திரைப் பணியக (Ceylon Phitetlic becaurou) ஓவியர் குழுவில் ஒருவராகவும் கடமை புரிந்துள்ளார். சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம், சேர். ஜோன் கொத்தலாவல, சேர்.டி.பி.மலலசேகரா, ஜோர்ஜ் ஈ. டீ. சில்வா. இலங்கையின் முதற் புகைவண்டி, தவலம் ஆகிய எட்டு முத்திரைகள் இவரால் வடிவமைக்கப்பட்டுள்ளன.

1980இல் அரச பாடநூல் நிறுவன இந்து சமய நூலுக்கான ரேகை ஓவியங்களையும் வரைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

புகைப்படக் கலையின் மீதான ஆர்வம் காரணமாக புகைப்படக் கலைப் புத்தகங்களின் வாயிலாக புகைப்படக் கருவி நுட்பங்களைக் கற்றுணர்ந்து தற் காலத்தில் உள்ள ஒருசில சிறந்த புகைப்படக் கலைஞர்களில் ஒருவராகவும் விளங்குகிறார். 1993இல் உள்ளூராட்சி திணைக்களத்தினரால் நடாத்தப் பட்ட புகைப்படப் போட்டியில் முதலாம் இடத்தையும் 1994இல் யாழ் றோட்டரிக் கழகத்தினால் நடாத்தப்பட்ட புகைப்படப் போட்டியில் சிறந்த புகைப் படக் கலைஞருக்கான விருதினையும் பெற்றுக் கொண்டமை இதற்குச் சான்று பகர்கின்றன.

36, பண்டாரிக்குளம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் நிரந்தர வதிவிடத்தில் வதியும் இவர், மனைவி ஞானாம்பிகை, மகள் காயத்ரி மற்றும் நண்பர்களின் ஊக்கத்துடனும் ஓவிய உலகில் தளம்பாது பவனிவரும் இவர் 1973-74 காலப்பகுதியில் பலாலி ஆசிரிய கல்லூரியில் பயிலுநராகவும் இருந்துள்ளார். அவ்வமையம் Oil Pastel வர்ண ஊடகத்தில் Thumbing & Scraping முறையில் பரீட்சார்த்தமாக ஆரம்பித்த ஓவிய முறைமை தற்சமயம் தரமான பிரதிமை ஓவியங்களைப் படைக்கக்கூடிய அளவுக்கு தன்னை நிலைநிறுத்தியுள்ளார் என்பது கணிப்புக்குரியது. இலங்கை கலைக்கழக உறுப்பினராகவும், இராமநாதன் நுண்கலைப் பிரிவில் சித்திரமும் வடிவமைப்பும் துறையில் வருகை விரிவுரையாளராகவும் தற்சமயம் கடமையாற்றி வரும் இவர் அங்கு மாணவர்களுக்கு Drawing and Painting, Landscapr, Portrait போன்ற பாடங்களை இலகுவான முறையில் கற்பித்து வருவது சிறப்புக்குரியது.

எம்மை நாமே அடையாளங்கண்டு அதன் இயல்பூக்கத்தினூடான படைப்பாக்கம் செய்யவேண்டும் என்பதே அவரின் கற்பித்தற் செயற்பாட்டின் அடிப்படை நோக்கமாக அமைந்துள்ளது. வாழ்வின் நியதிப்பாட்டினை அறிந்து வாழ்நாள் ஓவியராகச் செயற்படும் ஆசை இராசையாவின் பலாபலன்கள் இம்மண்ணில் உணரப்படும் என்பதில் ஐயமில்லை.

ஓவியர் ஆசை இராசையாவின் கலைப் பயணத்தினூடாக விருதுகள்

1. கலாபூஷணம் விருது 2009
2. ஆளுநர் விருது 2008
3. கலைஞானச்சுடர் விருது 2008
4. கொழும்பு தமிழ்ச்சங்க விருது 2012
5. 'ஓவியக் கலாகீர்த்தி' விருது, ஞானம் சஞ்சிகை 2012

புனைவுக் கட்டுரை (Creative Essay)



# வரகு மான்மியம்

● ஆசி கந்தராஜா


## 2

கென்யாவிலுள்ள யொம்மு கென் யாட்டா விவசாயப் பல்கலைக்கழகத்தி லிருந்து அந்த மின்னஞ்சல் வந்திருந்தது!

உலக வங்கியின் ஆதரவுடன் நடை பெறும் சிறு தானியங்கள் பற்றிய ஆராய்ச்சிக் கருத்தரங்கில் பங்குபற்றி, சிறப்புரையாற்றுமாறு என்னை அழைத் திருந்தார்கள். ஆபிரிக்க கிராமங்களில் வாழும் சுதேசிகளுக்கு இன்றும் சிறு தானியங்களே ஆதார உணவாகப் பயன் படுகின்றன. மழை குன்றி, நீர்த்தேக்கங்கள் படிப்படியாக உவர் செறிவு பெற்று ஆபிரிக்கா உட்பட வளர்முகநாடுகள் அனைத்திலும் பஞ்சம் தலைகாட்டும் இன்றைய சூழலிலே, சிறுதானியங்கள் உற்பத்தி செய்யப்படுவதன் அவசரத் தேவையை உலக வங்கி சரியாகவே கணித் திருந்தது.

கும்பாபிஷேகத்துக்கு வரகு பெற்றுக் கொடுப்பதற்கு, முருகனே இந்த அழைப்பை அனுப்பியதாக என்னுடைய மனைவி மனப்பூர்வமாக நம்பியதுடன் 'வரகு வருகுது...' என கோவில் குருக்களுக்கும் தொலை பேசியில் சொல்லி விட்டாள்.

வரகும் சாமையும் குரக்கனும் நாலாயிரம் வருடங்களுக்கு முன்பு, ஆபிரிக்காவிலிருந்தே இந்தியாவுக்கு கொண்டு வரப் பட்டதாக உசாத்துணை நூல்கள் தெரிவிக்கின்றன. அங்கிருந்தே இவை இலங்கைக்கு வந்ததாம். சிறு தானியங்களின் உற்பத்திக்கு சிறிதளவு நீர் போதுமானது. இதிலும் வரகு, உவர் நிலத்திலும் தரிசு நிலத்திலும் வளரும். கென்யா கிராமங்களில் சுதேசிகளால் காலம் காலமாக வரகு விளைவிக்கப்படுகிறது. வரகும் தினையும் அவர்களின் நித்திய உணவு வகைகள். வரகு வரட்சியைத் தாங்கும் சக்தி கொண்டது. வரகுக்கு பல அடுக்கு தோல்கள் உள்ளதால் பல வருடங்களுக்குச் சேமித்து வைக்கலாம். இதன் காரணமாகத்தான் கோயில் கோபுர கலசங்களில், வரகை சேமித்து வைக்கும் பழக்கம் வந்திருக்க வேண்டும் என ஊகிக்கலாம்.



ஆசி கந்தராஜா

புலம்பெயர் வாழ்க்கையில், அம்மாவும் நானும் மட்டுமே எங்கள் வீட்டில் தமிழ்க் கடைகளில் கிடைக்கும் குத்தரிசியில் ஆக்கிய நெல்லுச் சோறும், குரக்கன் புட்டும், ஒடியல் புட்டும், தனித்தோ கலந்தோ சாப்பிடுவதுண்டு. குத்தரிசி நெல்லுச் சோறு அவியும்போது, ஒருவகை நாத்தமடிப்பதாக மகன் அரவிந்தன் சொல்லுவான். அவன் பல்கலைக் கழகம் சென்ற பின்பு அவனுக்கு Four pack அல்லது Six pack உடம்பு தேவை என்கிற மோகம் ஏற்பட்டது. இதைத்தான் இன்றைய இளம் பெண்கள்

விரும்புவதாக அறிந்தேன். உடற்பயிற்சி நிலையத்தின் அறிவுறுத்தலின்படி நார்ச்சத்தும் புரதச்சத்தும் நிறைந்த குரக்கனும், வரகும், தீட்டாத நெல்லரிசிச் சோறும் இப்போது சாப்பிடத் துவங்கிவிட்டான். இன்றைய இளவல்கள், வீட்டிலுள்ளவர்களை விட வெளியிலுள்ளவர்களின் வார்த்தைகளையே பெரிதும் நம்பிப் பின்பற்றுதல் காலத்தின் கோலமாகும்!

'சிறு தானியங்களின் மேல் ஏன் இந்த திடீர்ப் பாசம்?' என ஒரு நாள் அரவிந்தனைக் கேட்டேன்.

'வரகு, சாமை, குரக்கன் போன்ற சிறு தானியங்களில், புரதமும் நார்ச்சத்தும் மிக மிக அதிகம். அதே வேளை மாச்சத்து மிகவும் குறைவு. நூறு கிராம் சாமையில் 9.3 மில்லி கிராம் இரும்புச் சத்து உண்டு என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். உங்களுக்குத் தெரியுமா அப்பா, குரக்கனில் இருதய நோய்க்கு ஏற்ற 'நிறைவுறாத கொழுப்பு' நிறையவே இருக்கிறது' என கணினியில் தான் அறிந்த தரவுகளை அடுக்கிக் கொண்டே போனான் மகன்.

மகனின் பிரசங்கத்தை குசினி அறையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த என்னுடைய மனைவியால் சிரிப்பை அடக்க முடியவில்லை. 'வரகுக்கும் நீ போற ஜிம்முக்கும் என்னடாப்பு சம்பந்தம்?' எனக்கேட்டாள்.

'அம்மா, நான் ஜிம்முக்குப் போறது உடம்பிலுள்ள கொழுப்பைக் கரைத்து, தசைகளைப் பெலப் படுத்தி, அவற்றைப் பல அடுக்குகளாக மெருகேற்றி, உடம்பை நேர்த்தியாக வைத்துக் கொள்ள. இதற்கு வரகு நல்லதென ஜிம் பயிற்சியாளர் சொன்னார். சும்மா சிரியாதையுங்கோ, உங்கடை மூட்டுவலிக்கும் வரகு சாப்பிட வேண்டுமெண்டு இணையத்திலை இருக்கு' என சீரியஸ்ஸாகவே சொன்னான் மகன்.

கென்யாவில், கென்யாட்டா பல்கலைக் கழகம், யொம்முக் கென்யாட்டா விவசாய தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் என, கென்யாட்டாவின் பெயரில் இரண்டு பல்கலைக் கழகங்கள் உள்ளன. கென்யாட்டா பல்கலைக் கழகம் மிகப் பழமையானது. ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டது. இது ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நைரோபி நகரத்திலே பிரதான வளாகத்தைக் கொண்டுள்ளது. இது மருத்துவம் உட்பட பல பீடங்களையும் உள்ளடக்கிய முழுமையான பல்கலைக்கழகம்.

'யொம்முக் கென்யாட்டா விவசாய தொழில் நுட்பப் பல்கலைக் கழகம்' 1981 ஆம் ஆண்டு யப்பானிய உதவியுடன், நைரோபியிலிருந்து 36 கிலோ மீற்றர் தூரத்தில், நைரோபி-திக்கா நெடுஞ்சாலை அருகே அமைக்கப்பட்டுள்ளது.

கென்யாவின் சுதந்திரத்துக்காகப் போராடியவர் யொம்முக் கென்யாட்டா. இந்தியாவின் மகாத்மா காந்திக்கு ஒப்பானவர். திறமையான பேச்சாளர். இருப்பினும் இவர்மீது, பத்தாம் வகுப்பு படிக்கும்போது எங்கள் பலருக்கு பயங்கர கடுப்பு. சொன்னால் நம்ப மாட்டீர்கள். அன்று தொடக்கம் இன்று வரை நாற்பது வருடங்களுக்கு மேலாக யொம்மு கென்யாட்டா, அடிக்கடி கனவில் வந்து என்னைப் பயமுறுத்துகிறார். இவர் கனவில் வராத வேளைகளிலெல்லாம் எலிசபெத் பெனற் (Elizabeth Bennet) என்னுமொரு கற்பனைப் பாத்திரம் என் கனவில் வரத் தவறுவதில்லை.

சகலருமே கனவு காண்கின்றனர். பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கும் கனவுகள் வருகின்றன. மனநல குறைபாடு உள்ளவர்கள் சிலரைத் தவிர எல்லோருமே கனவு காண்பதாக சில விஞ்ஞான ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. மிருகங்களும் கனவுகள் காண்பதாக கூறப்படுகிறது. எனது கனவு பற்றி எமது குடும்ப வைத்தியரைக்கேட்டேன். கனவுகள் ஆழ்மனப் பாதிப்புக்களின் படிமங்கள் என்ற தகவலுடன் தன் வைத்தியத்தை முடித்துக்கொண்டார்.

என்னுடைய கனவுகள் பற்றி இணையத்தில் ஆராய்ந்து, என் இணைய முகவரிக்கே மின்அஞ்சல் அனுப்பியிருந்தான் மகன் அரவிந்தன். அவன் ஒரு கணினிப் பொறியியலாளன். அண்ட சராசரங்களையும் கணினிக்குள்ளேயே அடக்கி வாழும் அவன் ஒரே வீட்டில் இருக்கும் என்னுடன் தகவல்களைப் பரிமாறுவதும் இணையத்தினூடாகத்தான். எலியோட்டமயமாக மாறியுள்ள புலம்பெயர் வாழ்வுக்கு நாம் செலுத்தும் விலை அது என நான் அமைதியானேன்.

கனவுகள், ஆழ்மனதில் படிந்து கிடக்கும் எண்ணங்களின் வெளிப்பாடுகள் என்றும், இயலாமைகளின் வெளிப்பாடுகள் என்றும், நமது ஆசைகளின் பிரதிபலிப்புகள் என்றும், நமது குணாதிசயத்தைக் கண்டுபிடிக்க உதவும் காரணிகள் என்றும் ஏகப்பட்ட விவாதங்களும் ஆராய்ச்சிகளும் உலக அளவில் பல நூற்றாண்டுகளாக நடந்து

கொண்டே இருப்பதான பல தகவல்களை அவன் அனுப்பி வைத்தான். அதன்பிறகு மகன் அரவிந்தனின் தூண்டுதலினால் என் அடிமனதைத் துழாவும் வேலையிலே சில சமயங்களில் ஈடுபடலானேன்.

இந்தப் பிரச்சினை நான் பத்தாம் வகுப்பில் படித்தபோது நடந்தது. தமிழாசிரியரான எனது தந்தை ஆங்கிலம் படித்தால்தான் பிற்காலத்தில் பிழைக்கலாம் என்ற எண்ணத்தில், கிறீஸ்தவ பாடசாலையொன்றில் என்னைச் சேர்த்து விட்டார். அங்கு அரியபூஷணம் ஆசிரியர் எங்களுக்கு ஆங்கிலம் கற்பித்தார். ஐயாவைப் போல வேட்டி நாஷனல் அணிந்த ஒருவர் ஆங்கிலம் கற்பித்தது எனக்கு ஆச்சரியமாகவும் சந்தோஷமாகவும் இருந்தது. நல்லாசிரியர் என்ற சொல்லுக்கு முற்றிலும் தகுதியானவர். கல்விகற்கும் மாணவர்களின் தரமறிந்து ஆங்கில இலக்கணத்துடன் அவர் பாடங்களை ஆரம்பித்தார்.

எங்களின் காலகஷ்டம் அவர் தனது சொந்த ஊர்ப் பாடசாலைக்கு மாற்றலாகிச் செல்ல, கொழும்பிலுள்ள பிரபல கல்லூரியொன்றிலிருந்து மாற்றலாகி ஒருவர் எங்கள் பாடசாலைக்கு வந்தார். வந்ததும் மொழிகளில் தான் பாண்டித்தியம் பெற்றவராக தம்பட்டமடிதுக் கொண்டார். அந்தக் காலத்தில் அவர், பொக்கற் இல்லாத முழுக்கை 'சென் மைக்கல்' ரெர்லின் சேட்டு அணிந்தே வகுப்புகளுக்கு வருவார். எல்லோரிலும் தான் உயர்ந்தவர் என்று காட்டிக் கொள்வதில் முனைப்பாக இருந்தார். எங்களின் போதாத காலம் அவரே எங்களின் ஆங்கில வகுப்புகளை நடத்தினார். அடிப்படை ஆங்கில இலக்கணத்தையே சரியாகப் புரிந்து கொள்ளாத எம்மில் பலருக்கு அவர் கற்பித்தது pride and prejudice என்ற ஆங்கில நாவல் இலக்கியமும், யொம்முக் கென்யாட்டா நிகழ்த்திய உரைகளும். Pride and prejudice புத்தகத்தை வாசிக்கும் போது அந்த நாவலில் வரும் பெண் கதாபாத்திரமான எலிசபெத் பெனற்றை ஆதியோடு அந்தமாக விவரிப்பதிலேயே எங்கள் பாட நேரம் முடிந்து விடும். அத்துடன் அவர் விட்டாரா...? கென்யாட்டாவின் உரைகளை மனப்பாடம் செய்து வகுப்பில் ஒப்புவிப்பதைக் கட்டாயமாக்கினார். அகில இலங்கை ஆங்கில பேச்சுப் போட்டிக்கு எங்களைத் தயார் செய்வதாக அதற்கு அவர் காரணம் சொல்லிக்கொண்டார்.

இவ்வாறு எத்தனை ஆசிரியர்கள் தங்களின் பெருமைக்கும் அவதிக்கும் மாணவர்களைக் காலாதி காலமாகப் பலி கொடுத்தார்கள், இன்னும் பலி கொடுக்கிறார்கள் என்பது நான் ஆசிரியத் தொழிலுக்கு வந்த பின்புதான் சரியாகப் புரிந்து கொண்டேன். இதேவேளை, நல்லாசிரிய இலக்கணத்துக்கே உதாரணமாக விளங்கிய ஆசிரியர்களும் எங்களுக்குக் கற்பித்திருக்கிறார்கள் என்பதையும் நன்றிப் பெருக்குடன் நினைவு கூருகின்றேன்.

கிராமத்திலிருந்து படிக்கச் சென்ற எனக்கும் அப்போது காதல் வந்தது. அது என் முதல் காதல். எங்கள் வகுப்பில், ஆங்கில மொழியை வீட்டுச் சூழலிலேயே தம் வசப்படுத்திய ஒரு சிலருள் அவளும் ஒருத்தி. அவள் முன்னால் அந்த ஆங்கில ஆசிரியரால் நான் பட்ட அவமானங்கள் கொஞ்ச நஞ்சமில்லை. அந்த அவமானங்கள் தான் இன்றும் என் கனவில் வருகின்றன. இவ்வளவுக்கும் நான் கடை நிலை மாணவனல்ல. பிற்காலத்தில் ஜேர்மனியில் நான் ஆறேமாதத்தில், முன் பின் தெரியாத ஜேர்மன் மொழியைக் கற்று, அந்த மொழியிலேயே டாக்டர் பட்டத்துக்குரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியதுண்டு. அது மட்டுமல்ல, கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக ஜேர்மன் மற்றும் ஆங்கில மொழிகளில் உலக பல்கலைக் கழகமெங்கும் விரிவுரைகள் நிகழ்த்துகிறேன். இதை நான் பெருமைக்காகச் சொல்லவில்லை. 'ஆசிரியர்களே, மாணாக்கரின் தரமறிந்து படிப்பியுங்கள்' என்கிற என் அநுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கே!

விவசாய பல்கலைக்கழக பிரதான மண்டபத்தின் முன் நிறுவியிருந்த, கென்யாட்டாவின் சிலைக்குக் கீழே, பழைய நினைவுகளில் ஆழ்திருந்த என்னை, முதுகில் தட்டி நிகழ்வுலகத்துக்கு கொண்டு வந்தார் ஒருவர். அவர் இந்திய வம்சாவளி கென்யா பிரஜை. யொம்முக் கென்யாட்டா பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரியும் ஒரேயொரு இந்திய வம்சாவளியினர். இவரை நான் பல்கலைக்கழக கன்ரீனிலும் பார்த்திருக்கிறேன். தனியொரு மேசையில் தனியகவே இருப்பார். கன்ரீனுக்கு நான் கென்யப் பேராசிரியர்களுடன் சாப்பிடச் சென்ற போதெல்லாம், மரியாதையின் நிமித்தம் அவரைப் பார்த்துப் புன்னகைத்த போதும் பதிலுக்கு புன்னகைக்காத அவர், இப்போது தாமாகவே முன்வந்து வணக்கம்

## - வீக்கேயெம் -

# ஆட்டுக்குட்டியும் நானும்...

வள்ளிபுனத்து
செஞ்சோலைக் காப்பகத்தை
விமானக் குண்டுகள்
தாக்கிய தருணங்களில்
உடையார்கட்டில்
பங்கரே தஞ்சமென
தாமிருந்த வேளை அது...

பேக்கரிப் போறணையொத்த
வெப்பத்தின் வேக்காட்டில்
பங்கருக்குள்ளேயே
பதுங்கியிருக்கவியலாத
பன்னிருவர் நாம்
காற்றோட்டம் நாடி
காத்திருப்போம் வாசலிலே!

'ஷெல்' குத்தும் சத்தம் கேட்கும்
மறுகணமே
பங்கருக்குள் போயொளியும்
பக்குவம் கைவந்த காலமது...

நேசமாய் நான் வளர்த்த
ஆட்டுக்குட்டிக்குப் பாலூட்ட
தாய்மடிக்குக்
கொண்டுபோக எத்தனித்து
குட்டியைத் தேடிப்
புறப்பட்டவேளை
ஷெல் குத்தும் ஒலிகேட்டு
வாசலில் இருந்தவர்கள்
பங்கரைச் சரணடைந்தார்.

நான் மட்டும் குட்டியைத்தேடி
நெடுத்தூரம் போனதனால்
வாசலண்டை போகுமுன்னே
ஷெல்லொன்று விழுந்து
சிதறிற்று!

மறுபடியும்
ஷெல்மாரி பொழியுமுன்னே
குட்டியுடன் நானும்
பங்கருக்கள் புகவெண்ணி
தேடித் திரிகையிலே
அங்குமிங்குமாய் அலமந்த
என் செல்லக்குட்டி
கிடைத்த பூரிப்பில்
அள்ளியெடுத்தென்
மார்போடணைத்து
பங்கரின் சிறுவாயூடு
புகமுயன்ற மறுகணமே...

காது கிழிபட,
செவிப்பறையதிர,
வந்தவோர் ஆட்டிலறியில்
வலது காலையிழந்து
நான் துடித்த வேளையிலும் –
குட்டி மிரண்டு
பங்கருக்குள் வீழ்ந்ததில்
அது தப்பிற்றென்ற
மகிழ்வில் நெகிழ்ந்து
நானும் அதனுள்ளே தலைகுப்புற
வீழ்ந்த கணப்பொழுதில்
என் தலையும் தப்பிற்றென்ற
புளகாங்கிதத்தில்
ஆறுதலடைந்தது
என் மனசும்தான்!

*அடிக்குறிப்பு:*
என்தம்பி மகன் ரவிசங்கரின்
அனுபவப் பகிர்வு இது!

போர்க்காலச் சூழலில் நின்ற
ஒரு சிறுவனின் மனப்பாங்கு... கவிதையாக...!

சொல்லியதற்கு ஏதோ காரணம் இருக்கலாம் என்பதை ஊகித்துக் கொண்டேன்.

'வாருங்கள் அந்த வாங்கில் அமர்ந்து கொள்வோம்' என என்னை அழைத்தார்.

'கன்ரீனில் உங்களுடன் நான் பேசாததற்கு காரணமுண்டு. குறை நினைக்காதீர்கள். கென்யாவிலுள்ள இந்தியர்களின் நிலைமை அப்படித்தான்' என்றார் அவர்.

'இதைக் கொஞ்சம் விபரமாகச் சொல்லுங்களேன், அறிய ஆசை என்றேன்.

'கென்யாவிலுள்ள, பன்னாட்டு நிறுவனங்களிலும் உலக வங்கி, FAO, UNO போன்ற உலக ஸ்தாபனங்களிலும் இந்திய உப கண்டத்தை சேர்ந்தவர்கள், ஒப்பந்த அடிப்படையில் உயர் பதவியிலுள்ளார்கள். இவர்கள் நிரந்தரப் பிரசைகளல்லர்.'

'கென்யப் பிரசைகளாக வாழும் இந்தியர்கள் எத்தனைபேர்?'

'ஒரு இலட்சத்துக்கு சற்றே அதிகமானவர்கள்என்பது ஒருகணக்கு. இவர்களின்வருகை *1896* க்கும் *1901*ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் அமைக்கப்பட்ட, உகண்டா புகையிரதப் பாதையுடன் ஆரம்பமாகிறது. அப்பொழுது *32,000* இந்தியர்கள் 'பிரிட்டிஸ் இந்தியாவிலிருந்து' பிரித்தானியர்களால் கொண்டு வரப்பட்டார்கள். அடர்ந்த ஆபிரிக்க காடுகளினூடாக புகையிரதப் பாதை அமைக்கும் மிகக் கடினமான பணியில் கிட்டத்தட்ட *2500* பேர் இறந்ததாகச் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு மைல் தூர பாதை அமைப்புக்கும், நால்வர் இறந்ததாகவும் இவர்களில் பலர் மனிதர்களை உண்ணும் சாவோ (Tsavo) என்னும் ஆதிவாசிகளால் கொல்லப்பட்டதாகவும், ரயில் பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்ட என்னுடைய தாத்தா சொல்லியதாக அம்மா சொன்னார்.'

'இத்தகைய வேலைகளுக்காக, மலாயா இலங்கை போன்ற அண்டை நாடுகளுக்கும் தென் இந்தியாவிலிருந்து ஆள்களை அழைத்துச் சென்றதாக நான் அறிந்திருக்கிறேன். கென்யாவுக்கு வந்தவர்கள் இந்தியாவின் எந்த மாநிலத்தவர்கள்?'

'...குஜராத் மற்றும் பஞ்சாப் மாநிலத்தவர்கள். இவர்கள் ரயில் பாதை அமைக்கும் வேலை நிறைவடைந்ததும், கரையோர நகரங்களிலிருந்து இடம்பெயர்ந்து நைரோபியின் நியூரவுனில் (New town of Nairobi) குடும்பத்துடன் குடியேறினார்கள். இந்த நகரமே *1905*ம் ஆண்டுவரை பிரித்தானிய காப்பரசின் (British protectorate) தலைநகரமாக விளங்கிற்று. இங்கு இந்தியர்களை வாழ அனுமதித்த வெள்ளையர்கள் கறுப்பர்களை அனுமதிக்கவில்லை. இந்தப் பாரபட்சமே இந்தியர்கள்மீது சுதேசிகளுக்கு ஏற்பட்ட துவேஷத்தின் வித்தாக அமையலாயிற்று.'

சிறிது நேரம் மொனமாக இருந்தவர் ஒரு சிகரெற்றைப் பற்றவைத்துப் புகைத்தவாறு தொடர்ந்தார்.

'ஆயிரத்து தொழாயிரத்து இருபதுகளிலே, இந்தியர்கள் கென்ய கொலனியில் அரசியலில் ஆதிக்கம் செலுத்த முற்பட்டார்கள். கென்யாவில் முதலாவது புதினப் பத்திரிகையைத் துவங்கிய ஏ. எம். ஜீவான்ஜீ இதில் முன்னிலை வகித்தார். அவர் துவங்கிய பத்திரிகைதான் இன்றும் கென்யாவில் 'The Standard' என்னும் பெயருடன் வெளிவருகிறது. அவருடன் என்னுடைய தகப்பனார் அரசியலில் ஈடுபட்டது மட்டுமல்லாமல், அவருடைய பத்திரிகையிலும் பணிபுரிந்தார். இந்தியர்கள் அந்த தசாப்தத்திலே வணிகத்தில் ஈடுபட்டு, கென்ய சுதேசிகளைவிட பொருளாதாரத்தில் மிகவும் பலம் பொருந்தியவர்களாக வளர்ச்சி அடைந்ததினால் வெள்ளையர்களின் காப்பரசுடன் பேரம் பேசக்கூடிய நிலையிலிருந்தார்கள்.'

'தங்களுடன் சரிக்குச் சமமாக மற்றவர்கள் பேரம்பேசுவதைபிரித்தானிய வெள்ளையர்கள் விரும்பியிருக்க மாட்டார்களே?'

'சரியாகச் சொன்னீர்கள், அதுதான் நடந்தது. சட்ட மேலவையில் (Legislative council) இந்தியர்களுக்காக ஒதுக்கப்பட்ட இரண்டு ஆசனங்கள் இதனால் மறுக்கப்பட்டது. இந்தியர்களின் எண்ணிக்கைக்கு இந்த இரண்டு ஆசனங்களே மிகக் குறைவானது. அதையும் பிரித்தானியர்கள் அடாவடியாகப் பறிக்கவே, இந்திய சமூகத்திலிருந்து பாரிய எதிர்ப்புக் கிளம்பப் பதட்ட நிலை உருவாகியது. அந்தக் காலத்தில்தான் இந்தியர்களால் ஒழுங்குபடுத்தி நடத்தப்பட்ட ஒரு கூட்டத்தில் வெள்ளையன் ஒருவனால் என்னுடைய தாத்தா சுட்டுக் கொல்லப்பட்டார்.'

அவர் சிறிது நேரம் மௌனமானார். தன்னுடைய தாத்தாவையும் ரயில் பாதை அமைக்கும் பணியில் அவர் அநுபவித்திருக்கக் கூடிய கஷ்டங்களையும் அவர் நினைத்துப் பார்த்திருக்கக்கூடும்.

'*1927*ம் ஆண்டு நடந்த சட்ட மேலவைத் தெரிவிலே ஐரோப்பியர்களுக்கு கிடைத்த பதினொரு ஆசனங்களுக்கு நிகராக, இந்தியர்கள் ஐந்து ஆசனங்களைப்

பெற்றுக்கொள்ளவே வெள்ளையர்கள் சற்றே அடங்கிவிட்டார்கள். என்னுடைய தந்தையும் சட்ட மேலவையில் ஓர் இடத்தைப் பெற்றிருந்தார்.''

'சட்ட மேலவையில் கென்ய சுதேசிகளும் இடம்பெற்றிருந்தார்களா?

ஏனோ தெரியவில்லை, அவர் என்னை ஊடறுத்துப் பார்த்தார். பின்னர் மெதுவாகத் தொடர்ந்தார்.

'வெள்ளையர்களும் இந்தியர்களும் வெகு தந்திரமாக, கறுப்பர்களுக்கு சட்ட மேலவையில் பிரதிநிதித்துவம் வராமல் பார்த்துக் கொண்டார்கள்...!' அவர் இதை எனக்குச் சொன்ன பாணி இதையோர் சாதனை போலக் கருதுவதாகத் தோன்றியது. அத்துடன் சட்ட மேலவையின் மெம்பராக இருந்த ஒருவரின் மகன், சுதேசி கென்யர்களைக் குறிப்பிடும் பொழுதெல்லாம், வெகு தெளிவாகவே 'கறுப்பர்கள்' என்று அழுத்திச் சொன்னதிலிருந்து இந்தியர்களின் இன்றைய நிலைக்கான மூல காரணத்தை எளிதாக ஊகித்துக் கொண்டேன்.

'இரண்டாம் உலக மகாயுத்தத்துக்குப் பின் ஐம்பதாம் ஆண்டுகளில், இந்தியர்கள் அரச உயர் பதவிகள் அனைத்தையும் வெகு இலகுவாக ஆக்கிரமித்துக் கொண்டார்கள். அவர்களுடைய வியாபார அறிவும் தந்திரமும் கென்யாவினதும் கிழக்கு ஆபிரிக்காவினதும் பொருளாதார வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் பெரிதும் கைகொடுத்தன. இந்த நிலையில் தான் தங்களின் நிர்வாகத்தை இலகுவாக்க, பிரிதானியர்கள் சுதேசிகளுக்கு எதிராக இந்தியர்களுக்கு முக்கியத்துவம் கொடுத் தார்கள்.'

'**1963**இல் கென்யா சுதந்திரம் அடைந்த பின்னர் இந்தியர்களுடைய நிலையில் எத்தகைய மாற்றம் ஏற்பட்டது?'

'சுதந்திரத்துக்குப்பின் கென்யாவில் வாழ்ந்த இந்தியர்களுக்கும் ஐரோப்பியர் களுக்கும் கென்யா நாட்டின் பிரஜாஉரிமை பெற்றுக் கொள்வதற்கு இரண்டு ஆண்டுகள் அவகாசம் கொடுக்கப்பட்டது. கென்யா சுதந்திரம் பெற்றபோது ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் இந்தியர்களும் நாற்பத்து இரண்டாயிரம் ஐரோப்பியர்களும் கென்யாவில் வாழ்ந்தார்கள். இவர்களுள் இருபதினாயிரம் பேர் மட்டுமே குறித்த காலத்துக்குள் கென்ய பிரஜா உரிமை கோரி விண்ணப்பித்தார்கள். இது கென்ய சுதேசிகளுக்கு இந்தியர்கள்மீதும் ஐரோப்பி யர்கள்மீதும் அவநம்பிக்கையையும் சந்தேகத் தையும் ஏற்படுத்தியது. நாட்டுக்கு விசுவாசம் இல்லாமல், தங்களுடைய மண்ணின் வளத்தைச் சுரண்டுவதிலேயே இந்தியர்கள் குறியாக இருப்பதாக வெளிப்படையாகவே கறுப்பர்கள் பேசத் துவங்கினார்கள்'

'அவர்கள் சொன்னதில் தப்பேதும் இருக்கிறதா...?' என் கேள்விக்குப் பதில் அளிப்பதைச் சாமர்த்தியமாகத் தவிர்த்தார்.

'கென்ய பிரஜா உரிமை பெறாதவர்கள், அரச சிவில் சேவையிலிருந்து நீக்கப் பட்டார்கள். இதைத்தொடர்ந்து பலர் பிரித்தானிய கடவுச் சீட்டுப் பெற்றுக் கொண்டு பிரித்தானியாவில் குடியேறவே, எஞ்சியவர்கள் சுதேசி அரசினால் மறைமுகமாகப் புறக்கணிக்கப் பட்டார்கள்.'

'மற்றவர்கள் ஏன் பிரித்தானியாவுக்குச் செல்லவில்லை?'

'வணிக நிறுவனங்களை நடத்திய வர்களாலும், பெரும் சொத்துகள் வைத்திருந்த வர்களாலும் உடனடியாக அவற்றை விற்றுக் கொள்ள முடியவில்லை. அவர்கள் இங்கேயே தங்கிவிட நேர்ந்தது. இன்றும் கென்யாவின் பெரிய நகரங்களிலுள்ள கடைகள் இந்தியர்களுடையதே. அவர்கள் உள்ளே இருப்பார்கள். வெளியே வாடிக்கை யாளர்களுடன் தொடர்பு கொள்ளவென கறுப்பர்களை வைத்திருப்பார்கள்' என்றவரின் கைத்தொலைபேசி சிணுங்கவே உரையாடல் துண்டிக்கப்பட்டது.

இன்றும் கென்யாவில் வாழும் இந்திய வம்சாவளியினர் பண பலம் உள்ளவர்களாகவும் கென்ய பொருளா தாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர்களாகவும் இருப்பதை நான் நேரடியாகவே அவதானித்துள்ளேன். Park land போன்ற பகுதிகளில் பாரிய வீடுகளில் அவர்கள் வாழ்கிறார்கள். இதை இந்தியக் கிராமம் என தாம் அழைப்பதாக எனக்கு உதவுவதற்கென பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்ட மாணவன் சொன்னான். அந்தத் தொகுதியில் இருநூறு பாரிய வீடுகள் இருக்கும். வீடுகள் அனைத்தையும் உள்ளடக்கி உயரமான சுற்று மதில் கட்டி முன்னே பாரிய இரும்புக் கேற்று போட்டிருந்தார்கள். அதனருகே இரண்டு சுதேசிகள் காவலுக்கு நின்றார்கள். என்னுடன் வந்த மாணவனையும் அழைத்துக் கொண்டு கேற்றினூடாக உள்ளே செல்ல முயன்றேன். என்னை அனுமதித்த காவல்காரன் சுதேசி

மாணவனை அனுமதிக்க மறுத்து விட்டான். இவ்வளவுக்கும் அவன் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டத்துக்கு ஆராய்ச்சி செய்பவன். மிகவும் கௌரவமான உடையணிந்து வந்திருந்தான். 'எங்களைப் பிரச்சனைக்குள் மாட்டிவிடவேண்டாம்' என்று சொல்லி இறுதிவரை மாணவனை அவர்கள் உள்ளே அனுமதிக்கவில்லை. மிகவும் சங்கடத்தில் ஆழ்ந்த என்னைச் சமாதானப்படுத்த 'இது இங்கு சகஜமானதுதான் சேர். எனது வாழ்நாளில் ஒரு முறையேனும் இந்தியக் குடியிருப்புக்குள் சென்றது கிடையாது' என்று சிரித்துச் சமாளித்தான்.

மகள் தொலைபேசியில் அழைத்ததாக சொல்லிக்கொண்டு இந்திய வம்சாவளி விரிவுரையாளர் வந்தார்.

'கன்ரீனில் என்னுடன் பேசாததற்கு, இந்தியர்களின் நிலைமை இதுதான்... என காரணம் சொன்னீர்களே' என்று அவர் தொடங்கிய இடத்துக்கே அவரைக் கொண்டுவர முயன்றேன்.

'இன்றைய நிலைமையில் கென்ய அரச சேவையில் இந்தியர்கள் யாரும் இல்லை. பல்கலைக் கழகங்களில் மிக அரிதாக ஓரிருவர் இருக்கக்கூடும். எனது 'புள்ளியியல்' அறிவு இவர்களுக்கு தேவை என்ற படியால் கடந்த பத்து வருடங்களாக ஒவ்வொரு வருட ஒப்பந்தத்தில் என்னை வைத்திருக்கிறார்கள். பதவி உயர்வோ, மேலதிக கொடுப்பனவுகளோ இல்லாத நிலையில் மாற்றாந்தாய் மனப்பான்மையிலேயே நான் இங்கு நடத்தப்படுகிறேன். இந்தநிலையில் உங்களுடன் பேசி உங்களையும் இந்தியர்களுள் ஒருவனாக அவர்கள் நடத்துவதை நான் விரும்பவில்லை' என்று வருத்தத்துடன் சொன்னார்.

'உங்கள் பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்?' என்று நிலைமையைச் சுமுகமாக்கும் முயற்சியில் கேட்டேன்.

'மகள் மருத்துவர். மகன் வழக்கறிஞர். அவர்கள் இந்தியர்கள் வாழும் பகுதியில் தொழில் நடத்துகிறார்கள். இங்குள்ள இந்தியர்களின் பிள்ளைகள் தாங்களாகத் தொழில் செய்யக்கூடிய தொழில் கல்வியையே கற்கிறார்கள். இன்னும் பலர் இந்தியர்களின் நிறுவனங்களில் பணிபுரிகிறார்கள்' என்றார் சுருக்கமாக.

'கென்ய அரசுக்கு சவாலாக குட்டி இந்திய அரசு என்று சொல்லுங்களேன்' என்று நான் சொல்லிச் சிரிக்க, 'அப்படித்தான் கென்யர்கள் நினைக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்களேன் ' என்று அவரும் சிரித்தவாறு விடைபெற்றார்.

சிறு தானியங்களின் கருத்தரங்கும் மாநாடும் துவங்கியது. உலகெங்கும் சேகரிக்கப்பட்ட அனைத்து வகையான சிறு தானியங்களையும், அவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட உணவு வகைகளையும் காட்சிக்கு வைத்திருந்தார்கள்.

நடு நாயகமாக வைக்கப்பட்ட வரகுக் கதிர்களையும் அதனருகே குவித்திருந்த வரகையும் கண்ட எனக்கு பரமானந்தம். உடனே எனது ஐபாட் அலைபேசியில் அதைப் படமெடுத்து மின்னஞ்சல் மூலம் மனைவிக்கு அனுப்பினேன்.

'மகன் அரவிந்தன் தனக்கும் வரகு வேணுமாம். அவனுக்கும் சேர்த்து, உண்டணக் கொண்டு வாருங்கோ' எனப் பதில் அனுப்பியிருந்தாள் மனைவி.

இறுதி நாளன்று மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்களிடம் வரகு பற்றிச் சொன்னேன். 'உங்களுக்கு இல்லாதா? உங்களுக்கு சிரமமில்லாமல் நாங்களே வரகை விமான நிலையத்துக்கு பொதியாகக் கட்டிக் கொண்டுவருகிறோம்' என்றார்கள்.

அடுத்த நாள் வரகுக்காக விமான நிலையத்தில் காத்திருந்தேன். பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் இரண்டு ஊழியர்கள் எனது பெயர் விலாசம் எழுதப்பட்ட வரகு மூட்டையை என்முன் வைத்தபடி, 'இது உங்களுக்கு' என சுவகியிலி மொழியுடன் சில ஆங்கில வாரத்தைகளைக் கலந்து சொன்னார்கள். பொதியை நிறுத்துப் பார்த்தேன். சாக்குடன் பத்தொன்பது கிலோ. விமானப் பயணத்திலே என்னுடன் எடுத்துச் செல்வதற்கு இருபது கிலோ பொதியே அனுமதிக்கப்பட்டிருந்தது. என் உடைகள் மற்றும் புத்தகங்களே அனுமதிக்கப்பட்ட எடைக்குச் சரியாக இருந்தது. சிட்னிவரை வரகைக் கொண்டு போக மேலதிக கட்டணம் **1890** டொலர்கள் என்றார்கள்.

என்ன செய்வது...? மூட்டையைப் பிரித்துக் கட்டுவதற்கும் நிறையைக் குறைப்பதற்கும், வரகைக் கொண்டு வந்தவர்களுடன் பேசிச் செய்வதற்கு மொழிச்சிக்கல். அடிக்கடி மனைவி வேறு என் ஞாபகத்துக்கு வந்து பயமுறுத்தினாள். பறப்புக்கும் நேரமாகி விட்டது. வேறு வழியில்லை.

கிறடிற் காட்டில் பணத்தைச் செலுத்துமாறு மனைவி தயங்காமல் குறுஞ்செய்தி அனுப்பியிருந்தாள். எல்லாச்

செலவுகளிலும் இறுக்கிப் பிடிக்கும் என்னுடைய மனைவி, வரகு கோயிலுக்கு என்றவுடன் வெகுவாகவே தாராளம் காட்டி யிருக்கிறாள்.

'சுண்டங்காய் கால் பணம் சுமை கூலி முக்காப் பணம்' என்கிற யாழ்ப்பாணத் தமிழர் வழக்கிலுள்ள பழமொழி எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. இது மனதை உறுத்தவும், நான் எப்பொழுது பறப்புத் துவங்கும் என அந்தரப்பட்டேன்.

ஒருவாறு பறப்புத் துவங்கிற்று.

'வரகுக்கு இங்கிலிசிலை என்ன பெயரெண்டு ஐயர் கேட்டவர்!' என்று மனைவி கேட்பதுபோல என் காதில் ஒலித்தது.

'tuif Kodo Millet, Indian Paspalum என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள். லத்தீன் மொழியில் அதனுடைய விஞ்ஞானப் பெயர் Paspalum Scrobiculatum' என்று கோயில் குருக்களுக்கு ஆங்கில வகுப் பெடுக்க என்னைத் தயார்படுத்திக் கொண்ட திருப்தியுடன் கண்களை மூடித் தூக்கத்தை வாலயப்படுத்த முனைந்தேன்.

அவுஸ்திரேலியாக் கண்டத்தி லுள்ள கோயிலொன்றின் கலசத் திலே, ஆசியாக் கண்டத்தின் யாழ்ப்பாண வாசியான என் மனைவியின் உபயமாக, ஆபிரிக்காக் கண்டத்தின் கென்யா நாட்டிலே விளைந்த வரகு, பன்னிரண்டு ஆண்டுகள் வாழப்போகின்ற ஒரு மரபின் தொடர்ச்சியை ஊடறுத்து,

வரகரிசியும், நெல்லரிசிப் பச்சை யும், வெல்லமும் கலந்து ஒரு சக்கரைப் பொங்கல் செய்து, கைதடியிலே பெரியைய்யா வெள்ளாமை செய்த காலத்தின் மீள் உயிர்ப்புப் பெறும் ஒரு நாளினைச் சிட்னியில் உருவாக்கும் கனவுகளிலே, டொலர் இழப்பின் கனதி சற்று இலேசாக, வீடு நோக்கிய என் பறப்புத் தொடர்ந்தது.

# வேலி

அன்புடீன்

மண்ணை அகழ அகழ
புலப்படும் பூர்வீகம்
எலும்புகள்... சிலைகள்... இலச்சினைகள்..

இறந்த காலங்களுக்காக
நிகழ்கால நிழலை மிதிக்கலாமா?
இதிகாசங்கள் இல்லாமல் இல்லை யாரும்
முதுசொங்களுக்காக
விளையும் பயிருக்கு
இடுவது சரியில்லை முற்றுப்புள்ளி

இயற்கை சொந்தம் இறைவனுக்கு
ஆழிப் பேரலையின் ஆக்கிரமிப்பு
ஊழியில் தோன்றியது புதுஉலகம்
புதையில் பூர்வீகம்
அதற்காக
கார் காலத்தின் விளைச்சலுக்கு
தாலி கட்டுவதை விடுத்து
வேலி கட்டுவது விழல்

மனிதம் புரியாத மனிதர்களுக்க
எதற்கு வெறுப்பும் பழுப்பும்
முகம் மறைக்கும் முக்காடல்ல தேசியம்
தேசம் தழுவிய வானம் அஃது

யாரங்கே விரிப்பது வானத்துக்கு குடை?
குடையை மடி! மழையை இரசி!

(ஒலுவில் ஆலிம்சேனைப் பகுதியில் இராணுவ வேலி இடப்பட்டதன் ஞாபகம் இக்கவிதை)

# மங்கை ஒரு வேங்கையாக...

கலாபூஷணம் வீ.என். சந்திரகாந்தி

என்னுடைய வாழ்கையில் நான் விட்ட மகா தவறை நிவர்த்தி செய்வதற்கு உசிதமான பாதைகள் எல்லாம் அடைபட்ட நிலையில் இன்று ஒரு நீண்ட பாதுகாப்பற்ற பயணத்தை மேற்கொள்வதற்காக என்றுமே கால் பதித்திராத இந்த இறங்குதுறைக்கு வந்து சேர்ந்திருக்கின்றேன்.

தபால் கந்தோர் வீதியால் உட்துறைமுக வீதியை வந்தடையும் சந்தியில் பிரதேச செயலகத்திற்கு எதிராக திருக்கோணமலை இறங்குதுறை மிகுந்த பொலீஸ் பாதுகாப்புக்கு மத்தியில் அமைந்துள்ளது.

'பத்தொன்பது வயது குமரிக்கு இந்த ஆட்டம் தேவைதானோ' என்று சக அலுவலர்களும் உயர்அதிகாரிகளும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் விமர்சிப் பதற்கு ஏதுவாக நான் விட்ட தவறுகள் இரண்டு. ஒன்று மலரவனை மனதார காதலன் என்றும் எதிர்காலக் கணவன் என்றும் நம்பி அவன் என்மீது பாலியல் உறவு பூண வாய்ப்பு அளித்தது! இரண்டாவது அந்நிகழ்வை பகிரங்கப்படுத்தியது.

என்மீது தீராக்காதலும் அழகில் மயக்க மும் பழக்கத்தில் பாசமும் கொண்டவன் என்று நான் திடமாக நம்பியிருந்த மலரவன் அவனைப் பொறுத்தவரையில் சுவர்களுக்கு மத்தியில் நடந்து முடிந்துவிட்ட அந்த நிகழ்வை வெளிச்சத்திற்கு கொண்டுவந்ததை எனது வக்கிரமான பாலுணர்வு வெளிப்பாடு என்று கொச்சைப்படுத்தினான்!

நான் அதிர்ந்து விட்டேன்.!

அவன்என்னைத்தனது காதலியாக மட்டும் பார்க்கமால் தனது மனைவி என்று உறுதி பூண்டிருந்தால் மட்டுமே என்மேல் உரிமை பூண்டிருக்க முடியும் ! நான் எனது காதலன் என்று மட்டும் நேசிக்காமல் கணவன் என்று திடமாக நம்பியதன் வெளிப்பாடே எனது கள்ளம் கபட மற்ற நடத்தையும் பேச்சும்!

அவன் என்னை காதலியாக மட்டுமே பார்த்தான் என்பதை சந்தர்ப்பங்கள் எனக்கு நன்கு உணர்த்தி விட்டன.

தொலைபேசியில் சமாதானம் செய்யப் பலதடவைகள் முயன்றேன். என் சார்பில் பலர் அவனை வழிக்குக் கொண்டுவர முயன்றனர்.

கிழமைகள் மாதங்களாயின. மாதங்கள் வருடங்களாயின

என்மேலான மலரவனின் காதல் மொட் டாகவே கருகிவிட்டது

நல்ல குடும்பத்தில் பிறந்து இரண்டு சகோதரிகளுக்கு அக்காவாக இருக்கும் நான் இந்த ஒரு சந்தர்ப்பத்தின் பின்னர் எப்படி மலரவனை மறந்து மற்றொருவனை கை பிடிப்பேன்?

எனது அலுவலக நண்பி ஒருத்தி பெண்களைப் பகடைக்காய்களாகப் பயன் படுத்தும் மலரவன் போன்ற துரோகிகளுக்கு பாடம் புகட்டக்கூடியதும் எனது வாழ்வுக்கு தீர்வு கிட்டக்கூடியதுமான ஆலோசனை ஒன்றை வழங்கினாள்

எனது சம்பூர் பயணத்திற்கு அதுவே வித்திட்டது!

உடன் பிறந்த ஆண் சகோதரர்கள் இல்லாத எனக்கு அவள் காட்டிய வழி மெத்தச் சரி எனப்பட்டது!

நான் சம்பூரை அடையும் வரையில் தாண்ட வேண்டிய கஸ்டங்கள் சோதனைகள் பற்றியும் அங்கு யாரிடம் முறைப்பாடுகள் கொடுக்கவேண்டும் அவர்களது நடவடிக் கைகள் எப்படிப்பட்டன எவ்வாறு அமை யும் என்பது பற்றியும் எனக்கு நண்பி விலா வாரியாக எடுத்தியம்பியிருந்தாள்.

மூதூருக்கான முதலாவது ' லோஞ்சும் ' ஏழுமணிக்கெல்லாம் புறப்பட ஆயத்தமானது.

' ஜெற்றி பொலீஸாரின் ' சந்தேகமான பார்வையுடனான கேள்விகளுக்கு முகம் கொடுத்து 'லோஞ்சில்' ஏறி ஆசனம் ஒன்றில் அமர்ந்துகொண்டேன்.

' நோனா எங்கு போகிறீர்கள்? '

'கட்டைப்பறிச்சான்'

'ஏன் அங்கு போகிறீர்கள் ?'

' உறவினர்களை பார்க்க'

சம்பூர் போவதாக கூறக்கூடாது என்று நண்பி புகட்டியிருந்தது உதவியாக இருந்தது.

போராளிகளின் வட்டச்செயலகம் சம்பூர் வைத்தியசாலையில் பெரும் பலத்துடன் இயங்கிக்கொண்டிருந்தது!



'லோஞ்சில்' பிரயாணம் செய்வது எனக்குப் புதிய அனுபவமாக இருந்தது. கடலில் பயணித்தபடியே கடற்காற்றைச் சுவாசிப்பது மகிழ்ச்சியைத் தந்தது. சிலருக்கு தலைச்சுற்று ஏற்பட்டது. பாதாள மலைப்பகுதியில் வந்ததும் பிரயாணிகள் மத்தியில் ' கசமுசா' பேச்சு எழும்பியது. நூற்றுக்கணக்கான பயணிகளை ' லோஞ்சுடன் ' சமாதி செய்த இடம் என்பது தான் மக்களின் ஆரவாரத்திற்கு காரணம். நல்ல வேளை , ஒரு சிறிய காற்றுக் கூட பலத்துடன் வீசவில்லை , ' லோஞ்சில் ' பயணிகளின் எண்ணிக்கையும் அளவுடன் இருந்தது. ஓட்டிமார் மது அருந்தக்கூடாது என்பது தம்பிமாரின் கட்டளை.

மூதூரில் இறங்குதுறைக்கு காலை 8.00 மணிக்கு முன்னர் வரக்கூடியதாக இருந்தது. கடற்பயணம் பற்றித்தான் எனக்கு மிகுந்த பயம் இருந்தது. இப்போ அந்தத் தொல்லை விட்டது என்று ஆறுதலடைந்தேன். ஆனால் உண்மையான சோதனைகள் அதன் பின்னரே ஆரம்பமாகியது.

மூதூர் நகரின் எல்லைப்புறம் பாலை நகர். சுமார் முக்கால் மைல் தொலைவு.

சில ஆசிரியர்களுடன் சேர்ந்து ' ஆட்டோ' ஒன்றை வாடகைக்கு அமர்த்தி பயணித் தோம்.

மூதூருக்கான இராணுவ கட்டளைச் செயலகம்பாலைநகரிலேயே அமைந்திருந்தது. முக்கியமான ஒரு சோதனைச் சாவடி

'ஆட்டோவில்' பயணித்த போது எதுவும் பேசாது அமைதியாக இருந்த ஆசிரியைகள் இறங்கியதும் எனக்குப் பலமான எச்சரிக்கைகளை வழங்கினார்கள்.

அவர்கள் எதிர்பார்தபடியே நான் அங்கு தடுக்கப்பட்டேன். ஆசிரியைகள் எனக்காக சிறிது நேரம் தாமதித்து பின்னர் ஆட்டோவில் ஏறிச் சென்றுவிட்டார்கள்.

எனது இதயம் திக் திக் என்று அடிப்பது எனது செவிகளுக்குக் கேட்டது. மலரவனின் என்மேலான அன்பும் பாலியலுறவும் ஓரங் கட்டலும் எனது கண்களில் நீரை வர வழைத்தன.

இராணுவ அதிகாரி ஒருவன் நான் பயந்து அழுவதாக எண்ணி என்னைப் போகும் படி சைகை செய்தான்.

இராணுவத்தினர் சில சமயங்களில் சிறு குழந்தைகள் மேலும் பெண்கள் மீதும் பரிதாபம் காட்டுவார்கள் என கேள்விப் பட்டிருக்கின்றேன். மலரவன் போன்ற எங்க ளவர்களைக் காட்டிலும் அவர்கள் மேலா னவர்கள் என எனது மனம் எண்ணியது.

பாலை நகரில் இருந்து சம்பூர் நான்கு மைல் தொலைவு இருக்கலாம் .தனி ஆட்டோ பிடிப்பதென்றால் மிகுந்த செலவு. யாராவது ஆண்கள் துவிச்சக்கர வண்டியில் சென்றால் உதவிக்கரம் நீட்டுவார்கள். வண்டில்களில் பயணிக்ககூடிய சந்தர்ப்பமும் கிடைக்கலாம்.

நான் மக்களுடன் சேர்ந்து நடந்தே சென்றேன். வெயில் தகித்தது. சம்பூருக்கு இன்னும் எவ்வளவு நேரம் என அவர்களைக் கேட்டால் ஒரு கூப்பிடு தூரம் என்பார்கள். இரண்டு மைல் தூரம் நடந்த பின் இப்போ எவ்வளவு தூரம் என்று கேட்டால் ஒரு கல்லெறிதூரம் என்பார்கள். அதன் பின் நீண்ட நேரம் நடந்தபின்பே சம்பூரை அடைந்தோம். நடைப்பயணத்தை எண்ணி ஏங்கிவிடாமல் இருக்க மக்கள் ஒருவருக்கு ஒருவர் அப்படிக் கூறிக்கொள்வதாகப் பின்னர் அறிந்தேன்.

உச்சி வெயிலில் ஒரு பெண்ணாக நான்கு மைல் தொலைவு பசியுடனும் தாகத்துடனும் நடந்ததை எனது வாழ்நாளில் மறக்கமுடியாது. ஆண்கள் சிறிதேனும் சிந்திப்பார்களா என்று நினைத்த போது எனக்காக மட்டுமன்றி அனைத்து பெண் சமூகத்திற்காகவும் கண்ணீர் சிந்தினேன்.

சம்பூர் வைத்தியசாலையில் போராளி களின் வட்டச்செயலகம் இருந்தது. அருகில் இருந்த சம்பூர் மகாவித்தியாலயத்தில் மக்களுக்கும் அலுவலகர்களுக்குமான பயிற்சி களும் கூட்டங்களும் நடைபெற்றன.

களைத்து விழுந்து அலுவலகம் சென்ற என்னை ஒரு இளைஞன் ஆசனத்தில் அமர்த்தி

மோர் வழங்கினான். பசிக்களை ஆறியது. உடனேயே பொறுப்பான அலுவலரையும் சந்திக்க கூடியதாக இருந்தது.

என்னைப் பற்றிய விபரம் முறைப்பாடு பற்றியெல்லாம் விரிவாகக் கேட்டுத் தெரிந்து கொண்ட பின் அவர் அமைதியாகப் பேசினார்.

' நீங்கள் எங்களை நம்பி இங்கு வந்ததற்காக எமது தலைவர் சார்பில் உங்களுக்கு நன்றி கூறுகின்றோம். இயன்ற வரை முயற்சி செய்து உங்களுக்கு உதவுவது எங்கள் கடமை. உங்கள் பிரச்சனை ஒரு பெண்ணுக்கு நேர்ந்த அநீதியாக தெரிவதால் இது பற்றிய விசாரணையை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் காவ்யாவே செய்யவேண்டும். அவர் இன்று கைமுந்தன் ஆறு ' சென்றியை ' பரீட்சிக்க சென்றுள்ளதால் உங்கள் விசாரணையை நாளையே செய்ய முடியும்.

அவர் அப்படி கூறிமுடிக்கவும் நான் ஓவென்று கதறி அழுதுவிட்டேன்.

எனது அநாதரவான தன்மையை நான் அச்சமயம் உணர்ந்ததால் ஏற்பட்ட விழைவு அது.

அதனை உணர்ந்த அந்த அலுவலர்.

' நீங்கள் கவலைப்படவேண்டியதில்லை உங்களை ஒரு குடும்பத்துடன் தங்க வைப்பதற்கும் உங்களுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கும் நாங்கள் இருக்கின்றோம்.'

அன்று நான் ஒரு குடும்பத்துடன் தங்கினேன். தாய் தந்தை இரு பெண் பிள்ளைகள். அன்புடன் உபசரித்தார்கள். பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் இளைஞர்களுக்கு இருக்கும் திறமை பற்றிப் புகழ்ந்தார்கள். வர்ணம் என்பவர் படைப் பிரிவிற்கு பொறுப்பாக இருப்பதாகவும் ஓவியன் என்பவர் விசாரணைக்கு பொறுப்பாக இருப்பதாகவும் காவ்யா பெண்கள் சார்ந்த விசாரணைக்கு ஒத்தாசை புரிவதாகவும் கூறினார்கள்.

எனக்கு நம்பிக்கை பிறந்தது. அமைதியாகத் தூங்கினேன்.

மறுநாள் எனக்கான விசாரணை நடைபெற்றது. ஓவியன் பற்றி அறிந்திருந்தேன். இப்போது நேரில் பார்க்கின்றேன். அருகில் ஒரு பெண் அமர்ந்திருந்தாள். அவளே காவ்யா என்பதை பின்பு தெரிந்து கொண்டேன்.

ஓவியன் அன்புடன் பேசினார். நகரில் நிலவரங்கள் பற்றி விசாரித்தார். பின்னர் எனது முறைப்பாடு பற்றி தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறும்படி கேட்டார்.

நான் கண்ணீருக்கு மத்தியில் நடந்த சம்பவங்களை விபரித்தேன்.

பின்னர் அவரே பேசினார். 'ஆண்கள் பற்றி அந்தக்காலம் முதல் பெண்கள் சார்பில் முறைப்பாடுகள் இருந்து கொண்டேயிருக்கின்றன. நீங்கள் ஏன் திருந்துவதாக இல்லை?'

நான் தலையைக் குனிந்துகொண்டேன்.

யாரும் அற்ற அந்த நேரத்தில் மலரவன் எப்படி என்னைத் தனது வீட்டுக்கு அழைத்து பாலியலுறவுக்கு உட்படுத்தினார் என்பதை நான் விபரிக்கையில் அவர் ஒருகட்டத்தில் திடீரென காதுகளை இரு கரங்களாலும் பொத்திக்கொண்டார்.

பின்னர், 'இதற்கு மேல் உங்களை காவ்யா விசாரணை செய்வார்' என்று கூறி எழுந்து சென்று விட்டார். அதுவரையில் ஒரு புன்சிரிப்புடன் அமர்ந்திருந்து நான் கூறுபவைகளை செவிகொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்த காவ்யாவின் முகம் இப்போ இறுக்கமடைவதைப் பார்க்க எனக்கு பயமாக இருந்தது.

தனது ஆசனத்தை மாற்றிக்கொண்ட அவர் என்னை உற்றுப்பார்த்தபடி கூறினார்.

'ஒரு பெண்ணாக இருந்து கொண்டு கூறுகின்றேன். உம்மை மலரவன் கட்டாயப்படுத்தி வீட்டுக்கு அழைத்த தாகவும் உமது சம்மதம் இன்றி பாலியலுறவு பூண்டதாகவும் நீர் கூறுவது பொய். இதற்கெல்லாம் சரியான பின்னணி இல்லாமல் இப்படி நடந்திருக்கமுடியாது. நீர் உண்மையான சம்பவங்களை விபரிக்காத இடத்து உமது வழக்கை என்னால் எடுக்க முடியாது."

நான் நடுநடுங்கி விட்டேன். உண்மை அனைத்தையும் அவர் முன்போட்டு உடைத்தேன்.

' மலரவன் என்னைக் காதலித்தார். நானும் ஒருகட்டத்தில் அவரை விரும்பினேன். தொலைபேசியில் அடிக்கடி பேசுவது. சந்தர்ப்பம் கிடைத்தால் பொது இடங்களில் நேரில் கதைப்பது என்றுதான் நீண்டகாலம் எங்கள் காதல் இருந்தது. அன்றைய தினம் அவரது பெற்றோர் ஊர் சென்றுவிட்டதால் அவர் தொலைபேசியில் என்னை வீடு வரும்படி வற்புறுத்தினார். நான் மறுத்தேன். அவர் விடவில்லை. தன்னை உண்மையாக நேசிப்பவளாக இருந்தால் கட்டாயம் வரவேண்டும் என்றும் வராது போனால் என்மேலான காதலையே தான் துறந்துவிடப்போவதாகவும் உறுதிபடக் கூறினான்.

காவ்யா இடைநிறுத்திகேட்டாள். 'அதனால் நீர் போனீரா?' நான் 'ஆம்' என்று தலையாட்டினேன்.

காவ்யா இப்போ அதட்டினார். அதனை என்னால் நம்பமுடியாது. உமது பாலியல்

பலவீனமே உம்மை அங்கு அனுப்பிவைத்தது. அல்லது மலரவன் உம்மை மணப்பதை உறுதி செய்து , அவரை மாப்பிள்ளையாக அடைய திட்டமிட்டீர். அதனாலேயே நீர் தனித்து யாருடைய துணைகூட இல்லாமல் அங்கு சென்றீர்'

என்னை சாட்டை கொண்டு யாரோ அடிப்பது போல் துவண்டேன் கண்ணீர் கரைபுரண்டு ஓடியது. மேசையில் கைகளை மடித்து தலையை கவிழ்த்துக் கொண்டு விம்மி விம்மி அழுதேன்.

அறையில் சிறிது நேர நிசப்தம். காவ்யா தனது ஆசனத்தில் இருந்து என்னருகே எழுந்து வருவதை உணர்ந்தேன். எனது முதுகைத் தடவி தேற்றினார்.

' நான் உம்மை தப்பாக எண்ணவில்லை. நீர் நல்ல பிள்ளைதான். ஆனால் நீர் ஏதோ ஒரு உண்மையை மறைக்கிறீர். அது ஒரு வேளை விசாரணைகளுக்குக் குந்தகமாக அமையலாம் என்பதால் தான் கோபம் கொண்டேன். நீர் படித்த பெண். தொழில் பார்ப்பவள். தற்கால நிலவரங்களை ஊடகங்கள் வாயிலாக அறிந்திருப்பீர். நீராகச் சென்று வலையில் விழுந்திருக்க மாட்டீர். நீர் உண்மையைக் கூற விரும்பாவிட்டால் பரவாயில்லை.'

நான் மேசையில் இருந்து தலையை நிமிர்த்தினேன். முகத்தை அழுத்தி துடைத்த பின் கூறினேன்.

'நீங்கள்சொல்வதைநான்ஏற்கின்றேன். நான் தொழில் புரியும் அலுவலகத்திலேயே எனக்கு ஒரு பகையாளி இருந்தாள். என்னுடன் போட்டி போடுவது. என்னைப்பற்றிய குறைபாடுகளை மலரவனுக்கு தொலை பேசியில் உடனுக்குடன் அறிவிப்பது இவைதான் அவளது அலுவலகக் கடமை என எண்ணினாள் போலும். என்னை விட சற்று அதிக நிறமான அவள் மலரவனை என்னிடமிருந்து மீட்டு தான் விவாகம் புரியப் போவதாகச் சிலரிடம் சவால் விட்டமையை நான் அறிந்திருந்தேன். இதனால் நான் மனச் சஞ்சலம் அடைந்திருந்தேன். அதனால்தான் என்னால் மலரவனின் வேண்டுகோளை மறுக்கமுடியவில்லை.

காவ்யாவின் முகத்திலும் இப்போ சோக ரேகைகள்படர்ந்தன. பெண்களேபெண்களுக்கு பகை என்பதை நினைத்து அவளே வருந்தினாள் போலும். அவள் வினாவினாள்.

'பின்னர் வீட்டில் நடந்தது என்ன?'

சில நிமிட மௌனத்தின் பின் கூறினேன்.

நானும் ஒரு சாதாரண பெண். 'ரீன் ஏச்' வயதில் உள்ளவள் என்பதை நான் அவனுக்கு பணிந்து சென்ற சந்தர்ப்பங்களே எனக்கு உணர்த்தின. அவனே எனது கணவன் என்று உறுதியாக நம்பி இருந்த எனக்கு அந் நேரம் அவன் கூறிய உறுதி மொழிகள் ஒன்றல்ல இரண்டல்ல. ஆனால் பல பெண்கள் போல நானும் சோரம் போய்விட்டேன் என்பதை நினைத்து நினைத்து அழுதேன்.

என்னை அனுபவித்து விட்டதான திருப்தி அவனுக்கு பெரும் மனமகிழ்ச்சியைக் கொடுத்தது. என்மேலான தீராத ஆசையை தணித்துவிட்டது. நாட்கள் வாரங்களாகி மாதங்களாகி கழிந்து போயின. எனது வேண்டுகோளையும் என் சார்பில் பேசச் சென்றவர்களின் வாதங்களையும் அவன் உதாசீனம் செய்தான்.'

காவ்யாவின் கண்கள் கூட பனித்தன. எனக்கு ஆறுதல் கூறி தேற்றினாள். பல உறுதிமொழிகளை வழங்கினாள்.

'நீங்கள் போகலாம். நாங்கள் இப் பிரச்சனையை ஆராய சில வாரங்கள் கூட ஆகலாம். அதன் பின்னர் உங்களுக்கு விசார ணைக்கான திகதியை அறிவிப்போம். அப்போ வந்தால் போதும்.

நான் அன்றைய தினமும் சம்பூரிலேயே தங்க நேரிட்டது. எனது முறைப்பாடு பற்றி தெரிந்து கொண்ட அக்குடும்பத்தினர் அடுத்து நடக்கப் போவது பற்றி அறியத்தந்தார்கள்.

ஓவியனின் தலைமையில் காவ்யா உட்பட முக்கிய பிரமுகர்கள் எனது பிரச்சனை பற்றி கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வர். பின்னர் அவர்களது புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் மூலம் மலரவன் பற்றியும் என்னைப் பற்றியும் தகவல்கள் திரட்டப்படும். அதன் பின்னர் விசாரணைக்கான திகதி அறிவிக்கப்படும்.

நான் மறுநாள் அதிகாலை எழுந்து பயணம் புறப்பட்டு நகரை அடைந்தேன்.

நான் சம்பூர் சென்று புகார் கொடுத்தது அரசல்புரசலாகபலருக்கும்தெரியவந்திருந்தது. எனது பகையாளி பெண் பயந்து ஒதுங்கி விட்டாள். மலரவனுக்கு என்மேல் பெரும் கோபம் ஏற்பட்டிருப்பதாக அறிந்தேன்.

இரு வாரங்களில் விசாரணைக்கான திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. எனது 'லோஞ் சிலேயே' அவனும் பயணம் செய்தாலும் என்னுடன் பேசவில்லை. மூதூர் இறங்கு துறையில் தானாகவே வந்து என்னுடன் பேசினான். தனது பெற்றோருக்கு இந்த விவாகத்தில சம்மதம் இல்லை என்றும் மற்றும்படி தனது பிழை எதுவும் இல்லை என்றும் கூறினான்.

மூதூர் இறங்குதுறையிலிருந்து சம்பூருக்கு எப்படி போகவேண்டும் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை. அதனால் அச்சமயம் அவனுக்கு எனது உதவி தேவைப்பட்டது. நானும் விடவில்லை. நான் அனுபவித்த துன்பம் அவனும் அனுபவிப்பதுதானே கணவன் மனைவிக்கு அழகு என்ற எண்ணத்தில்

பாலை நகரிலிருந்து கட்டைப்பறிச்சான் பாலம் சூனியப்பிரதேசத்தினூடாக நான்கு மைல்கள் நடத்தியே கூட்டிச் சென்றேன்.

இந்த அனுசரிப்பையும் ஒத்துழைப்பையும் வாழ்க்கையிலும் தொடர மலரவன் சம்மதித்தால்? என்று நினைத்தபோது எனது மெய் சிலிர்த்தது!

நாங்கள் சம்பூர் வட்ட செயலகத்துக்கு சென்றதுமே விசாரணைக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

மலரவனே முதலில் விசாரிக்கப்பட்டார். ஓவியன் விசாரணைக்கு தலைமை தாங்கினார். காவ்யாவும் இருந்தாள். பல தடவைகள் ஓவியன் அதட்டிப் பேசுவது கேட்டது.

சிறிது நேரத்தில் நானும் அழைக்கப் பட்டேன். ஓவியன் கூறினார்.

'நீங்கள் இருவரும் சிறு பிள்ளைகள் அல்ல. நீங்கள் நடந்து கொண்ட விதம் பாரதூர மானது! அதற்கு அம்மா அப்பாவோ வேறு எவருமோ வகை கூறமுடியாது. நீங்கள் கணவன் மனைவியாக இணைவதையே இந்த செயலகம் எதிர்பார்க்கிறது. உங்கள் பெற்றோரின் சம்மதத்தை பெறுவதற்கு இரு வார கால அவகாசம் தருகிறோம். நீங்கள் நல்ல முடிவுடன் அடுத்த தவணைக்கு வரவேண்டும்'

மறுதவணையும் வந்தது. இருவரும் ஒருமித்து பயணம் செய்தோம். மலரவன் தனது தந்தை ஒரு இதய நோயாளி என்பதற்கான மருத்துவ சான்றிதழ்களை கையளித்ததுடன் அவரது விருப்பத்துக்கு மாறாக தான் நடந்தால் அவருக்கு ஏதாவது விபரீதம் ஏற்படலாம் என்றும் வாதிட்டார்.

ஓவியனுக்கு பெரும் கோபம் ஏற்பட்டது

அவர்களது பாட்டாளிபுரம் தளத்தில் (பங்கர்) மலரவனை தடுத்து வைத்து வேலை வாங்கும்படியும் அவரது சம்மதத்தைத் பெறாது அவரை விடுதலை செய்ய வேண்டாம் என்றும் கட்டளையிட்டார்.

நான் திரும்பிவிட்டேன்.

இரு நாட்கள் மலரவன் அத் தளத்தில் தங்கியிருந்து தனது பிடிவாதத்தை சாதிக்கப் பார்த்தார். இளைஞர்கள் இறங்கிப் போக வில்லை. மூன்றாவது நாள், தான் விசாரணை முடிவை ஏற்பதாக ஒப்பமிட்டு நகர் திரும்பினார்.

எப்படியாவது எனக்கு ஒரு தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கை எனக்குள் மெல்ல முகிழந்தது.

இரு வாரங்களின் பின்னர் மீண்டும் அழைப்பாணை வந்தது. மலரவன் என்னுடன் பிரயாணம் செய்யவில்லை.

வட்ட செயலகத்தை நான் அடைந்த போது காவ்யா என்னை எதிர்கொண்டு வரவேற்று அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றாள். சிரித்து சிரித்து பேசினாள்.

பாட்டாளிபுரம் தளத்தில் மலரவன் பட்ட பாடுகளை சொல்லிச் சொல்லி சிரித்தாள்.

எப்படியும் மலரவன் நல்ல முடிவுடன் வருவான் என்று உறுதி செய்தாள். நேரம் சென்று கொண்டே இருந்தது. கடைசி 'லோஞ்சி'ல் வந்து சேர வேண்டியவர்களே வந்து விட்டார்கள். மலரவன் வரவில்லை.

காவ்யாவால் கோபத்தை அடக்க முடியவில்லை நகரில் உள்ள புலனாய்வு துறையினருடன் மொபைல் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள்.

அவர்கள் தாம் விசாரணைக்கு சமூகமளிக்க வேண்டிய திகதி பற்றி அவனுக்கு நேரில் அறிவித்து விட்டதாகவும் வராததற்கான காரணத்தை தாம் சில நிமிடங் களில் பெற்றுத்தருவதாகவும் அறிவித்தார்கள்.

சில நிமிட நேரத்தில் அவர்களது தொலைபேசி அழைப்பு வந்தது. காவ்யா பேசுவது மட்டும் எனது செவிகளில் நாராசமாக இறங்கியது. என்ன? பொலிஸ் படையில் சேர்ந்து விட்டானா? கட்டுக்குருந்த பொலிஸ் பயிற்சி நிலையத்தில் ஆறுமாத பயிற்சியா? ஏற்கனவே கொழும்பு சென்றுவிட்டானா?'

காவ்யாவின் கைகள் நடுங்கின. தொலை பேசியை 'ஆப்' செய்தாள். மேசையில் வீசினாள்.

' நோ நோ அவனை விடமுடியாது. என்ன விலைகொடுத்தாலும் பரவாயில்லை. ஒரு தமிழ் பெண்ணுக்கு துரோகம் செய்து விட்டு தப்பப் பார்க்கிறானா? அவனை மண்டையில் போடாமல் விடமாட்டேன். 'என்று கூறி மேசையில் அறைந்தவள் தனது ஆசனத்தை உதறி எறிந்துவிட்டு இறங்கி ஆத்திரத்துடனும் அவமானத்துடனும் வேக மாக நடந்தாள்.

நான் ..

'காவ்யா அக்கா'

'என்று உரத்து அழைத்தேன்'


எனது குரல் கேட்டு தனது வேகமான நடையை தளர்த்தி திரும்பிப் பார்த்தாள்.

எனது குரலின் உச்சஸ்தாயில் நான் கூவினேன்.

'அக்கா' இனி நான் ஒரு நிமிடம் கூட அவனுக்கு மனைவி இல்லை. இந்த நிமிடம் முதல் நான் ஒரு போராளி. இப்படியான வக்கிரபுத்தி உடைய ஆண்கள் அத்தனை பேருக்கும் எதிரான போராளி!'

காவ்யாவின் மெய் சிலிர்த்திருக்க வேண்டும். ஒரு கண நேர தாமதம்தான். என்னை நோக்கி ஓடோடி வந்தாள். ஆனந்தக் கண்ணீர் பொங்க என்னை இறுக அணைத்து தோளுக்கு மேலாக இருகைகளையும் நீட்டி எனது முதுகை பெருமையுடன் தட்டிக் கொடுத்தாள்!

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



**பேராசிரியர் துரை மனோகரன்**

## அயல்நாட்டில் ஓர் அழகிய கருத்தரங்கம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இலங்கைத் தமிழ் அறிஞரும் தனிநாயகம் அடிகளாரதும், தமிழ்நாட்டின் முதலமைச்சராக விளங்கிய அறிஞர் அண்ணாத்துரை அவர்களதும் முயற்சிகளினால் உருவாகியது. பல ஆண்டுகளாகப் பல அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியும், பலகருத்தரங்குகளை நடத்தியும், பல ஆய்வு நூல்களை வெளியிட்டும், பல முனைவர் (கலாநிதி) பட்டதாரிகளை உருவாக்கியும் வந்துள்ளது. தமிழக அரசின் அனுசரணையுடன் புதிய சில பணிகளை மேற்கொண்டுள்ளது. இவ்வாண்டில் திருக்குறள், பாரதியார் கவிதைகள், பாரதிதாசன் கவிதைகள் ஆகியவற்றை அரபு மொழியிலும், சீனமொழியிலும் மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து பிற பழந்தமிழ் நூல்களையும், பிறமொழிகளில் மொழிபெயர்க்கும் பணியில் இந்நிறுவனம் ஈடுபடவுள்ளது.

இந்த நிறுவனம் 2013 பெப்ரவரி 14, 15 ஆம் திகதிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிறந்தநாளை முன்னிட்டும் சர்வதேசரீதியான கருத்தரங்கு ஒன்றினை நடத்தியது. தேசியக் கருத்தரங்கம் எனப் பெயரிட்டிருந்தாலும், உண்மையில் அது பன்னாட்டுக் கருத்தரங்கமாகவே அமைந்திருந்தது. ‘அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்’ பற்றிய கருத்தரங்கமாக அது திகழ்ந்தது.

இக்கருத்தரங்கத்தில் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா உட்படப் பல நாடுகளைச் சேர்ந்தோரும் கலந்துகொண்டனர். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களும் பலர் கலந்துகொண்டனர். இக்கருத்தரங்கத்திற்கு 68 பேரின் கட்டுரைகள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தன. இவர்களுள் 20 பேர் இலங்கையர்கள். இவர்களுள் 12 பேர் நேரடியாகக் கருத்தரங்கத்தில் கலந்துகொண்டனர். இலங்கைப் பல்கலைக்கழகங்கள் சார்பில் பேராசிரியர்கள் துரை.மனோகரன், செ.யோகராசா, அம்மன்கிளி முருகதாஸ் மற்றும் ரூபி வலன்ரீனா பிரான்சிஸ், எஸ்.வை.ஸ்ரீதர் ஆகியோரும், ஊடகவியலாளர்கள் சார்பில் கலாபூஷணம் தி.ஞானசேகரனும் கலந்துகொண்டனர். உயர்பட்ட ஆய்வாளர்கள் சார்பில் ஞா.பாலச்சந்திரன், சு.குணேஸ்வரன், த.அஜந்தகுமார், கலாவல்லி பத்மநாபன், யாழ் தர்மினி பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். கல்வி நிர்வாகத்துறை சார்பில் எம்.ஐ.எம்.ஹனிபா கலந்துகொண்டார். இவர்கள் ஆய்வு அமர்வுகளில் தத்தம் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

கருத்தரங்கின் தொடக்கவிழாவுக்குப் பேராசிரியர் தெய்வசுந்தரம் தலைமை வகித்தார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் முனவர் கோ.விசயராகவன் வரவேற்புரை நிகழ்த்தினார். பேராசிரியர்கள் துரை.மனோகரன் (இலங்கை), அருள்செல்வன் ராஜு (மலேசியா) ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். துரை.மனோகரன் தமது வாழ்த்துரையில் இலங்கையின் இலக்கிய வளர்ச்சி பற்றியும், இலங்கையின் சிறந்த வானொலி அறிவிப்பாளர், சிறந்த இலக்கியவாதிகள் பற்றியும் குறிப்பிட்டதோடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பணிகளையும் விதந்து பேசினார்.

தமிழ்நாடு அரசின் தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனவர் மூ.இராசாராம் சிறப்புரை ஆற்றினார். அருள் அவர்களும் உரையாற்றினார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அயல்நாட்டுத் தமிழர் புலத்தின் இணைப் பேராசிரியரும் கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்களுள் ஒருவருமான முனவர் ம.வளர்மதி நன்றியுரை வழங்கினார்.

ஆய்வு அமர்வுகளில் இலங்கைக்குப் போதிய கௌரவம் வழங்கப்பட்டது. பேராசிரியர்கள் துரை.மனோகரன், செ.யோகராசா, அம்மன்கிளி முருகதாஸ், கலாபூஷணம் தி.ஞானசேகரன், புலவர் சிவநாதன் ஆகியோர் வெவ்வேறு அமர்வுகளுக்குத் தலைமை வகித்தனர். தமது

தலைமைப் பணிகளை இவர்கள் சிறப்பாகச் செய்தனர்.

இலங்கைக் கட்டுரையாளர்களைப் பொறுத்தவரையில் பேராசிரியர் துரை.மனோகரன் 'பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சி' என்ற தலைப்பிலும், பேராசிரியர் செ.யோகராசா 'நவீன தமிழ் இலக்கியத்திற்கு இலங்கையின் பங்களிப்பு' என்னும் தலைப்பிலும், பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ் 'சுவாமி விபுலானந்தரின் தமிழியல் ஆய்வுகள் (1892 - 1947)' என்ற தலைப்பிலும் கட்டுரைகள் சமர்ப்பித்தனர். ரூபி வலன்ரீனா பிரான்சிஸ் 'இலங்கையில் கி.பி 18 ஆம் நூற்றாண்டுவரை எழுந்த பள்ளு இலக்கியங்கள் குறித்த சிறப்பு ஆய்வு' என்னும் தலைப்பிலும், எஸ்.வை.ஸ்ரீதர் 'ஈழத்தில் மலையக நாவல் இலக்கியத்தின் பங்களிப்பு' என்ற தலைப்பிலும் உரையாற்றினர். கலாபூஷணம் தி.ஞானசேகரன் 'நவீன தமிழ் இலக்கியத்தில் புதிய வகைப்பாடு (ஈழத்துப்) போர் இலக்கியம்' என்னும் தலைப்பிலும் ஞா.பாலச்சந்திரன் 'ஈழத்தில் தமிழ் அகராதி முயற்சிகள் (1939 வரை)' என்ற தலைப்பிலும், எம்.ஐ.எம்.ஹனிபா 'இலங்கைத் தமிழ் நாட்டார் பாடல்களில் கவிகள் அறிமுகமும் தனித்துவமும்' என்னும் தலைப்பிலும், சு.குணேஸ்வரன் 'அண்மைக்கால இலங்கைப் படைப்புகளில் எஸ்.ஏ.உதயனின் நாவல்கள் - ஓர் ஆய்வு' என்ற தலைப்பிலும், த.அஜந்தகுமார் 'இலங்கைத் தமிழ் நாவல் வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு' என்னும் தலைப்பிலும் கட்டுரைகள் சமர்ப்பித்தனர். யாழ் தர்மினி பத்மநாதன் 'ஈழத்து அரங்க எழுச்சியில் 'பொங்குதமிழ்' நாடக அரங்கு என்ற தலைப்பிலும், கலாவல்லி பத்மநாபன் 'மலையகத் தமிழ் நாவல்களில் இலங்கை வாழ் இந்திய வம்சாவழித் தமிழர்களின் சமூகப் பிரச்சினைகளும் வெளிப்பாட்டு முறைமைகளும்' என்னும் தலைப்பிலும் கட்டுரைகள் வாசித்தனர். இலங்கைக் கட்டுரையாளர்களின் கட்டுரைகள் பலரின் பாராட்டுகளைப் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்து வருகை தந்த ஆய்வாளர்கள் தத்தமது நாட்டு இலக்கியங்கள், இலக்கிய வளர்ச்சி பற்றிக் கட்டுரைகள் சமர்ப்பித்துப் பேசினர். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களில் டாக்டர்.என்.முருகையன், முனைவர் இராமசாமி வெங்கடேசன், முனைவர் ம.நாகராஜன், முனைவர் ந.அறிவுராஜ், சி.கோபியா, டாக்டர்.எம்.ஏ.பாகீரதி, முனைவர் க.சேக்மீரன், முனைவர் இரத்தின புகழேந்தி, ஏ.மேனகா, முனைவர் க.முருகேசன், ஊ.கன்னியப்பன், முனைவர் இல.செ.திருமலை, போன்றோரும் இலங்கை தொடர்பாகக் கட்டுரைகள் சமர்ப்பித்துப் பேசினர். இவர்களில் சிலரின் கட்டுரைகள் சிறப்பாக இருந்தன. சிலரது கட்டுரைகள் இலங்கை பற்றிய போதிய தெளிவின்மையைப் புலப்படுத்தின. ஒரு பெண் ஆய்வாளர் பாடிப் பாடியே நிழ்ச்சியைச் சமாளித்தார்.

இக்கருத்தரங்கத்தில் வாசிக்கப்பட்டவற்றுள் ஏறத்தாழ ஒன்பது கட்டுரைகள் மலேசியத் தமிழ் இலக்கியம் தொடர்பானவை. ஏறத்தாழ ஆறு கட்டுரைகள் சிங்கப்பூர் தமிழ் இலக்கியம் சம்பந்தப்பட்டவை. இவை தவிர, சீனத் தமிழ் இலக்கியம் தொடர்பாக 2 கட்டுரைகளும், அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், நெதர்லாந்து, சயாம் தொடர்பாக ஒவ்வொரு கட்டுரையும் ஆய்வு அமர்வுகளில் சமர்ப்பிக்கப்பட்டன.

நிறைவுவிழாவுக்கு முனைவர் கோ.விசயராகவன் தலைமை வகித்தார். வரவேற்புரையை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அயல்நாட்டுத் தமிழர் புலத்தின் இணைப் பேராசிரியரும், கருத்தரங்க ஒருங்கிணைப்பாளருமான முனைவர் கு.சிதம்பரம் நிகழ்த்தினார். பேராசிரியர்கள் செ.யோகராசா (இலங்கை), சு.குமரன் (மலேசியா) ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர். செ.யோகராசா இலங்கையின் ஆய்வு முயற்சிகள் பற்றியும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பங்களிப்புகள் பற்றியும் விதந்து குறிப்பிட்டார். நிறைவுப் பேருரையைப் பேராசிரியர் பொற்கோ நிகழ்த்தினார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தோற்றம் வளர்ச்சி எதிர்காலம் பற்றி விளக்கமாக அவர் எடுத்துரைத்தார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அயல்நாட்டுத் தமிழர் புலத்தின் இணைப் பேராசிரியரும், கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களுள் ஒருவருமான முனைவர் து.ஜானகி நன்றியுரை வழங்கினார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்திய அயல் நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் தொடர்பான கருத்தரங்கம் சிறப்பான முறையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டமை ஒரு மகிழ்ச்சியான அனுபவமாக அமைந்தது. பொதுவாக, இலங்கை ஆய்வாளர்களின் கட்டுரைகளைச் சிலாகித்துப் பேசினர். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களதும், மலேசியா, சிங்கப்பூர் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களதும் பெரும்பாலான கட்டுரைகள் சிறப்பாக அமைந்தன. கருத்தரங்கத்தில் இரு ஆய்வுக்கட்டுரைத் தொகுதிகள் வெளியிடப்பட்டன. கருத்தரங்கத்தில்

முடிந்த அளவு இலங்கைக்குச்சிறந்த கௌரவம் வழங்கப்பட்டது. இலங்கை பற்றியும், இலங்கையின் இலக்கிய வளர்ச்சி பற்றியும் கருத்தரங்கத்தில் விதந்து பேசப்பட்டது.

இலங்கையிலிருந்து கரத்தரங்கத்திற்கு வருகை தந்தவர்களை இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் நிருபர் பேட்டி கண்டமை குறிப்பிடத்தக்கது. இருபத்தைந்து வயது இளைஞரான அவர், எம்மைப் பேட்டி கண்ட முறை சுவாரசியமாக இருந்தது. இவ்வளவு இளம் வயதில் இத்தனை திறமையா என்று எம்மை ஆச்சரியப்பட வைத்தது.

கருத்தரங்கில் கலந்துகொண்டவர்கள் எம்மைஅன்போடுவரவேற்று அளவளாவினர். இலங்கைத் தமிழ் இலக்கியங்கள், இலங்கை ஆய்வாளர்கள், இலங்கைத் தமிழரின் இடையறாத முயற்சிகள், சாதனைகள் பற்றி உயர்ந்த அபிப்பிராயம் அவர்களிடத்து உண்டு. அதேவேளை, இலங்கைத் தமிழரின் இன்னல்கள் பற்றிய கவலையும் அவர்களிடத்துக் காணப்பட்டது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த அதன் இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் மற்றும் முனைவர் கு.சிதம்பரம், முனைவர் மு.வளர்மதி ஆகியோர் எம்மைச் சிறப்பாக வரவேற்று உபசரித்து, வேண்டிய உதவிகளை வழங்கினர். அந்த நன்றியை என்றும் மறக்கமுடியாது. இவ்வாறானதொரு கருத்தரங்கைக் குறுகிய கால அவகாசத்தில் நடத்தி முடித்த அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

அனுபவக் குறைவு காரணமாகச் சில குறைகள் இருந்தபோதிலும், கருத்தரங்கம் சிறப்பாக இடம்பெற்றது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இன்னமும் பழைய கட்டிடத்திலேயே இயங்கிவருகிறது. அதற்குச் சகல வசதிகளுடன் கூடிய புதிய ஒரு கட்டிடம் தேவை என்பதை துரை.மனோகரன் தமது வாழ்த்துரையில் வற்புறுத்தினார். விரைவில் அதற்கான புதிய கட்டிடம் உருவாக இருக்கிறது என்ற நல்ல செய்தியைத் தமிழக அரசின் தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள், செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ.இராசாராம் கருத்தரங்கத்தில் தெரிவித்தார். அந்தச் செய்தி மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. மறக்கமுடியாத சென்னை அனுபவங்களைச் சுமந்துகொண்டு, நாம் மீண்டும் இலங்கை மண்ணில் காலடி பதித்தோம்.

# "காணவில்லை"

மீளக் குடியேற நாம்
மினைக்கடாமற் சென்றபோது
எம் வீட்டைக் காணவில்லை;
வேலியையும் காணவில்லை.

முற்றத்தில் நின்ற
மாமரத்தைக் காணவில்லை;
மூலையில் நின்ற
பலாமரத்தைக் காணவில்லை.

ஆசையாய் வளர்த்த
ஆடுகளைக் காணவில்லை;
வாலாட்டி வலம் வரும்
நாயைக் காணவில்லை.

புல்லுச் செருக்க வரும்
புலேந்திரனைக் காணவில்லை;
குழத்துவிட்டுக் குளறும்
குலேந்திரனைக் காணவில்லை.
சனம் கூடி நிற்கும்
விதானை வீட்டைக் காணவில்லை;
குந்திக் கதைத்த
பாலத்தைக் காணவில்லை.

கடைக்கார முதலாளி
கனகரைக் காணவில்லை;
கறுத்தைக் காரோட்டும்
கண்ணனைக் காணவில்லை.


உழவுமெஷின்காரன்
உருத்திரனைக் காணவில்லை;
முன் வீட்டில் வசித்த
மூர்த்தியைக் காணவில்லை.

யான் நேற்றுவரை நேசித்த
யாரையுமே காணவில்லை;
இறைவா இவர்களை நீ
எங்கேனும் கண்டீரா?

**- கா.தவபாலன்**

கலாபூஷணம் கே.எம். இக்பால்

# கல்யாணப் பரிசு



சாமித்தம்பியை இன்னும் காண வில்லை......

காலை எட்டு மணிக்கு வந்துவிடுவேன் என்றார். பத்து மணியாகிவிட்டது இன்னும் காணவில்லை. அவர் வந்தால்தான் எல்லா வேலைகளும் ஓடும். முருகேசு கைகளைப் பிசைந்துகொண்டிருந்தார். பகல் சாப்பாட்டு வேலை, மாமரத்துக்குக் கீழே நடைபெற்றுக்கொண்டிருந்தது.

கணபதி அந்த வேலையைப் பார்த்துக் கொள்வார். அரிசி, கிழங்கு,கடலை தக்காளி எல்லாம் கொடுக்கப்பட்டுள்ளன. அவர் சமையலில் கெட்டிக்காரர். உங்களுக்காகச் செய்கின்றேன், கூலி வேண்டாம்' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். நூறு பேருக்காவது சாப்பாடு கொடுக்க வேண்டும். சொந்தக்காரர்கள் நூறு பேர் தேறும். வேலை செய்கிறவர்கள் இருபது பேர். வவுனியாவில் இருந்து கடைசியாக இடம் பெயர்ந்தவர்களுள் முப்பது என்று மொத்தமாக நூறுபேர் தேறும். முருகேசு குழுவினர் முல்லைத்தீவுக்கு மீள்குடியேறி, இன்றுடன் ஒருவாரம்தான் ஆகின்றது. மகள் ரம்யாவிற்கு கல்யாணத்திற்காகப் புதிதாக எதுவுமே வாங்கவில்லை. தாய் பாவித்த அரைப்பவுண் சங்கிலி மட்டுமே உள்ளது.

புதுப்புடவை, நகை வாங்குவோம் என்று சொன்னபோது, ரம்யா அதனை முற்றாக மறுத்தாள். "அரைப்பவுண் சங்கிலி இல்லாம எத்தனை பெண்கள் முல்லைத்தீவில் இருக்கிறாங்க... நகை, புடவை ஒன்றுமே வேண்டாம். மனதில் நிறைவு போதும். பொருளில் நிறைவு தேவையில்லை. எதிர்காலத்தில் வசதி வரும்போது பொருளைப்பற்றி யோசிப்பம்." ரம்யாவின் பேச்சில் உறுதியிருந்தது. ரம்யா முல்லைத்தீவு மண்ணில் பிறந்தவள். அவள் மண்ணை நேசிக்கின்றாள். முருகேசு ஒருகணம், தன்மனைவி சகுந்தலாவை நினைத்துக்கொண்டார். பிரச்சினை ஏற்பட்டு முல்லைத்தீவிலிருந்து வெளியேறும்போது, உயிரைவிட்டவள். அவளுக்கு வேறுமண்ணில் வாழப் பிடிக்கவில்லைப் போலும். ரம்யாவின் கல்யாணம், சகுந்தலாவின் ஆத்மாவை நிச்சயம் திருப்திப்படுத்தும். சாமித்தம்பி வந்திட்டார் என்ற சத்தம், முருகேசுவின் மனைவிபற்றிய நினைவுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. சாமித்தம்பி வேட்டியை மடித்துக்கொண்டு குடிசைக்குள் நுழைந்தார். வரும் வழியில் சிறிய மழை. அதனால்தான் அவர் வேட்டியை மடித்துக் கட்டியுள்ளார். அவரைத் தொடர்ந்து வேறு இருவரும், குடிசைக்குள் நுழைந்தார்கள். "இவங்க மாப்பிளைக்கு சொந்தக்காரங்க" அவர்களை சாமித்தம்பி அறிமுகம் செய்து வைத்தார். எல்லோரும் குடிசைக்குள் அமர்ந்தார்கள். குடிசை நான்கு நாட்களுக்கு முன்புதான் அமைக்கப்பட்டது. மழையையும், வெயிலையும் தடுக்க தகரம், கூரையாகப் பயன்படுத்தப்பட்டது. கீழே தரையில், மணல் பரப்பப்பட்டிருந்தது. ஆங்காங்கு மரக்குற்றிகள், தூண்களைப் போல் தகரங்களைத் தாங்கிக்கொண்டிருந்தன. தென்னங்கிடுகுகள் சுவர்களாகப் பயன் பட்டன. வவுனியாவிலிருந்து முருகேசு குடும்பம் உட்பட சுமார் ஐம்பது குடும்பங்கள் மீள்குடியேறிவந்தன. அவர்களோடு முள்ளியவளையில் ஐம்பது குடும்பங்களும் சுண்டிக்குளத்தில் அறுபது குடும்பங்களும் மீளக்குடியேறின. முருகேசுவின் குடிசைக்குள் திருமணப்பேச்சு இடம்பெற்றது. மாப்பி ளையின் சித்தப்பாவான ராசையாதான் முதலில் பேச்சைத் தொடங்கினார்.

"மாப்பிளை மாணிக்கம் எனக்கு மகன் முறை. ரம்யாவைக் கைபிடிக்கிறது

அவருக்கு நல்ல சந்தோசம். அவர் கனடாவில் ஐந்துவருடம் உழைச்சிருக்கிறார். கல்யாணத்தை நன்றாக நடத்த வேண்டும். என்று விரும்புகிறார்." "எனக்கு விளங்கவில்லை"... முருகேசு மெதுவாகச் சொன்னார் "மாப்பிள்ளை கல்யாணத்தை வீடியோ எடுக்க விரும்புகிறார். அதை அவர் கனடாவுக்கு அனுப்ப இருக்கிறார். கரண்ட் வசதிக்காக ஜெனரேட்டருக்கும் ஏற்பாடு செய்துள்ளார். பெண்ணுக்குத் தேவையான நகை, புடவை எல்லாத்துக்கும் அவர் ஏற்பாடு செய்துள்ளார்." முருகேசு இடைமறித்தார். " தம்பி இங்கே பாருங்க... நாங்க மூணு வருசங்களாக வவுனியாவிலே அகதிமுகாமிலை இருந்திட்டு, இப்பதான் இங்கவந்திருக்கோம். எங்களுக்கு எளிமையாக கல்யாணம் முடிக்கத்தான் விருப்பம். நீங்க மாப்பிளைக்கு எங்கட நிலைமையைச் சொல்லுங்க."

"நீங்க ..... ஒன்றும் யோசிக்காதீங்க. பெண்ணைச் சோடிப்பதிலிருந்து தாலிகட்டுற வரைக்கும் எல்லா வேலைகளையும் நாங்களே செய்றோம். முகூர்த்த நேரமான நான்கு பதினைந்துக்கு முதலிலே எல்லா வேலையையும் முடிச்சிடுவோம்".


"அதுக்கு சொல்ல இல்ல...... நாங்க வாழ்க்கையிலே நல்லா அடிபட்டு நொந்து போயிருக்கோம். மூணு வருசங்களாக கொடுத்ததைத் தின்னுக்கிட்டிருந்தோம். இனிமேத்தான் நாங்க சொந்தக் காலல நிக்கணும். இங்க மீள்குடியேறிய எல்லாருமே உடுக்கமாற்றுடை இல்லாமதான் இருக்காங்க. என்ட தம்பி மாங்குளத்திலையும் தங்கச்சி கோடாலிக்கல்லிலையும் இப்படித்தான் வாழ்றாங்க. மூணு வருசம் அகதிகளாக கஸ்டப்படுற நாங்க, ஒரு நாளைக்காக செயற்கையாக நடக்கமுடியாது." "கல்யாணம் வாழ்க்கையில் ஒருதடவைதான் வரும் அத நல்லமுறையில் நடத்தனும் என்று மாணிக்கம் தம்பி விரும்புகிறார். இந்தக் கல்யாணத்தை நல்லா நடத்தணும் என்பது தம்பிட நீண்டகாலக் கனவு. அவன் விரும்புறதும் சரிதானே. கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க..." "யோசிக்கிறதுக்கு ஒன்றும் இல்லை" "முல்லைத்தீவில எத்தன குமர் இருக்கு .... இந்தக் கல்யாணம் மிக ஆடம்பரமாக நடந்தா தங்கட கல்யாணமும் அப்பிடி நடக்கணும் என்று அவங்க ஆசைப்படுவாங்க... இது அவங்கட அப்பா அம்மாக்களுக்கும் பெரிய பிரச்சனையைக் கொடுக்கும். கல்யாணம் நமக்கு மட்டும் சந்தோசத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கக்கூடாது. அது எல்லோருக்கும் சந்தோசத்தைக் கொடுக்கணும்"

முருகேசுவின் குரலில், உறுதி இருந்தது. சாமித் தம்பிக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. தனது வழுக்கை விழுந்த தலையைச் சொறிந்து கொண்டார். அவர் பலமாகச் சிந்திக்கும் போதுதான் அவ்வாறு சொறிவது வழக்கம்.

அவர்ச் சட்டைப்பையினுள் இருந்த வெற்றிலை முடிச்சை எடுத்து வெற்றிலையை வாயில் போட்டு மென்றார். "இன்னைக்கு மழை வரும்போல இருக்கு. நீங்க சொல்றமாதிரி கல்யாணத்தை தடபுடலா நடத்த ஏலுமா..? சாமித்தம்பி மாப்பிள்ளை வீட்டார்களிடம் கேட்டார். "ஏன் முடியாது? இப்படித்தான் நாலஞ்சி நாளா மழை வாறமாதிரி இருக்கும், ஆனா வராது" "அப்படியா சொல்றீங்க? கொஞ்சம் பொறுங்க." என்று ராசையா சொல்லிவிட்டு வெளியே சென்று துப்பிவிட்டுத் திரும்பினார். பிறகு முருகேசுவை நோக்கி "ரெண்டு பக்கத்திலையும் நியாயம் இருக்கு, இதன நாம தீர்மானிக்கலாம். ரம்யாவோட தீர்மானத்துக்கு விடுவம். அவட விருப்பப்படி நாம நடப்பம்" என்று சொன்னார். சாமித்தம்பி இவ்வாறு சொன்னதும் மாப்பிள்ளை வீட்டாரின் முகங்களில் மகிழ்ச்சி ரேகைகள் படர்ந்தன. முருகேசு மௌனமாக இருந்தார்.

" முருகேசு... நீ போய் ரம்யாக்கிட்ட கேட்கிறியா ?" மௌனமே முருகேசுவின் பதிலாக இருந்தது. "சரி.... நானே கேட்டுப்பாக்கிறேன்'. மாப்பிள்ளை வீட்டார்களின் உள்ளங்களில் மகிழ்ச்சிக் குயில் கூவத்தொடங்கியது. சாமித்தம்பி ரம்யாவைத் தேடிச்சென்றார். பின்பக்கம் சென்ற ராசையா, பெண்களுக்கு மத்தியில் ரம்யாவைத் தேடினார். அவரது கண்களுக்கு ரம்யா அகப்படவே இல்லை. அங்கிருந்த பெண் ஒருத்தியிடம் ரம்யாவை விசாரித்தார். "அவ..... நளினி அக்கா வீட்டுக்குப் போயிட்டா..." "நளினி அக்காட வீட்டுக்கா? அது எங்க இருக்கு?" "இப்படியே போனா... மூணாவது வீடு..."

கல்யாணப்பெண் ..... வீட்டில இருக்காம ஏன் நளினி அக்காட வீட்டுக்குப் போகணும்? சாமித்தம்பியின் உள்ளத்தில் பல வினாக்கள்



தான்......இப்ப பவானி அக்காக்கு பபா பிறந்திருக்கு... மிளகுக்கறி ஆக்கிக் கொடுக் கணும். அதுக்குத்தான் மிளகு இடிக்கிறன்". 'பவானி அக்கா... உன்ட சொந்தமா....?' "இல்ல அகதி முகாமில அவங்க எங்களோடதான் இருந்தாங்க. அங்க நான்தான் அவங்களுக்கு எல்லாம் செஞ்சி கொடுத்தன்."

சாமித்தம்பியின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. ரம்யா வுக்கு இவ்வளவு பெரிய மனதா? மாணிக்கம் அதிஸ்டக்காரன்.

"ரம்யா.... உன்னோட கொஞ்சம் கதைக்கனும்"

"கறி ஆக்கிக் கொடுத்திட்டு அரைமணித்தியாலத்தில வந்திடுவன்." ரம்யா இடித்தபோது சிதறிய மிளகு களைப் பொறுக்கினாள்.

தனக்கு கல்யாணம் என்ற நினைவு கொஞ்சமும் இல்லாமல் உழைக்கும் ரம்யா சாமித்தம்பிக்கு அதிசயமாகத் தோன்றினாள்.

இப்போது சாமித்தம்பியின் மனதில் தெளிவு ஏற்பட்டது. முருகேசுவை விட ரம்யா ஒரு படி உயர்ந்தவள்.

நிச்சயம் ரம்யா ஆடம்பரக் கல்யாணத்தை விரும்பமாட்டாள்.

கேட்காமலே அவருக்கு விடை கிடைத்துவிட்டது. சாமித்தம்பி முருகேசுவின் குடிசைக்குத் திரும்பினார். மாப்பிளை வீட்டுக்காரர்கள் இவரது வருகையை, ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர் நல்ல செய்தியைத்தான் சொன்னார். "ரம்யா உங்களுக்கு கிடைக்கிறதுக்கு நீங்க கொடுத்து வைத்திருக்கணும்"- சாமித்தம்பி சொன்னதும் மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் இருவரும் குழப்பத்துடன் நோக்கினர். அவள் தெளிவாக இருக்கிறாள். அவள்தான் உங்களுக்கு கிடைக்கும் பெரியசொத்து. வேறு எந்த சொத்தோ ஆடம்பரமோ தேவையில்லை.

"நீங்க சொல்றது....." மாப்பிள்ளை வீட்டுக்காரரின் குரலில் தயக்கம் நிறைந்திருந்தது. "நான் சொல்றது எதிர் காலத்தில் உங்களுக்குப் புரியும். முருகேசு விரும்புறமாதிரி கலியாணத்த எளிமையாகச் செய்வம்"

அலைமோதின. அவரது நெற்றி பலதடவைகள் சுருங்கி விரிந்தது. ஒருவேளை... ரம்யாவுக்கு கலியாணத்தில இஸ்டமில்லையோ? அல்லது இந்த ஏழ்மைக் கோலத்தில என்ட முகத்தில விழிக்கிறது அவவுக்கு கஸ்டமா இருக்கோ? அந்தப் பெண் காட்டிய திசையில் சாமித்தம்பியின் கால்கள் சென்றன.

நளினி அக்காவின் வீடு தூரத்தில் தெரிந்தது. அதற்கு முன்னால ஒரு புளிய மரம். அந்த மரத்துக்குக் கீழ் ரம்யா பிள்ளைகள் ஏதோ செய்து கொண்டிருந்தது தெரிந்தது. சாமித்தம்பி ரம்யாவுக்கு அருகே சென்றார். அவள் ஒரு இரும்புத்துண்டால் ஏதோ ஒன்றை இடித்துக்கொண்டிருந்தாள். "ரம்யா...." ரம்யா தலை நிமிர்ந்து பார்த்தாள். "சாமித்தம்பி சித்தப்பா...."

மகிழ்ச்சியால் ரம்யாவின் முகம் சோலையில் பூத்த றோஜா மலர்போல இருந்தது.

"எப்ப சித்தப்பா வந்தீங்க...?

"இப்பத்தான்...."

"சரி இப்ப....என்ன செய்யிறா?..

"மிளகு இடிக்கிறன். இங்க ஒருவருக்கிட்டையும் அம்மி இல்லை. அதுதான் இரும்புத் துண்டால இடிக்கிறன்"

"இன்டைக்கு உனக்கு கல்யாணம் தானே ...வீட்டில இல்லாம இங்க இருக்கா...."

"இல்ல சித்தப்பா... மிளகு இடிச்சி கறி ஆக்கிக் கொடுத்திட்டு இதோ வந்திடுவன்"

"கறியா... யாருக்கு?"

"பவானி அக்காக்குத்தான்.... இந்த மூணு பிள்ளைகளும் பவானி அக்காவின்ர

இருவரும் பதில்பேசாது மௌனித்தார்கள்.

வேறு ஏதும் பேசாமல் இருவரும் விடைபெற்றார்கள்.

திருமணத்திற்கு அடையாளமாக வாசலில், இரு வாழைமரங்கள் நடப்பட்டன.

மதிய உணவு அருந்தும்போது, மழை சிறிதாக பெய்யத் தொடங்கியது.

அது, திருமணத்தை நினைத்து வானம் வடித்த ஆனந்தக்கண்ணீர்.

வெளியில் நின்றவர்கள் குடிசைக்குள் ஒதுங்கினர்.

வானத்தின் ஆனந்தக் கண்ணீர் நீடித்தது.

மழையில் முற்றும் நனைந்த வண்ணம் குடிசைக்குள் நுழைந்த ஒருவர்

"தாழமுக்கம்... நீலம் சூறாவளி... சேதம் ஏற்படுமாம்....." என்பதைத் தடுமாறிச்சொன்னார்.

"ஏற்கனவே பல சூறாவளிகள் எங்கட வாழ்கையில வீசியிருக்கு. இது என்னத்த அழிக்கப்போவுது.... முருகேசுவின் குரலில் விரக்தி வெளிப்பட்டது.

மணமகன் குழுவினர், புதுக்குடியிருப்பிலிருந்து ஏற்கனவே புறப்பட்டு விட்டதாகத் தகவல் கிடைத்தது. முகூர்த்த நேரத்திற்கு, இன்னும் இருமணத்தியாலங்களே இருந்தன.

மழைநீர் குடிசையையும் ஆக்கிரமித்தது. ரம்யா உட்பட அனைவரும் ஆடைகளைக் கைகளால் உயர்த்திப்பிடித்துக் கொண்டிருந்தார்கள். இடைவிடாது பெய்த மழையினால் அருகில் இருந்த குடிசைகளைக் கூட காணமுடியவில்லை. அருகில் வசித்த நகுலன் ஓடிவந்து, "காத்துக்கு குடிசைகள் எல்லாம் பறந்து போயிட்டுது எல்லாரும் பாடசாலைக்கு ஓடுறாங்க....." என்று சொன்னான். இவர்களது குடிசைக்கு இதுவரை ஒன்றும் நடக்கவில்லை ஆனால்...... எந்நேரமும் எதுவும் நடக்கலாம். நாமும் பாடசாலைக்குப் போவம்..." முருகேசு சொன்னார். தான் நீண்டகாலமாக கவனமாகப் பாவித்த குடையை, ரம்யாவுக்கு கொடுத்தார்.

ரம்யா சொன்னாள்,

"பவானி அக்காவையும் கூட்டிப் போகனும்.... நான் அவங்களக் கூட்டி வாறன்" ரம்யாவைத் தடுக்கமுடியாது என்று, முருகேசுவுக்குத் தெரியும். பவானிட கணவன் இறந்தபின்பு, அவவுக்குஎல்லாமே ரம்யாதான், பவானி அக்காவின் பிள்ளைகள், புளிய மரத்துக்குக் கீழ் நின்றுகொண்டிருந்தார்கள்.

பவானி அக்காவின் கையில் கைக்குழந்தை இருந்தது. அதன் முகம் சேலைத்தலைப்பால் மூடப்பட்டிருந்தது. ரம்யா ஓடிச்சென்று குழந்தையை வாங்கிக் கொண்டாள். பவானி அக்கா குடைபிடித்துக்கொள்ள ரம்யாவும் பிள்ளைகளும் பாடசாலையை நோக்கிச் சென்றார்கள்.

மழை ஆக்குரோசத்துடன் பொழிந்தது. எங்கும் நீர் இருந்ததால், அடியெடுத்து நடப்பது கடினமாக இருந்தது. பவானி அக்காவும் பிள்ளைகளும், விழுந்து விழுந்து வந்தார்கள். கைக்குழந்தையை வைத்திருந்ததால் ரம்யா தான் விழாமல் பார்த்துக்கொண்டாள்.

பாடசாலைவாசலில்முருகேசு, இவர்களை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தார்.

"மாப்பிள்ளை வந்திட்டாரு..." முருகேசு ரம்யாவின் காதருகே மெதுவாகச் சொன்னார்.

தாங்கள் கல்யாணத்திற்கு கொண்டு வந்திருந்த உணவுப்பொருட்களை மாப்பிள்ளை வீட்டார், அங்கிருந்த மக்களுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

முகூர்த்தநேரத்தில், தாலிகட்டப்பட்டது. ஊரில் இருந்த அனைவருமே, மணமக்களை வாழ்த்தினர். ரம்யா மழைக்கு நன்றிகூறினாள், அனைவரையும் கல்யாணத்தில் பங்குபெற வைத்தமைக்காக. மாணிக்கம் ரம்யாவுக்கு மட்டும் கேட்கும் படியாக, "திருமணத்திற்காக நான் ஒதுக்கி வைத்த இருபது இலட்சம் அப்பிடியே இருக்கு, அப்பணத்தை வைத்து ஒரு கல்யாண மண்டபத்த நான் இலவசமாக இங்க கட்டப்போறன். இது எனது கல்யாணப்பரிசு..." என்று சொன்னதும் அவளின் இதழ்கள் விரிந்தன.

படைப்பாளிகள் கவனத்திற்கு,

ஞானம் சஞ்சிகைக்குத் தமது ஆக்கங்களை அனுப்புபவர்கள் அவற்றை கணினியில் தட்டச்சு செய்து மின்னஞ்சலில் அனுப்புவதுடன் அதன் பிரதியை தபாலிலும் அனுப்புதல் விரும்பத்தக்கது. பிரதியில் கைத்தொலைபேசி இலக்கத்தைத் தவறாது குறிப்பிடுதல் வேண்டும். – ஆசிரியர்

**அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி : articles@gnanam.info**

# முதிர்ச்சியின் முனைப்பு

கவிஞர் ஏ. இக்பால்

அந்திம காலமென் றொதுங்கிவிட
அனைந்தவர் துயர்கள் விடுவதில்லை!
உந்திய செயல்களை உறுதி செய்ய
உடல்நிலை சரியாய் விடுவதில்லை!
பிந்தியகாலச் செயல்களெல்லாம்
முந்தியமாதிரி நடப்பதில்லை
சிந்தனை கல்வியில் கலைகளிலும்
சிறகடித் தினைப்பதை விடுவதில்லை!

1

காரியசாதனை செய்த காலம்
கலைந்துமே மனமதை ஏற்பதில்லை
மாறிய சாதனை செயல்களையும்
மற்றவர் போற்றுதல் விடவுமில்லை!
ஆறிய மனதுடன் அமைதி பெற
அறிவுல கொன்றையும் விடவுமில்லை!
ஊறிய நினைவுகள் சில நிமிடம்
உதறி என்மனதினில் உறைவதில்லை!

2

யாரிடம் செல்வது அவர்களெல்லாம்
ஏனினும் எந்நிலை புரியவில்லை!
பாரினில் வயதேறும் போதினிலே
பற்பல சோதனை பார்ப்பதில்லை!
நேரினில் கண்டிடும் அநுபவத்தில்
நிலைகுலைந் தொதுங்குதல் தேவையில்லை!
தேறிடும் அநுபவச் செயல்களிவை
தேற்றிட மனதினைப் பழக்கவில்லை!

3

வயதினை உடல்நிலை காட்டவில்லை
வளர்ச்சியை உறுத்திட வகையுமில்லை!
நியதியாய் என்னிடம் படித்தவர்கள்
நிலைகுலைக் கிழவரா கியதால்
உயர்வினில் அவர்களை எண்ணவில்லை
உறுதியை என் மனம் இழக்கவில்லை.
அயர்வினில் அறிந்தவை கூறியதால்
அளவிட முதிர்ச்சியே முடியவில்லை!

# அந்தப் பட்டினத்தின் ஆடுகள்

அந்தப் பட்டினத்தின்
ஆடுகளின் இடையர்கள்
அழிக்கப்பட்டும்
துரத்தப்பட்டு....

மறி ஆடுகள்
வதைக்கப்பட்டு
துன்புறுத்தப்பட்டிருக்கின்றன

இப்போது
வெறிச் சோடிக் கிடக்கும்
பட்டினத்தில்
எங்கிருந்தோ கொண்டு வரப்பட்டு
ஆடுகள் விடப்படுகின்றன.

காலம் தொட்டு
இந்த ஆடுகள் மேய்ந்த
புல்வெளிகளில்
யாரோ.....
விவசாயம் செய்கிறார்கள்

இந்நிலத்திற்கு
உரிமையான ஆடுகள்
விரட்டியடிக்கப்பட்டு
கொட்டில்களையும்
ஆட்டெருக்களையும்
யாரோ ....
விற்பனை
செய்கிறார்கள்


நீண்ட கொம்பு
வைத்த ஆடுகளின்
பிரசன்னத்தால்

பயந்து போய்
இருக்கின்றன
மிஞ்சிய ஆடுகள்....

ஆ. முல்லைதிவ்யன்

# தமிழகச் செய்திகள்

**கே.ஜி.மகாதேவா**



## ‘ஞானம்’ ஆய்வு செய்து முனைவர் பட்டம்பெற்ற தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக மாணவி


“ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்” எனும் அய்யன் வள்ளுவன் வாக்கு, யார் யாருக்கெல்லாம் பெருமை சேர்த்தாலும், ‘ஞானம்’பிரதமஆசிரியர்திரு.ஞானசேகரனுக்கு, அவரது இலக்கியப் பாரம்பரியத்துக்கு நன்றாகவே பொருந்திவிட்டது! ‘ஞானம்’ சஞ்சிகையின் முதல் ஐம்பது இதழ்களைக் கையில் எடுத்து, இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ‘ஞானம்’ இதழின் பங்களிப்பு குறித்து பல்துறைகளிலும் ஆய்வு மேற்கொண்ட தமிழ்நாட்டு பல்கலைக்கழக பெண் ஒருத்தி, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (கலாநிதி பி. எச். டி) பட்டம் பெறும் ஒரு நிகழ்வில் ‘ஞானம்’ பிரதம ஆசிரியரும், நிர்வாக ஆசிரியரும் சிறப்பு அழைப்பாளர்களாக நேரில் கலந்துகொண்டு, கருத்து வெளியிட்டு, அந்த இலக்கிய விருந்தில் இதயம் நிறைந்து பெருமைப்பட்டது...... தெய்வப் புலவர் திருவள்ளுவரின் “ஈன்ற பொழுதிற்....” எனும் வைரவரிகளை நினைவுபடுத்தியது.

பதின்நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், இலக்கியம் இலக்கியத்துக்காக மட்டுமே எனும் உயரிய நோக்கில் ஒரு ‘காலக் கண்ணாடி’ அணிந்து இலக்கிய உலகில் ‘ஞானம்’ அடி எடுத்து வைத்தபோது, இது ஒரு விஷப்பரீட்சையாகத் தெரியவில்லை. “போற்றுவோர் போற்றட்டும் புழுதிவாரி தூற்றுவோர் தூற்றட்டும்.... நாம் பதிக்கும் முதல் அடி சிறியதாக இருந்தாலும், தமிழ் இலக்கிய வரலாற்றில் மாபெரும் திருப்புமுனையை ‘ஞானம்’ ஏற்படுத்தும் என்று அடித்தளமிட்டு, பல்துறைப் படைப்பாளிகளை நம்பிக்கையுடன் அழைத்தது. அன்று மலையகத் தலைநகர் கண்டியில் தலைப்பிரசவம் கண்டபோது ஏற்பட்ட அந்தப் பரவசத்தைக் காட்டிலும் தமிழர் தம் தாய்த் தமிழகம் தஞ்சையில் தனது ‘குழந்தை’ ஆய்வுக்குள்ளாக்கப்பட்டு, தங்கள் கண்முன்பாக முனைவர் பட்டம் பெற்று ‘சான்றோன்’ என்று காது குளிரக்கேட்டு பதிவானது ‘ஞானம்’ குழுமத்துக்கு பேரின்பம் அளித்திருக்கிறது.



**முனைவர் பட்டத்துக்கான வாய் மொழித் தேர்வு:**

பெப்ரவரி மாதம் பன்னிரண்டாம் திகதி காலையில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத் தின் அயல் நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, ஆய் வியல் நிறைஞர் பட்ட வகுப்பறையில்




ஆய்வு மாணவ மாணவிகள் திரளாகக்' கலந்துகொண்ட முனைவர்பட்ட பொதுவாய் மொழித் தேர்வு நிகழ்வு நடைபெற்றது. இலங்கை தமிழ் இலக்கிய வளர்ச்சியில் 'ஞானம்' இதழின் பங்களிப்பு குறித்து முனைவர் பட்டம் பெறுவதற்கான ஆய்வை மேற்கொண்ட திருமதி.கு.ரேணுகாதேவிக்கு, திண்டுக்கல் காந்தி கிராமிய பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் பா.பத்மநாபபிள்ளை முனைவர்பட்ட பொதுவாய்மொழித்தேர்வை நடத்தினார். இந்த நிகழ்ச்சியின்போது அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை தலைவர் பேராசிரியர் ஆ.கார்த்திகேயன், இத்துறையைச் சேர்ந்த முனைவர் சா.உதயசூரியன், பேராசிரியர்கள் தெ.வெற்றிச்செல்வன், பிரபாகரன் மற்றும் சிறப்பு அழைப்பாளர்களாக 'ஞானம்' தி.ஞானசேகரன், ஞா.பாலச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். ஆய்வாளர் கு.ரேணுகாதேவி முதலில், 'ஞானம்' சஞ்சிகையில் வெளியான பல்வேறு படைப்புகள் குறித்து தாம் மேற்கொண்ட ஆய்வுகள் பற்றி சுருக்கமாகத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, முனைவர் பட்ட பொதுவாய்மொழித் தேர்வாளர் பேராசிரியர் பா.பத்மநாபபிள்ளை, ஆய்வேட்டில் காணப்பட்ட குறிப்புகளிலிருந்து கேள்விக் கணைகளைத் தொடுக்க, ஆய்வாளர் கு.ரேணுகாதேவி 'ஞானம்' இதழ்களின் பல்வேறு படைப்புகள் குறித்த ஆய்வுப் பார்வையைத் தெளிவுபடுத்தி பதில்கூறி, தேர்வாளரின் சந்தேகங்களைத் தீர்த்து வைத்தார். ஆய்வும் அதன்மீது தம்மால் வைக்கப்பட்ட கேள்விகளும், அதற்கு ஆய்வாளர் அளித்த பதில் விளக்கமும் பூரண திருப்தி அளிப்பதாக தேர்வாளர் பேராசிரியர் பா.பத்மநாபபிள்ளை கருத்து வெளியிட்டதும், ஆய்வு மாணவர்கள் மத்தியிலிருந்து மட்டுமல்ல பேராசிரியர்களும் மகிழ்ச்சிக் கரகோஷம் எழுப்பினர்.

**'ஞானம்' கலந்துரையாடல் : மலையகம் குறித்தும் கேள்வி :**

அன்று பிற்பகல், தமிழ்ப் பல்கலைக்கழக அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, தி.ஞானசேகரனுடன் ஒரு சிறப்புமிகு கலந்துரையாடலை நடத்தியது. ஆய்வு மாணவர்கள், மாணவிகளுடன் பேராசிரியர்கள் பா.பத்மநாபபிள்ளை, சா.உதயசூரியன், ஆ.கார்த்திகேயன், தெ.வெற்றிச்செல்வன், பிரபாகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தி.ஞானசேகரனும், ஞா.பாலச்சந்திரனும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பட்டனர். முதலில் உரையாற்றிய முனைவர் சா.உதயசூரியன், அயலகத் துறையின் ஆரம்பகால நண்பர்கள்தான், இலங்கை பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் வ.மகேஸ்வரன், ஞானம் ஞானசேகரன், ஆஸ்திரேலியா முருகபூபதி. ஈழத்து இலக்கியத்தை நன்றாகப் புரிந்திருக்கின்றோம். எமது துறையில் ஏராளமான ஆய்வு மாணவர்கள் இலங்கையைத்தான் ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆய்வுகள் சரியாகப் பதிவுசெய்யப்பட வேண்டும். ஆழமாக ஆய்வுகள் மேற்கொள்ளவும், தேடுதல் நடத்தவும் இப்படியான கலந்துரையாடல்கள் மிகவும் உதவும்" என்றார். இதனைத் தொடர்ந்து தி.ஞானசேகரன்; 'ஞானம்' இதழ்கள், அதன் படைப்புகள், ஈழத்து போர் இலக்கிய சிறப்பிதழ் குறித்து சுருக்கமாகக் கூறி, ஆய்வு மாணவர்களிடமிருந்து கேள்விகளையும் சந்தேகங்களையும் வரவேற்றார். முனைவர் பட்டம் பெறும் கு.ரேணுகாதேவியை, முனைவர் உதயசூரியன் நோக்கி, ஞானம்






ஆய்வில் நீங்கள் கண்ட குறைபாடுகளையும் தெரிவிக்கலாம் என்று கூற, கு. ரேணுகாதேவி, "குழந்தை இலக்கியத்துக்கு 'ஞானம்' கூடுதல் இடம் ஒதுக்குமா என்று கோரிக்கை எழுப்ப, தி.ஞானசேகரன், போர் இலக்கியத்தில் போருக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப் பட்டது என்றும், சிறுவர் இலக்கியத்துக்கு உரிய இடம் கிடைக்கும் என்றும் பதிலளித்தார். முனைவர் பட்ட ஆய்வாளர்பழனிவேல்; போர்காலத்தில் இலங்கை மலையக போராட்டம் குறித்து எதுவும், பதிவு செய்திருக்கிறீர்களா என்று வினாதொடுக்க 'ஞானம்' தி.ஞானசேகரன்; "மலையகத்தில் போர் எதுவும் நடக்கவில்லை. அங்கு ஆயுதம் ஏந்தி மக்கள் அரசை எதிர்த்து போராடவும் இல்லை. ஆனால் மலையகத் தொழிலாளர்களின் அவலங்களை வெளிக்காட்டும் படைப்புகள் ஞானத்தில் இடம்பெற்றுள்ளன. தேயிலை மலைகளில் சிங்களவர்களின் குடியேற்ற அத்து மீறல்கள், பொலிஸாரின் அட்டூழியங்கள், சிங்களப் பேரினவாதம் எவ்விதமாக தலைதூக்குகிறது. மலையக தோட்டடத் தொழிலாளர்களை எவ்விதம் பாதிக்கிறது என்பதை எல்லாம் எனது 'குருதி மலை' நாவல் மூலமாக விளக்கியுள்ளேன்" என்று விளக்கி, பல ஆய்வு மாணவர், மாணவிகளின் கேள்விப் பசியைத் தீர்த்து வைத்தார். தமிழர் போராட்டத்தை இலக்கிய வடிவில் 'ஞானம்' பதிவு செய்தது காலத்தின் கட்டாயம் என்று கூறிய தி.ஞானசேகரன்; தமிழ் இலக்கியவரலாற்றில் ஆயுதம் ஏந்திய பெண் போராளி, படைப்பாளிகளாகவும் வடிவம் எடுத்தது ஈழத்து இலக்கியத்தில் மட்டுமே உண்டு என்றும் பெருமையுடன் தெரிவித்தார்.

'ஞானம்' கலை, இலக்கிய சஞ்சிகை தனது ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழை வெளியிட்டு அதன் அறிமுகம் மற்றும் கலந்துரையாடல்களை தமிழ் நாட்டில் கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் அரங் கேற்றியதன் மூலம் கிடைத்த அங்கீகாரங்கள் பெரும் இலக்கிய விழிப்புணர்வை ஏற்படுத்தி விட்டன. தமிழ் அறிஞர்கள், இலக்கிய ஆர்வலர்களை மட்டு மன்றி, தமிழகத்தின் பல்வேறு பல்கலைக்கழகங்களின் பல்துறை யினரையும் ஆழமான இலக்கியப் பார்வைக்குள்ளாக்கிவிட்டது. இதன் பலனாக, 'ஞானம்' சஞ்சிகையின் பல்வேறு கலை இலக்கிய துறைசார்ந்த படைப்புகளின் இலக்கிய தரத்தை தேடலை ஆய்வு செய்ய வும் கருத்தரங்குகள் நடத்தவும் தமிழக பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த முனைவர்கள் மற்றும் தமிழ் அறிஞர்களை உள்ளடங்கிய குழு வொன்று கொழும்பு வருகிறது.

ஆய்வுக் கருத்தரங்கு கொழும்பில் இரண்டு நாட்கள் நடைபெறும் என்றும், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் இந்த ஆய்வில் சிறப்பாளராகக் கலந்துகொள்வார் என்றும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை பேரா சிரியர் முனைவர் சா.உதயசூரியன் என்னிடம் தெரிவித்தார். ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் ஞானம் இதழ்களே முதன்முதலாக முனைவர் பட்ட ஆய்வுக்கு உற்படுத்தப்பட்டுள்ளது என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

**சென்னையில் நடைபெற்ற அயல்நாட்டு தமிழ் இலக்கியங்கள் கருத்தரங்கு.**

சென்னையில் பெப்ரவரி மாதம் நடுப்பகுதியில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் 'அயல்நாட்டு

தமிழ் இலக்கியங்கள்’ கருத்தரங்கில் அறுபதுக்கும் அதிகமான அறிஞர்கள், முனைவர்கள் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். கருத்தரங்கின் ஒழுங்கிணைப்பாளர் கு.சிதம்பரம் வரவேற்றார். நிறுவன இயக்குனர் கோ.விசயராகவன் தலைமை உரையாற்றினார். இரண்டு நாள் கருத்தரங்கில் இலங்கை, இந்தியா, அமெரிக்கா, பிரான்ஸ், சிங்கப்பூர், மலேசியா நாடுகளைச் சேர்ந்த ஏராளமான தமிழ் அறிஞர்கள் கலந்துகொண்டனர். இவர்களில் பேராசிரியர்கள், முனைவர்கள், ஆய்வு மாணவர்கள் அதிகமாகக் காணப்பட்டனர். இலங்கையிலிருந்த பேராசிரியர் துரை மனோகரன், பேராசிரியர் செ.யோகராஜா, பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ் மற்றும் ஞானம் தி.ஞானசேகரன், ஞா.பாலச்சந்திரன், எம்.ஐ.எம்.ஹனிபா, சு.குணேஸ்வரன், எஸ்.வை.ஸ்ரீதர், த. அஜந்தகுமார், ஆகியோர் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். ‘நவீன தமிழ் இலக்கியத்தில் புதிய வகைப்பாடு (ஈழத்துப்) போர் இலக்கியம்’ எனும் தலைப்பில் தி.ஞானசேகரனும், **15** நூற்றாண்டு முதல் **1939** வரையுள்ள ‘ஈழத்தின் தமிழ் அகராதிகள் - முயற்சிகள்’ எனும் தலைப்பில் ஞா.பாலச்சந்திரனும் கட்டுரைகள் சமர்ப்பித்திருந்தனர்.

தினமும் கருத்தரங்குகள் என்று முதல் நாள் நான்கும், இரண்டாம் நாள் ஐந்தும் நடைபெற்றன. நான்காவது கருத்தரங்குக்கு இதழாளர் ஞானம் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரன் தலைமைவகிக்க அழைக்கப்பட்டிருந்தார். இதில் ஐந்து ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளைப் படித்தனர். இதில் சிறப்பு என்னவென்றால்; ஞானம் தி.ஞானசேகரன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில், அவரது புதல்வனும், ஞானம் நிர்வாக ஆசிரியருமான ஞா.பாலச்சந்திரன் தமது ஆய்வுக்கட்டுரையைப் படித்ததுதான். ‘மகன் தந்தைக்கு, ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்”.

# இன்பக் களிப்பினிலே....!

பயின்றிடும் தோறும் பண்பினை வளர்த்திடும்
பகலவ னொளியாய் பாங்காய் நம்மொழி
உயர்ந்திட தமிழினம் உணர்வுடன் வாழ்ந்திட
உயரிய மொழியாய் எங்கள் தமிழ்மொழி!

கனிந்திட வுளங்கள் கனிச்சுவை தந்திடும்
குறையிலா முத்தமிழ் ஏடுகொள் நம்மொழி
நனிமிகு சிலம்பும் மணியும் வளையலும்
நேராம் குண்டல முடைத்தாய் நம்மொழி!

பொழிவுடன் விளங்கும் பலமுடன் திகழும்
பனிமலர் அன்னக் கோலத் தமிழ்மொழி
குழலிசை யெங்கணும் குவலயம் கண்டிட
கருத்துடன் திகழும் செம்மொழி எம்மொழி!

கலைகள் பற்பல பேராய்த் தந்திடும்
கனிமொழி எங்கள் கற்புடைத் தமிழ்மொழி
நிலையினிற் குன்றாய் நிமிர்ந்தே நின்றிடும்
நெஞ்சினி லின்பகடலென நற்றமிழ் மொழியே!

என்றும் எம்மொழி எதிலும் எம்மொழி
எடுப்பாய்த் திகழ்வது வீறுகொள் தமிழ்மொழி
செம்புலமெங்கனும் தனித்தமிழ் காண்போம்
செழிப்புடன் இன்பக் களிப்பினில் யாமே!

தேனினும் உயரிய தீம்மொழிகண்டிட
தேகமெங்கனும் தமிழ்மொழி நின்றிட
கூனே இல்லாதெழுந்திட முடிந்திடும்
தமிழைக் கண்டேன் இன்பக் களிகொண்டேனே!

-கலைமகன் பைரூஸ்

# ஏதிலிகள்



கு.குணறுபேஸ்
கல்முனை.

மீண்டும் ஒரு தேர்தல் நாடகம் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. சில அரசியல் வாதிகள் இப்போது அந்த அகதிகளிடம் மீள்குடியேற்றம் என்னும் பேச்சை ஆரம்பித்து விட்டிருக்கிறார்கள். இப்படித்தான் இதற்கு முன்னர் அவ்வப்போது மூன்றுமுறை மீள்குடியேற்றம் பற்றிய பேசுபொருளை வைத்தே அவர்களை ஏமாற்றிய வரலாற்றை இன்னும் அவர்கள் மறந்து விடவில்லை. கடந்த நான்கு வருட அகதி வாழ்வில் மூன்றுமுறை ஏமாற்றப் பட்டவர்கள் இனியும் ஏமாறத் தயாராகவில்லை என்பதை அந்த அரசியல் தலைமைகள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. பால்மாவுக்கான விலையையும் எரிபொருளுக்கான விலையையும் குறைத்து ஏமாற்றி விடும் படலம் மீண்டும் அமுலுக்கு வந்திருக்கிறது.

அன்று ஒரு திங்கட்கிழமை. அகதிமுகாமுக்குப் பொறுப்பான விதானையார் கையில் சில பைல்களுடன் எண்பதாம் ஆண்டு வேண்டிய கறள் கட்டிய உந்துருளியில் காலை ஏழுமணியளவில் வந்து சேர்ந்தார். "அடுத்தவாரம், புதன்கிழமை நீங்கள் உங்கள் சொந்தக் கிராமமான குருந்தையடிக் கிராமத்தில் குடியேற்றம் செய்யப் படுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப் பட்டிருக்கின்றன. எல்லாக் குடும்பங்களும் உங்கள் உடமைகளைக் கட்டியெடுத்து ஆயத்தமாயிருங்கள். காலை பத்து மணிக்கு உங்களை ஏற்றிக் கொண்டு செல்வதற்கு வாகனம் வரும்" எனக்கூறியவர் குடும்ப விபரங்களை சரிபார்த்துக் கொண்டு சென்றார்.

அகதிகளது காதுகளிலே மீண்டும் எட்டிய மீள்குடியேற்றம் என்னும் நல்ல செய்தி அகதிமுகாம் முழுவதிலும் கடந்தகால ஏமாற்றங்களை மறந்து ஒருவிதமான மனமகிழ்வை உண்டுபண்ணியது. அப்பொழுதிருந்தே தங்கள் சொந்த வீடு சொந்தக்கிராமம் அதன் அருகில் ஓடுகின்ற நீரோடை அதில் நீந்திக் குளிக்கும் இன்பம், கிராமத்தில் வாழும் பசுக்களின்முலைகளில்சுரக்கும்பால்அதனைக் காய்ச்சிக் குடிக்கும் சுவை, குருந்தையடிக் குளத்தில் பிடிக்கும் செல்வன்மீன் அதனைத் துடிக்கத் துடிக்க வெட்டிச்சமைக்கும் சுவையான குளம்புக்கறி, செல்வன்மீன் பொரியல் அவர்கள் நிலத்தில் விழைந்து முற்றிப் பழுத்த மாங்கனிகள், கிராமத்து உறவுமுறை எல்லாமே அந்த அகதிகள் மனதில் ஒருமுறை முழுநீளத்திரைப்படம் போல் ஓடிக்கொண்டிருந்தன. ஆனாலும் தேர்தல் காலத்தில் வரும் பொய் வாக்குறுதிகளோ இவைகள் மீண்டும் ஒருமுறை மீள்குடியேற்றம் என்னும் போர்வையில் ஏமாற்றப்படப் போகின்றோமோ என்னும் சந்தேகங்களும் அவர்கள் சிலரின் சிந்தனைகளில் வந்து சென்றன. ஆனாலும் தங்கள் தாயக மண்ணில் சொந்தக் கிராமத்தில் சொந்த இடங்களில் குடியேற்றப் படுவோம் என்னும் நம்பிக்கை இன்னும் அவர்கள் மனங்களில் குடிகொண்டிருக்கத்தான் செய்தது. தாங்கள் தங்களின் குருந்தையடிக் கிராமத்தில் குடியேற்றப்பட வேண்டும் என்பதே அவர்களது ஏகோபித்த கோரிக்கையாகவும் இருந்தது. மீள்குடியேற்றத்திற்கும் அகதி முகாம் வாழ்விற்குமிடையே வாழ்நாட்கள் சுழன்று கொண்டிருந்தன.

"இனியென்னவாழ்வு! இந்த சபிக்கப்பட்ட வாழ்வை விட தற்கொலை செய்துவிடுவது மேலானது. காட்டு மிருகங்களுடன்

வாழும்படியாயும் தண்ணீரின்றி தவித்து வாழும் படியாயும் சுகாதார வசதிகளின்றி நோய்வாய்ப் படும் படியாகவுமா நாம் இங்கு அழைத்து வரப்பட்டோம். இன்னும் எத்தனை வருடங்கள் அகதிமுகாம் வாழ்வு நமக்கு காத்திருக்கின்றதோ யாரறிவார்?" என்று துன்பங்களைச் சுமந்து களைத்துப்போன சில குடும்பங்கள் தங்களைத் தாங்களே அலுத்துக் கொண்டனர். இந்தச் சோக அனுபவங்களுடன் வாழ்பவர்களுக்கு வாரம் ஒருமுறை அரசசார்பற்ற நிறுவனத்தால் வழங்கப் படுகின்ற உலர் உணவுப் பொருட்கள்தான் அவர்களை இன்றுவரை உயிர்வாழ வைத்திருக்கிறது. விரும்பியோ விரும்பாமலோ அந்த சம்பா அரிசியையும் பருப்பையும் கண்மூடிக் கொண்டேனும் விழுங்கி விடவேண்டிய நிலையை அவர்களால் தவிர்க்க முடியவில்லை.

துன்பத்தின் சுமையுடன் அகதிவாழ்வு ஓடிக் கொண்டிருந்தது. உள்ளதை சமைத்து வயிற்றைக் கழுவிக் கொள்வதற்காய் விறகு பொறுக்கிவர பெண்கள் சென்றுவிட்டனர். வேறு காரியங்களைப் பார்ப்பதற்காய் ஆண்கள் வெளியில் சென்றிருந்தனர். அகதிமுகாமில் மின்ஒழுக்கு ஏற்பட்டது. அகதிமுகாம் கொழுந்து விட்டெரிந்தது. ஏணையிலே உறங்கிக் கொண்டிருந்த குழந்தைகளை யாருமே உள்ளே சென்று காப்பாற்ற முடியவில்லை. செய்தி கேட்டு ஓடிவந்த பெண்களும் ஆண்களும் திகைத்துப்போய் நின்றனர். தலையில் அடித்துக் கொண்டு குழந்தைகளுக்காய் பெண்கள் அழுது புலம்பினர். அவர்கள் வெட்டிய துரவிலிருந்து தண்ணீர் எடுத்து குடம் குடமாய் ஊற்றினர். அதற்கு அணைந்துவிடுமா தீ? குழந்தைகளுடன் சேர்த்து கருகிய நிலையில் முப்பத்தைந்து சடலங்கள் மீட்கப்பட்டன.வயது முதிர்ந்த எட்டுப் பேரும் அதில் உள்ளடங்கியிருந்தனர். இந்த அகதிகள் வாழ்வில் துன்பங்கள் மாத்திரமே தொடர் கதையாயிருந்தன.

ஒருநாள் இரவு வேளையில் முகங்களை மறைத்துக் கொண்டு முகாமுக்கு வந்த ஆயுததாரிகள் சுற்றிவளைத்தனர். அங்கிருந்த ஆண்கள் ஆறுபேரை விசாரணை என்னும் பெயரில் துப்பாக்கி முனையில் அழைத்துச் சென்றனர். மனைவிமாரும் பிள்ளைகளும் தவித்துப் பதைத்து அழுதனர். அந்த அழுகுரலும் கண்ணீரும் ஆயுதப் பிசாசுகளுக்கு எட்டியதாயில்லை. நான்கு நாட்களுக்குப்பின் அழைத்துச் செல்லப் பட்டவர்களில் மூன்று பேருடைய சடலங்கள் அருகிலுள்ள காட்டில் கண்டுபிடிக்கப் பட்டன. மிகுதி மூன்று ஆண்களும் உயிருடன் இருக்கின்றார்களா? எங்கு இருக்கின்றார்கள்? என்கின்ற எந்தவிதமான தகவல்களும் இல்லை. அவர்களுடைய மனைவிமாரும் உறவினர்களும் முறையிடாத பொலிஸ் நிலையங்களும் இராணுவ முகாம்களும் இல்லை. இங்கு ஒருவரும் இல்லை நாங்கள் கைது செய்யவுமில்லை என்று சொல்கின்றார்கள். அருகிலுள்ள மனிதஉரிமை அமைப்பிடம் சென்று முறைப்பாடு கொடுத்து விட்டு வந்திருக்கின்றார்கள். எந்தவிதமான சாதகமான தகவல்களும் அவர்களுக்கு கொடுக்கப் பட்டதாயில்லை.

கணவன் இல்லாமல் மனைவிமாரும் தந்தை இன்றிப் பிள்ளைகளும் பாடுபடு கின்றார்கள். வாழ்வதற்கு நாதி அற்றவர்களாக அந்தக் குடும்பங்கள் சீரழிகின்றன. உதவி செய்ய யாருமில்லை. பட்ட காலிலே படும் கெட்டகுடியே கெடும் என்பதுபோல வீடிழந்து சொந்த ஊர்இழந்து அகதிகளாக்கப் பட்டவர்களுக்கு நிம்மதியான வாழ்வுகூட இல்லை. 'கையக்கால உடைச்சுப் போட்டெண்டாலும் எங்கட கணவன்மாரை எங்களிடத்தில் தந்தால் போதும்" என்று சொல்லுகின்ற நிலையில் இருக்கின்றார்கள்.


இளம்வயதை எட்டிய பெடியன்கள் அகதிமுகாமிலிருந்து தொழிலுக்காய் அருகி லுள்ள கிராமத்திற்கு செல்வதுவழமை. அன்றொருநாள் அப்படித்தான் அவர்கள் தொழிலுக்காய் சென்றிருந்தார்கள். அவர் களுக்குஎன்னநடந்ததுயார்கைதுசெய்தார்கள்? என்பதெல்லாம் தெரிய வில்லை. இன்றுவரை அவர்கள் அகதிமுகாம் திரும்பவில்லை. குடும்பத்தவர்கள் செய்வதறியாது தவித்தனர். ஏதிர்பாராதவிதமாக ஒருநாள் அகதி முகாமிற்கு கடிதம் வந்தது. தாங்கள் படையினரால் தடுத்து வைக்கப் பட்டிருப்பதாகவும் உயிருக்கு ஏதும் ஆபத்தில்லை என்றும் கடிதம் எழுதியிருந்தனர். அதன்பின் இன்றுவரை அவர்களைக் குறித்து எந்தவிதமான தகவல்களுமில்லை. காணமல் போனவர்களின் பெயர்ப்பட்டியலில்தான்அவர்களின்பெயரும் சேர்க்கப்படவேண்டியிருந்தது.

• • •

எதிர்பார்த்திருந்த புதன்கிழமை வந்தது. மீள்குடியேற்றத்துக்காய் ஆயத்தப் பட்டனர். இறுதிக் கட்ட யுத்தத்திலும் பின்னர் அகதிமுகாமிலும் இழந்த உயிர்களைத் தவிர எஞ்சியவர்கள் துணிமணிகளைக் கட்டிக் கொண்டு மீள்குடியேற்றத்துக்காய் பத்து மணிவரை காத்திருந்தனர். அகதிமுகாமிலிருக்கும் ஆலமர நிழலில் காத்துக் கிடந்தனர். அந்த ஆலமரத்திலிருந்த காக்கைகளுக்குக்கூட இவர்களின் மீள் குடியேற்ற ஆயத்தம் வேடிக்கையாய் அமைந்திருந்தது. ஆனந்தத்தின் மிகுதியினால் சின்னஞ் சிறுசுகள் பட்டாம் பூச்சிபோல் அங்குமிங்கும் பறந்து திரிந்தனர்.

பத்து மணியளவில் விதானையார் வந்தார். அவரைத் தொடர்ந்து ஐந்து பேருந்துகள் தொடராய் வந்தன. குடும்பம் குடும்பமாய் பெயர் விபரங்கள் பரிசீலிக்கப் பட்டு அறுபத்து மூன்று குடும்பங்கள் மொத்தமாக குடியேற்றப்பட வாகனத்தில் ஏற்றப்பட்டனர். பல புதிய சிந்தனைகளோடும் எதிர் பார்ப்புக்களோடும் பரபரப்பு நிறைந்ததாய் அந்நிகழ்வு அமைந்திருந்தது.

இப்போது பேருந்து புறப்பட ஆயத்தமானது. புழுதியைக் கிளப்பிக் கொண்டு பேருந்துகள் புறப்பட்டன. ஆடலும் பாடலுமாய் பேருந்துகள் மகிழ்ந்து சென்றன. மதியம் ஒருமணியளவில் குருந்தையடிக் கிராமத்திலிருந்து பத்துக் கிலோமீற்றர் தொலைவிலுள்ள நிலப்பரப்பில் கொண்டுபோய் விடப்பட்டனர். “உங்கள் பொதிகளை இறக்கி எடுங்கள்” என்று ஒரு அதிகாரி சொன்னார். அந்தக் கட்டளைக்கு அவர்கள் செவி கொடுக்கவில்லை. இராணுவச் சீருடை அணிந்த ஒருவர் சிங்களத்தமிழில் பேசினார். “உங்கள் குருந்தையடிக் கிராமத்தில் இராணுவ முகாம் அமைக்கப் பட்டிருக்கின்றது. அப்பகுதி இப்போது உயர் பாதுகாப்பு வலயமாக அரசால் பிரகடனப் படுத்தப் பட்டிருக்கிறது. அது இப்போது அரசுக்குச் சொந்தமான நிலப்பரப்பு. மிதிவெடிகள் அங்கு இன்னும் அகற்றப் படவில்லை இன்னும் ஒரு வருடங்களில்தான் மிதிவெடிகள் முற்றாக அகற்றப்படும். அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தலும் செய்துவிட்டது. குருந்தையடிக் கிராமம் இனி அரசுக்குச் சொந்தமானது. ஆகவே அரசாங்கத்தினால் உங்களுக்கு வழங்கப்பட்ட இந்த நிலப்பரப்புக்கு மகிந்தபுரம் என்ற பெயர் சூட்டப் பட்டிருக்கிறது. இது வளமுள்ள பூமி. இங்கே நீங்கள் குடியிருக்கலாம். தோட்டம் துரவு செய்யலாம். இங்கே உங்களுக்கான பாதுகாப்பும் உண்டு என்ன சம்மதம்தானே” என்று கேட்டார். ஜனங்களெல்லாம் ஏகோபித்த குரலில் “இல்லை... இல்லை.... எங்களுக்கு எங்கள் தாயகப் பூமி வேண்டும். நாங்கள் வாழ்ந்த குருந்தையடிக் கிராமம் வேண்டும். எங்கள் வீடு வேண்டும். எங்கள்



சொந்தக் காணி வேண்டும். இந்தப் புதியஇடத்தில் குடியேற நாங்கள் சம்மதிக்க மாட்டோம்” என்று குரல் எழுப்பினர். ‘என்ன ஏமாற்று வேலை....என்று அகதிகள்’ தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

நீண்ட ஒரு வாக்குவாதத்தின் பின்னர் பொதுமக்கள் சொன்னார்கள் “எங்களை நாங்கள் நான்கு வருடகாலமாய் வாழ்ந்த அகதிமுகாமுக்கே திரும்பவும் கொண்டுபோய் விட்டுவிடுங்கள் நாங்கள் குடியேறினால் எங்கள் சொந்தக் கிராமத்தில் குடியேறுவோமே தவிர புதியதொரு இடத்தில் குடியேற நாங்கள் தயாரில்லை இதைவிட நாங்கள் அகதிமுகாமிலே வாழ்ந்து மடிவது எங்களுக்கு நலமாயிருக்கும்” என்று தைரியமாய் சொன்னார்கள். வேறுமார்க்கமின்றி வந்தவாகனத்திலேயே மீண்டும் ஏற்றப்பட்டு அவர்கள் வாழ்ந்த அகதிமுகாமிற்கே அழைத்து வரப்பட்டனர். அவர்கள் கைவிட்டுச் சென்ற அகதிமுகாம் ஏளனமாய் அவர்களை வரவேற்றது.

ஏமாற்றத்துடன் அகதிமுகாமிற்கு வந்தவர்களின் கண்கள் குளமாகின. சிலர் கண்ணீர் சொரிந்து மண்ணைவாரித் திட்டித் தீர்த்தனர். நாங்கள் பாடுபட்டுக் கட்டியவீடு அது. சீட்டுப் பிடித்து காலையில் அப்பம் பிட்டுச் செய்து அருகிலுள்ள கடைகளில் விற்று எங்கள் கைபடக் கட்டியவீடு அவைகள். இன்று ஆயுதம் ஏந்திய படையினரின் குடும்பங்களை அங்கு குடியேற்றி விட்டு எங்கள் குருந்தையடிக் கிராமத்தில் மிதிவெடிகள் அகற்றப் படவில்லை என்கிறார்கள். இப்போது அது அரசகாணி என்கிறார்கள். ஏன் அந்தச் சிங்களவர்களுக்கு மிதிவெடிகள் வெடித்திடாதா? என்று தனது மனக்கிலேசத்தைக் கொட்டினாள் கனகம்மா.

“குருவிக்குகூடுகலைச்சாமரங்களெல்லாம் கூடாகும். எங்கள் வீட்டையும் மண்ணையும் அபகரித்தால் மரநிழல்தான் எங்களுக்குத் தஞ்சமாகும். எதுஎப்படியோ எங்கள் குருந்தை யடிதான் எங்களுக்கு வேண்டும்” என்றாள் தெய்வானை.


போர் முடிந்த கையோடு இப்போது தென் பகுதிச் சிங்களவர் வடகிழக்கை பார்வை இடுவதற்கு படையெடுத்து சுற் றுலா வருகின்றார்கள். அப்படித்தான் காலியிலிருந்து சுற்றுலா வந்தவர்கள் இந்த அகதிகளையும் பார்வையிட்டனர். மீள்குடியேற்றம் குறித்த இந்த அகதிகள் கொண்டுள்ள வைராக்கியத்தையும் மன வுறுதியையும் கண்ட சுற்றுலாக்காரர்கள் அந்த அகதிகளிடம் இப்படிக் கேட்டனர். “பரிப்புக் காளா தாமத் கையெங் இன்னவா நேத” (எவ்வளவு அடிவாங்கியும் இன்னும் தைரியத்தடன் இருக்கிறீர்கள் என்ன?).

வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல் இந்தப் பொல்லாத பேச்சுக்கள் அவர்கள் உள்ளத்தை இன்னும் கொஞ்சம் உடைத்துப் போட்டது. யார் என்ன சொன்னாலும் அவர்களுடைய தீர்மானத்தில் அவர்கள் உறுதியாயிருந்தனர்.

அகதிமுகாமை இருள் கௌவிக் கொண்டது. மீள்குடியேற்றம் என்ற எதிர் பார்ப்புடன் சென்று ஏமாற்றத்துடன் மீண்டும் அகதி முகாமிற்கே வந்துவிட்ட அவர்கள் ஏமாற்றங்களையெல்லாம் ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு கட்டிய பெட்டகங்களைப் பிரித்தெடுத்து இரவு உணவுக்காய் ஆயத்தம் செய்தனர்.

சொந்த மண்ணில் ஏதிலிகளாய் வாழும் பரிதாப நிலைமை அவர்கள் கண்களை ஒருவிசை கலக்கியது. அந்தக் கண் கலக்கத்தில் சொரிந்த கண்ணீரை அகதிமுகாமைச் சுற்றிப் பறந்து திரிந்த மின்மினிப் பூச்சிகள் வெளிச்சம் போட்டுக் காட்டின. நாளை அவர்களின் நிலைமை எப்படி அமைந்துவிடும் என்பது மட்டும் சூனியமாயிருந்தது.

---




**நூல் அறிமுகத்திற்கு நூல்களை அனுப்புபவர்கள் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். ஒரு பிரதியை மட்டும் அனுப்பினால் அதற்கான நூல் அறிமுகம் இடம்பெற மாட்டாது. ஒரு வருடத்திற்குள் வெளிவந்தநூல்களே நூல் அறிமுகத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.**

**- குறிஞ்சி நாடன்**

# சத்தியங்கள் செத்த பூமி இது!

வியட்நாம் போர் ஒன்றில்
ஒன்பது வயது சிறுமி ஆடையின்றி ஓடி வந்தாள்
உலகமே வியந்து கண்ணீர் மழை சொரிந்தது...
நீண்ட கால வியட்னாமிய நெருப்பு யுத்தம் முடிவுக்கு வந்தது

அமெரிக்க ரசிய அணு ஆயுதப் போர்
ஆரம்பிக்க இருந்த நேரம் ஒன்றில்
அமெரிக்க நாட்டுப் பதினொரு வயது சிறுமி ஒருத்தி
ரசிய நாட்டு சனாதிபதிக்கு இரங்கல் மடல் ஒன்று வரைந்தாள்

கடிதம் படித்த ரசிய சனாதிபதி கண்கலங்கி அழுதார்
அமெரிக்க நாட்டு அதிபருக்கும் இதனைத் தெரிவித்து
தாங்கள் செய்ய இருந்த மகா தவறை
சிறுமி ஒருத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறாள்
வெட்கப்பட்டு வேதனை பெருகி அழுதார்.....
தொடங்க இருந்த
அந்த அணு ஆயுதப் போர்முற்றாக நிறுத்தப்பட்டது.

அமெரிக்க சனாதிபதித் தேர்தலில் போட்டியிட காத்திருந்த
ஏபிரகாம் லிங்கனுக்கு பத்து வயதுச் சிறுமி கடிதம் ஒன்று வரைந்தாள்
அது ஒரு வேண்டுதல் கடிதம்
சிறுமியின் வேண்டுதல் வீண் போகவில்லை
நிறைமனதோடு நிறைவேற்றினார்
ஏபிரகாம் லிங்கன் வெற்றி பெற்றார்.........

சிறுவர்கள் வணக்கத்திற்கு உரியவர்கள்
அவர்கள் மனங்களில் வஞ்சகங்கள் விதைக்கப்படுகின்றனவே
தவிர அவை அவர்களுக்குள் விளைவதில்லை.....

கடவுளுக்குச் சமமான அவர்களின் ஈன நிலைகண்டு
துடித்துருகாதவனும் துயரம் கொள்ளாதவனும்
மனித இனமே இல்லை அவன்...

தீ முளைத்த எங்கள் தீவிலும் சிறுவர்கள் இருந்தார்கள்
தீயவர்கள் அவர்களை எரித்தார்கள்....
சுட்டுக் கொன்றார்கள்
திக்கங்குகளாய் சிதைந்து தணல் மணலாய் நீண்டு விரிந்தன.
ஈழச் சிறுவர்கள் உடலங்கள்....

சின்னஞ்சிறு பாலகன் பாலச்சந்திரன்
வஞ்சகம் சூது வாது ஏதும் அறியாத பாலகன் இவன்
மிரளும் கண்கள் காணும் போது
உருகாதோர் நெஞ்சமெலாம் உருகி உறுமல் பெறும்

இவனைப் பார்த்துமா உங்கள் நெஞ்சங்கள் உருகவில்லை
இரக்கப்பட்டிருக்கவேண்டுமல்லவா...
இரக்கத்திலும் இவன் இவர் மகன் என்றுதான் பார்த்தீர்களா....?

சத்தியங்கள் செத்த இலங்கை நாட்டிலே
புனித புத்தனுக்கும்
இருக்க இடமில்லை என்று தான் இனி முழங்குவோம்.

தமயந்தி

# மு.வ.வோடு கொஞ்சதூரப் பயணமும் நிறைய நினைவுகளும்



சை.பீர்முகம்மது
(மலேசியா)

என் இளமைக்காலம் மட்டுமல்ல என்னையொத்த வயதுடைய அல்லது மூத்தவர்கள் கூட மு.வ.என்ற பெயரை ஒரு முறையேனும் வாழ்க்கையில் உச்சரிக்காமல் இருந்திருக்க முடியாது. தமிழ்சார்ந்த சிந்தனை 'வாசிப்பு' எழுத்து நின்ற நிலைகளில் மு.வ.வின் பெயர் தெரியாதவர்கள் குறைவே.

மிக இளமையிலேயே துப்பறியும் கதைகள், சங்கர்லால், தமிழ்வாணன், சிரஞ்சீவி, மேதாவியிலிருந்து விடுபட்டு வெளியே வந்தமைக்கு இருபெரும் எழுத்தாளர்கள் காரணமாக அமைந்தார்கள்.

புதுமைப்பித்தனுக்கு முன்பாகவே டாக் டர் மு.வ. என்ற மந்திரச்சொல் என்னை ஆட் கொண்டது.

தமிழ் நெறி சார்ந்த வாழ்க்கையும் - ஒழுக்கங்களும் பள்ளிப்படிப்பின் பொழுது ஆசிரியர் கற்றுத்தந்த ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன். ஔவையார், திருக்குறள் எல்லாமே ஒரு கலைத்தன்மையும் இலக்கிய மேன்மையாகவும் மு.வ.வின் நூல்களில் படிக்க முடிந்தபொழுது எனக்கு வாழ்க்கை பல்வேறு நிலைகளை உணர்த்தியது. நான் வாசித்த மு.வி.வின் முதல் நூல் 'கரித்துண்டு!'. பிறகு வரிசையாக அவரின் நூல்களை வாசிக்க வாசிக்க என்னுள் அவரை எப்படியாவது காண வேண்டும் என்ற ஆவல் மேலிட்டது. எப்பொழுதுதாவது தமிழகம் செல்லும் வாய்ப்பு வந்தால் முதலில் நான் சந்திக்கப் போகும் ஓர் எழுத்தாளர் அவராகத்தான் இருக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டேன்.

அவரின் நூல்கள் மறுவாசிப்பு வேண்டி நின்றன.

அவருக்கென்று தனியாக ஒரு தமிழ்நடை - எவ்வளவு கடினமான விஷயத்தையும் மிக எளிதாக்கி விடும் மாயம் - பாத்திரங்களின் தமிழ்ப்பெயர்கள் எப்பொழுதும் அறத்தின் ஓர் உக்கிரக்குரல் தொடர்ந்து போகும். இவைகள் என்னை அவரின் எழுத்திலும் அவர் பாலும் பற்றுக் கொள்ள வைத்தன.

1966 ஆம் ஆண்டு மலேசியாவில் முதல் தமிழ் ஆராய்ச்சி மாநாடு - என்னை அதன் சுற்றுலாக்குழுவில் ஓர் உறுப்பினராக தனிநாயக அடிகள் சம்மதத்துடன் நியமித்தார் முருகு சுப்பிரமணியன்.

முதல் மாநாட்டிற்கு வருகிறார் என்பதே இரண்டு மடங்கு மகிழ்ச்சி. அதைவிட மிகப்பெரிய மகிழ்ச்சி அவரையும் மற்றப் பேராசிரியர்களையும் வடமாநிலங்களுக்கு அழைத்துச் செல்லும் பெரும் பொறுப்பு என்னிடம் வழங்கப்பட்டதுதான்.

மு.வ மலாயாப் பல்கலைக்கழகம் வந்திறங்கியவுடன் அவரின் அறைக்குச் சென்று என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். பிறகு அன்றாடம் அவரோடு உணவு, பேச்சு, மாநாட்டு நடவடிக்கைகளுக்குப் பிறகு நீண்ட இரவுகள், என்னையும் என் அன்பையும் அவர் எப்படி எடுத்துக் கொண்டார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் சில நேரங்களில் நான் மற்ற வேலைகளுக்காக வெளியே செல்ல வேண்டிய சூழ்நிலையில் அவர் என்னைத் தேடத் தொடங்கினார். எங்கள் நெருக்கம் அதிகமாகியது.

வட மலாயா சுற்றுப்பயணத்தின் முதல் நாள் ஈப்போவில் மிகப்பெரிய கூட்டம். கூட்டம் முடிந்து இரவு உணவும் முடிந்து விட்ட நிலையில் அவர் ஈப்போ ஸ்டேசன் ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டார். மற்றப் பேராசிரியர்களும் அதேஹோட்டலில் தங்கினார்கள். எனக்கும் தமிழ்நேசன் பத்திரிகையின் சார்பாக செய்திகளைச் சேகரிக்க என்னோடு வந்த வே. விவேகானந்தன் அவர்களுக்கும் வேறு இடத்தில் தங்க ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.

காலையில் நான் ஸ்டேசன் ஹோட்டல் சென்றபொழுது "எங்கே போனீர்கள்? காலையில் காப்பி கிடைக்காமல் எல்லோரும் உங்களைத் தேட ஆரம்பித்து விட்டார்கள். முதலில் போய் அவர்களைப் பாருங்கள்" என்றார்.

காலை உணவுக்கு முன்பே காப்பி என்பது தமிழ்நாட்டு வழக்கம். இதில் என்னோடு வந்த பேராசிரியர்கள் ஏறக்குறைய 45 பேர். இந்த 45 பேருக்கும் 45 வகையான காப்பி தேவைப்பட்டது. முதல் நாள் என் தலை சுற்றியது. ஆனால் அடுத்த நாளிலிருந்து நிலைமை சரியாகி விட்டது. சீனிதூக்கல் பிரச்சனையிலிருந்து பசும்பால், எருமைப்பால் என்று ஏகப்பட்ட வகைகள்.

டாக்டர் மு.வ.எதற்கும் வாய் திறப்ப தில்லை. எல்லாமே இலேசான புன்னகைதான். நாட்கள் இரண்டு ஆனதும் அவரின் பார்வை, சிரிப்பு, எல்லாவற்றுக்கும் வெவ்வேறு அர்த்தங்களைப் புரிந்து கொண்டேன்.

"ஏவா மக்கள் மூவா மருந்து" என்பார்.

"இதிலும் மு.வ இருக்கிறதே" என்றேன்.

அதை ஒரு சிறு குழந்தையைப் போல ரசித்தார். அங்கே வரும் பேராசிரியர்களிடத்தில் எல்லாம் அந்த 'மூவா' மருந்தைச் சொல்லி ரசிப்பார்.

சுற்றுலா தைப்பிங் நகரத்தில் நடந்த இரவு கூட்டம் முடிந்து நாங்கள் அன்றே பினாங்குத் தீவை சென்றடைய வேண்டுமென்று மு.வ. கேட்டுக்கொண்டார். பினாங்குத் தீவை முழுமையாகக் கண்டு ரசிக்க வேண்டும் என்பது அவரின் ஆவலாக இருந்தது. அவர் மலேசியாவுக்கு வருவது அதுதான் முதல் முறை என்றாலும் வருவதற்கு முன்பே அவர் கையில் ஒரு பட்டியலே இருந்தது. எந்தெந்த இடத்திற்குப் போக வேண்டுமென்றும் அங்கே என்னென்ன இருக்கிறது என்றும் எல்லா விபரங்களையும் குறித்து வைத்திருந்தார். அடிக்கடி என்னிடம் அந்த தகவல்கள் சரிதானாவென்று கேட்டுத் தெரிந்து கொள்வார்.

சுற்றுலா புறப்பட்ட நாளிலிருந்து அவரோடுதான் நான் பயணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். நான் காரில் ஏறும் வரைக்கும் அவர் ஏறமாட்டார்.

நடிகர் டி.கே.சண்முகம் எங்களோடே வந்தார். கூட்டங்களில் அவரைப் பாடக் கேட்பார் மு.வ.

"நாங்கள் தான் பேசியே எல்லாரின் கழுத்தை அறுக்கிறோம். நீங்களாவது பாடுங்கள்!" என்று டி.கே.சண்முகத்துக்கு வேண்டுகோள் வைப்பார்.

பாரதியின் பாடல்களை டி.கே.சண்முகம் பாடி முடித்ததும் "இவரின் குரலில் பாரதி புதுப்பிறவி எடுக்கிறான்" என்பார் மு.வ.

முதல் தமிழாராய்ச்சி மாநாட்டு சமயத்தில் ஏறக்குறைய 10 நாட்கள் அவரோடு இருக்கும் நிலை ஏற்பட்டது எனது வாழ்க்கையில் மறக்க முடியாத நாட்களாகும்.

தைப்பிங் நகர் செல்வதற்கு முன் கோலகங்சாரில் பழைமையான பள்ளி வாசலைப் பார்க்கும் இடப்பட்டியல் அவரிடம் இருந்தது. அங்கே சென்றபொழுது அதன் பழைமையில் லயித்தவர் திடீரென்று பள்ளிவாசலின் நுழைவாயில் அருகே மண்டியிட்டு தியானம் செய்ய ஆரம்பித்தார் - எனக்கு அது ஆச்சிரியமாக இருந்தது. ஒரு பதினைந்து நிமிடங்கள் கண்மூடி தியானம் செய்துவிட்டு "வாங்க போகலாம்" என்றார்.

"உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதா? இறைவனை மொழியால் அதன் முறைகளால் வணங்குவது சம்பிரதாயமான செயலென்று சிலர் கூறுவார்கள். இறைவணக்க இடங்கள் மனதை ஒருமைப்படுத்தி வணங்குவதற்கான இடங்கள்தானே! அதை எப்படி வணங்குகிறோம் என்பதை விட எத்தகைய மனநிலையில் இறைவனை நெருங்குகிறோம் என்பதைத்தான் நான் முக்கியமாக நினைக்கிறேன்.

பினாங்கு ஆயர் ஈத்தாமிலுள்ள புத்தர் கோயிலுக்குச் சென்றபொழுது அங்கே ஒவ்வொரு அடுக்கிலும் ஆர அமர புத்தரின் பல்வேறு வடிவங்களை ரசித்தார். கடைசியாக உச்சியை அடைந்ததும் அங்கிருந்து பினாங்கு கடலின் அழகை ரசித்தார். பின் புத்த விகாரை நோக்கி மண்டியிட்டு மௌனமாக தவமிருப்பது போல் நீண்ட நேரத்தை எடுத்துக் கொண்டார்.

அந்த இரண்டு சம்பவங்கள் மட்டுமல்லாது 'இறை' பற்றிய அவருடைய எண்ணத்தை அறியும் வாய்ப்பு இரண்டாவது முறை அவர் மலேசியாவிற்கு ரகசியமாக மலாயா பல்கலைக்கழக பரீட்சைத் தாள்களைத் திருத்த வந்தபொழுது ஏற்பட்டது.

கோலாலம்பூர் பெடரல் ஹோட்டலில் அவரைத் தங்க வைத்திருந்தார்கள். தொலைபேசியில் அழைத்து தன்னை வந்து சந்திக்கும்படி கூறியபொழுது எனக்கு பேராச்சரியம். ஓடிப்போய் அவரைப் பார்த்தேன். என்னோடு சா.ஆ.அன்பானந்தன் வந்திருந்தார். "நான் இங்கே வந்திருப்பது யாருக்கும் தெரிய வேண்டாம். கூட்டம் கூடி விடும். நான் பல்கலைக்கழக பரீட்சை பேப்பர்களைத் திருத்த வந்துள்ளேன். உங்களைப் பார்த்துப்பேச மட்டுமே அழைத்தேன்!" என்றார்.

"இரண்டு நாள் கழித்து தைப்பூசம். நீங்கள் முருகனை தரிசிக்க பத்துமலை வரலாமே" என்றேன்.

"அந்த ஆர்ப்பாட்டம். கூச்சல், காவடி என்ற நிலையில் என்னால் எப்படி முருகனை

அமைதியாக வணங்க முடியும்? நான் ஒரு வாரம் இங்கே தங்குவேன். பிறகு ஒரு நாள், தைப்பூசம் முடிந்த இரண்டு நாளில் எல்லாம் அமைதியாகி விடும் - அப்பொழுது என்னை மலை உச்சிக்கு அழைத்துப் போங்கள். பத்துமலை முருகனை நானும் தரிசிக்க வேண்டும்!" என்றார்.

எனக்கு அவர் எல்லா பழக்க வழக்கங்களிலும் வேறுபட்டே தெரிந்தார்.

மு.வ. எந்த நாவலையும் தொடர்கதையாக பத்திரிகையில் எழுதியவரல்ல. இதுபற்றி அவரிடம் கேட்டபொழுது "பத்திரிகைக்கு எழுதும்பொழுது ஒவ்வொரு பத்திரிகைக்கும் ஒரு கொள்கை இருக்கும். அதற்கு ஏற்ப நாமும் வளைந்து நெளிய வேண்டும். அதோடு எனது கதைகள் வாராவாரம் திருப்பங்கள் நிறைந்த வாசகர்களை அடுத்த வாரம் என்ன என்ற கேள்வியோடு எழுதப்படுபவை அல்ல" என்று தனது எழுத்தைப்பற்றி தீர்க்கமான முடிவுகளை அவர் வைத்திருந்தார்.

இரண்டாவது முறை பல்கலைக்கழக பணிநிமித்தம் வந்த அவரை ஒரு கூட்டத்திலாவது வந்து பேசும்படி சா.ஆ.அன்பானந்தன் கேட்டபொழுது பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

அன்றைய தைப்பூசத்தில் முத்தமிழ் படிப்பக கட்டிட நிதிக்காக பத்துமலை நுழைவாயிலில் நான் உண்டியல் ஏந்திக் கொண்டிருந்தேன். திடீரென்று என்தோள் மேல் ஒரு கை அழுத்தியபொழுது திரும்பிப் பார்த்தேன். மு.வ.சிரித்தபடி நின்று கொண்டிருந்தார்.

"வர மாட்டேன் என்றீர்களே?"

"இவர் எங்கே என்னை வேலை செய்ய விட்டார். கையோடு இழுத்துக்கொண்டு வந்து விட்டார்" என்றவாறு பக்கத்தில் தோபுவான் உமா சம்பந்தனும் துன் சம்பந்தனும் நின்று கொண்டிருந்தார்கள்.

"இவரை விடாதீர்கள்! இப்பொழுது கூட்டத்தில் பேச மறுத்துவிட்டார். அடுத்தமுறை இவரை வரவழைத்து நாட்டில் கூட்டங்கள் நடத்துவோம்" என்றார் துன் சம்பந்தன்.

அன்று பத்துமலையில் தைப்பூசம் சோகமயமாகவே இருந்தது.

தமிழகத்தில் அறிஞர் அண்ணா காலமாகிவிட்ட செய்தியால் மு.வ.வின் முகம் சோபிக்கவில்லை. "பெரிய இழப்பு நமக்கு" இந்த வார்த்தைகள் மட்டுமே அவரின் உதட்டிலிருந்து வந்தன.

முதல் முறை மு.வ.தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வந்தபொழுது வட மலாயா சுற்றுப்பயணத்தில் பினாங்கு வந்ததும் ஒரு பெயரை அடிக்கடி என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் என் மாணவர் சந்திக்க வேண்டும் என்றார். பினாங்கை அடைந்ததும் பெட்டிகளை பெருநிலக்கிழார் என்.டி.எஸ்.ஆறுமுகம்பிள்ளை அவர்களின் வீட்டில் வைத்துவிட்டு உடனே ஒரு காரில் புறப்பட்டோம்.

ஒரு மாணவன் ஆசிரியரைப் பல ஆண்டுகள் கழிந்தாலும் பார்க்கும் ஆர்வம் இருக்கும். ஆனால் ஒரு ஆசிரியர் அப்படி ஆர்வமாக இருந்ததுதான் ஆச்சரியம்.

அவர் பார்க்க ஆவல் கொண்டது ஜே.எம். ஹுசேன் அவர்களைத்தான் - ஜே.எம். சாலியின் அண்ணன்.

அந்தஇருவரின்சந்திப்புஉணர்வுபூர்வமாக இருந்தது.

பினாங்கில் கடற்கரையில் காலாற வெகு தூரம் நடந்தோம். மாபெரும் மனிதருடன் நான் நினைத்த இலட்சியங்களில் ஒன்றான அவரைச் சந்திக்க வேண்டும் என்பது இப்படி தோளோடு தோள் சேர்ந்து நடக்கும் வாய்ப்பு கிடைத்தது எப்படி இருந்திருக்குமென்று நீங்களே நினைத்துப் பாருங்கள்.

"நீங்கள் வீட்டில்தானே நாவல்கள் எழுதுவீர்களா?"

"இல்லை. பெங்களூரில் ஒரு வீடு வாங்கியுள்ளேன். அது பெரிய வீடு. முழு வீட்டையும் வாடகைக்கு கொடுத்த விட்டு அதன் மறுபக்கம் ஓர் அறையை எனக்காக எழுதுவதற்காகவே ஒதுக்கி வைத்துள்ளேன். பெங்களூரின்சீதோஷ்ணநிலைஎப்பொழுதும் இதமாக இருக்கும். அது சங்கடமில்லாமல் எழுதுவதற்கு வாய்ப்பு. அதனால்தான் நான் பெங்களூரைத் தேர்ந்தெடுத்தேன்" என்றார்.

அதோடு எந்தவிதமான தொலைபேசி தொடர்பும் அந்த அறையில் அவர் வைத்தக் கொள்ளவில்லை. எழுத ஆரம்பித்தால் பெரும்பகுதி தனிமையும் - தொடர் எழுத்தும் தான். தொலைபேசி அழைப்புகள் சிந்தனை அறுபட வழி வகுக்கின்றன என்பது அவரின் எண்ணம்.

என் குடும்பம் பற்றி ஒரு முறை கேட்டார். அப்பொழுதுதான் நான் திருமணம் முடிந்து ஒன்பது மாதங்கள் ஆகியிருந்தன. 16 தம்பி, தங்கைகள் என்றேன்.

எனது கொள்கை உங்களுக்கு ஒத்து வராது என்றார். அது என்ன கொள்கை?

மு.வ. பணத்தை வீட்டில் பொதுவாக வைத்து மனைவி இராதா அம்மையார் மற்றும் மூன்று மகன்கள் அரசு, நம்பி, பாரி தத்தமது தேவைகளுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்திருந்தார். பணத்தோடு

தொடர்ச்சி 42ம் பக்கம் ...

# மு.பொ.வோடு ஒரு கருத்தாடல்

- சோ.பத்மநாதன்

என் 'தென்னிலங்கைக் கவிதை' வெளிவந்து ஒன்பது ஆண்டுகளாகிவிட்ட நிலையில் பதிப்புக்குரிய மு.பொ. அவர்கள் அந்நூல் பற்றி ஞானத்தில் எழுதியுள்ளது ஒரு மகிழ்ச்சிகரமான வியப்பு. 'ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்பதில்; மு.பொ. வல்லவர் என்பது அவர் மேற்கோள் காட்டியுள்ள கவிதைகளிலிருந்தே தெளிவாகிறது.

சிங்களக் கவிஞர்கள் எழுதிய இக் கவிதைகளை மொழிபெயர்ப்புக்கு நான் தேர்ந்த காரணத்தை மு. பொ. சரியாகவே அடையாளங் கண்டுள்ளார். இதுபோலவே, என் ஆபிரிக்கக்கவிதைக்குஅணிந்துரைவழங்கியமுருகையன்"இக்கவிதைகளின்உள்ளடக்கமும் உணர்வுநிலைகளும் தமிழ் வாசகர்களின் அக்கறைகளோடு தொடர்புடையவை" என்று குறிப்பிட்டதுண்டு.

அரை நூற்றாண்டுக்கு மேலாக இந்நாட்டில் வளர்ந்த இனமுரண்பாடும், அவ்வப்போது அது தமிழ்மக்களுக்கெதிரானவன்முறையாகவெளிப்பட்டவிதமும்மானுடத்தைநேசிக்கும் - மதிக்கும் - பலரை ஆயாசம் அடையச் செய்தன. இவ்வினவன்முறைக்கெதிராக, சிங்கள ஆக்க இலக்கியவாதிகள் என என்னுள் எழுந்த தேடலின் விளைவே இம்மொழிபெயர்ப்பு. அவர்கள் எழுதத்தான் செய்தார்கள். அவர்களுட் பலர் ஆங்கிலத்தில் எழுதியவர்கள்.

"மரபுவழிக் கவிஞராகத் தம்மை அயைாளம் காட்டிய சோ.ப. இம்மொழிபெயர்ப்புக் கவிதைகளை மட்டும் புதுக்கவிதைவடிவில் தரமுன்வந்தது ஏன்?"- இது மு.பொ எழுப்பும் வினா. சொந்த ஆக்கத்தில் இருக்கும் சுயாதீனம் மொழிபெயர்ப்பில் - அதுவும் கவிதை மொழிபெயர்ப்பில் - இல்லை. மூலத்துக்கு விசுவாசமாக இருப்பது மொழிபெயர்ப்பாளனே ஏற்றுக்கொள்ளும் ஒரு தார்மீகக் கடப்பாடு. அதற்குத்தான் முன்னுரிமை. யாப்புக் கட்டுப்பாடுகள் பின்தள்ளப்படுகின்றன. நான் மொழிபெயர்த்த ஆபிரிக்கக் கவிதைகளுள் பல தமிழ் யாப்பைப் பேணுபவை. தென்னிலங்கைக் கவிதைகள் பெரும்பான்மை புதுக்கவிதை வடிவில் அமைந்தவை.

சொந்தக் கவிதைகளைப் புதுக்கவிதை வடிவில் எழுத நான் செய்த முயற்சிதான் 'நினைவுச்சுவடுகள்'. அத்தொகுதியிலுள்ளபலகவிதைகள்அகவல்யாப்புக்குள்அமைவதைச் சுட்டிக்காட்டிய சிவசேகரம் மரபுவடிவங்களிலிருந்து முற்றாக விலக என்னால் இயலாது என்று குறிப்பிட்டார்.

செய்யுள் வழக்கொழிந்துவிட்டது என்ற சாரப்பட மு.பொ. சிலகாலமாக எழுதிவருவதை அவதானித்துள்ளேன். இது எனக்கு உடன்பாடல்ல.

"எங்கும் அலைகள் எறியும் கடல்நடுவே
குந்தி இருக்கும் றொபின்சன் குறூசோப்போல்
பேரறியா நச்சுப்பிரண்டை விளைகின்ற
ஓர் தீவில் வந்துஒதுங்கிக் கிடக்கின்றேன் ....."

என்று **40 - 42** வருடத்துக்கு முன்பே மு.பொ எழுதிய கவிதையைப் படிமத்துக்கு உதாரணமாக என் மாணவர்களுக்கு எடுத்துக் காட்டுவதில் எனக்குச் சலிப்பு ஏற்படுவதில்லை.

மோனை எதுகைகளை நிராகரிக்கும் (புதுக்) கவிதைக்குக் கூட ஒரு லயம் இருக்கவேண்டும் என்பது என் கட்சி. மோனை எதுகைகள் கவிஞனை மையப் பொருளிலிருந்து விலகி வேறெங்கோ கொண்டுசென்றுவிடும் என்பது மு.பொ.வின் வாதம். நல்ல மொழியாட்சிவாய்ந்த கவிஞனுக்கு இது பிரச்சினையே இல்லை. சைக்கிள் ஓட்டப் பழகிய ஒருவன் balancing பற்றிய பிரக்ஞையின்றியே சவாரிசெய்வது போலக் கவிபாட முடியும்.

மறுபுறம், யாந்திரிகமாக, யாப்புத்தேவைகளுக்காகச் சொற்களைஅடுக்கிச் செய்யுள் செய்வோர் பலர் இருக்கிறார்கள். 'கல்வெட்டுப்பாடும் கவிஞர்கள்போல. அதுதான் சரஸ்வதியின்முகத்தைகரித்துண்டால்துடைக்கும்வேலை. மரபுவடிவங்களில்எழுதப்படும் மோசமான கவிதைகள் மு.பொ வை ஆயாசம் கொள்ளவைப்பதைப் போலவே, வெறும் சொல்லடுக்குகளாக, உருவகக் குவியலாக, இந்நாளில் எழுதப்படும் புதுக்கவிதைகள் என்னை ஆயாசமடையவைக்கின்றன. 'ஒருமை' பன்மை, உயர்திணை' அஃறிணை வேறுபாடுகள் தெரியாதவர்கள் மொழியின் உச்சமாகிய கவிதை எழுத முனையலாமா?

யாப்புக்குள் நிற்றல் அல்லது யாப்பை மீறுதல் என்ற (புற) நிலைகளுக்குஅப்பால் கவிதை ஆழ்ந்த உணர்வுகளை உன்னதத்தை தொடவேண்டும் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்தில்லை.

# கிராமிய விளையாட்டில் அடையாள அணிவகுப்பு



கலாநிதி அகளங்கன்

கிராமியப் பாடல்களும், கிராமிய விளையாட்டுக்களும் தான் எமது தேசியச் சொத்துக்கள்.

எமது பாரம்பரியங்களையும், பண்பாட்டுக் கோலங்களையும் சரியாக அறிந்துகொள்ள இவையே முக்கிய சான்றுகள்.

மகாத்மாக காந்தி அவர்கள் கண்டியிலே ஒரு பாடசாலையிலே பேசும் போது அங்குள்ள மாணவர்களிடம் ஒரு கேள்வி கேட்டாராம்.

"உங்களது தேசிய விளையாட்டுக்கள் யாவை" என்பது தான் அந்தச் கேள்வி.

மாணவர்கள் "கிரிக்கட், புட்போல்" என்றெல்லாம் பதில் சொல்ல "அவை ஆங்கிலேயர்களின் விளையாட்டுக்கள். உங்கள் பாரம்பரிய விளையாட்டுக்கள் யாவை என்று கேட்க சபை மௌனித்ததாம்.

"உங்கள் பெற்றோர், அவர்களின் பெற்றோர், மூதாதையர்கள் ஒரு விளையாட்டும் விளையாடவில்லையா" என்று மீண்டும் கேட்க மாணவர்கள் யோசித்து ஒவ்வொன்றாகச் சொன்னார்களாம்.

கிராமியப் பாடல்களைப் பலர் தொகுத்து நூல்களாக்கியிருக்கிறார்கள். ஆய்வு செய்திருக்கிறார்கள். கிராமிய விளையாட்டுக்கள் பற்றி ஆய்வு செய்தோர் குறைவு என்றே சொல்லலாம்.

வவுனியா மாவட்டத்தில் விளையாடப் பட்ட கிராமிய விளையாட்டொன்றை நினைத்துப் பார்க்கும் பொழுது ஆச்சரியமாக இருந்தது.

இவ்விளையாட்டு வேறு மாவட்டங்களில் இருந்ததா என்பது பற்றி அறிய முடியவில்லை.

கிராமியப் பாடலோடு பொருந்திய இந்தக் கிராமிய விளையாட்டு, வெறும் விளையாட்டாக இல்லாமல் நடைமுறைக்கு வந்ததை நினைத்து வியந்தே இக்கட்டுரையை எழுதுகிறேன்.

கிராமத்துச் சிறுவர்கள் வீட்டுக்குள்ளோ, 'மால்' எனப்படும். வீட்டின் முன் உள்ள கொட்டிலுக்குள்ளோ, அல்லது திண்ணை எனப்படும், வீட்டின் முன்னுள்ள குந்திலோ இருந்து சில விளையாட்டுக்களை விளையாடுவது வழக்கம்.

பாண்டி, தாயம், கொக்கான் வெட்டுதல், கிள்ளாப் பிறாண்டு, முதலான பல விளையாட்டுக்களை இவ்வகையில் குறிப்பிடலாம்.

பொதுவாக மழைக் காலங்களில் அல்லது கடும் வெய்யில் நேரத்தில் சிறுவர்கள் இருந்து விளையாடுகின்ற பல விளையாட்டுக்களில் இவை சில.

இவற்றில் ஒரு விளையாட்டு "யாரடி அம்மா தாயாரே" என்று சொல்லப்படுகின்ற விளையாட்டு.

ஔவையார் 'ஆத்திசூடி' என்று முதற் பாடலை ஆரம்பித்ததால் அந்நூல் 'ஆத்திசூடி' ஆகியது போல, ஔவையார் 'கொன்றை வேந்தன்' என்று முதற் பாடலை ஆரம்பித்ததால் அந்நூல் "கொன்றை வேந்தன்" ஆகியது போல, ஔவையார் 'வாக்கண்டாம்' என்று முதற் பாடலை ஆரம்பித்ததால் 'மூதுரை' என்ற நூல் 'வாக்குண்டாம்' என்று ஆகியது போல, அதிவீர ராம பாண்டியன் 'வெற்றிவேற்கை' என்று ஆரம்பித்ததால் 'நறுந் தொகை' என்ற அந்நூல் 'வெற்றி வேற்கை' ஆகியது போல "யாரடி அம்மா தாயாரே" என்று ஆரம்பித்ததால் இவ்விளையாட்டு "யாரடி அம்மா தாயாரே" என்று பெயர் பெற்றது.

இவ்விளையாட்டில் ஐந்து (5) பேர் மட்டுமே பங்கு கொள்வர். ஐந்து ஒரே அளவான தாள்களில் இராசா, மந்திரி, கள்வன், அம்மா, சேவகன் எனத் தனித்தனி எழுதப்படும். அவை தனித் தனியாகச் சுருட்டி எடுக்கப்படும்.

ஐந்து பேரும் பால் வேறுபாடின்றி வட்டமாக அமர்ந்திருப்பார்கள். விளை யாடுபவர்களில் ஒருவர் அல்லது பார்வை யாளர்களில் ஒருவர் குலுக்கிப்போடுவார்.

எந்த வித்தியாசமும் தெரியாத அந்த ஐந்து சுருள்களில் ஒவ்வொன்றை ஒவ்வொருவர் எடுப்பர்.

எடுத்து இரகசியமாக மறைத்துக் கொண்டு பிரித்துப் பார்ப்பர்.

'இராசா' என்ற துண்டை (தாளை) வைத்திருப்பவர் இராஜ சபையைக் கம்பிரமாக ஆரம்பிப்பார்.

அவர் அரசனைப் போன்ற அதிகாரத் தொனியோடு, ராஜ கம்பீரத்தோடு "யாரடி

அம்மா தாயார!" என்று சபையைப் பார்த்துக் கேட்பார்.

அம்மா என்ற துண்டை வைத்திருப்பவர் மிகப் பக்குவமாக, குடிமகனுக்குரிய பணிவோடு "நான் தான் ஐயா இராசாவே!" என்பார்.

உடனே இராசா மீண்டும் அதிகாரத்தொனியில் "உன் வீட்டில் நடந்த கூக்குரல் என்ன" என்று கேட்பார்.

அம்மா "கள்ளன் வந்து களவெடுத்தான்." என்பார். உடனே இராசா "அக்கள்வனை இச்சபையில் காண்பி" என்பார்.

இராசா. அம்மா, தவிர இன்னும் மூன்று பேர் சபையில் இருப்பார்கள். அவர்களில் ஒருவர் மந்திரி என்ற துண்டை வைத்திருப்பார். அவர் மந்திரி. அதேபோல் 'கள்வன்', 'சேவகன்' ஏனையோர்.

இந்த மூன்று பேரில் எவர் கள்வன் என்பதை அம்மா சரியாகக் கண்டு பிடித்துக் காட்ட வேண்டும். இதுதான் விளையாட்டு.

'கள்வன்' தன்னைக் கள்வன் என்று அம்மா கண்டு பிடிக்க முடியாதபடி தனது முகபாவத்தால் நடிக்க வேண்டும்.

அம்மா அந்த மூவரையும் மாறி மாறி உற்றுப் பார்த்து கள்வனைக் கண்டு பிடிக்க வேண்டும்.

கள்வனைச் சரியாகக் காட்டி விட்டால் மந்திரி, சேவகன் ஆகியோர் தம்மை வெளிப்படுத்திக் கொள்வர்.

இராசா, மந்திரியை நோக்கி "இக்கள்வனுக்கு என்ன தண்டனை வழங்கலாம்" என்று கேட்பார்.

மந்திரி தண்டனையை குறியீட்டு முறையில் தெரிவிப்பார். "மூன்று கடுங்கோப்பியும் ஒரு ப்சசைத் தண்ணியும்" என்று சொன்னால் சேவகன் இலை குழைகள் பொருந்திய ஒரு சிறு தடியினால் மூன்று முறை பலமாகவும் ஒரு முறை மெதுவாகவும் அடிப்பார்.

தண்டனை பெரிதாக இருக்காது. ஏனெனில் அடுத்த ஆட்டத்தில் மந்திரியோ, சேவகனோ கள்வனாகலாம். பழி தீர்க்கப்படலாம்.

அம்மா கள்வனைச் சரியாக இனங்காட்டாமல், மந்திரியை, அல்லது சேவகனைக் கள்வன் என்று சுட்டிக் காட்டிவிட்டால் அம்மாவுக்கு தண்டனை வழங்கப்படும்.

உதாரணமாக மந்திரியைக் கள்வன் என்று அடையாளம் காட்டி விட்டால் இராசா மந்திரியைப் பார்த்து "மந்திரியைக் கள்வன் என்று குற்றஞ் சாட்டியதால் அம்மாவுக்கு என்ன தண்டனை வழங்கப்படும்" என்று கேட்பார் மந்திரி சொல்லும் தண்டனை நிறை வேற்றப்படும்.

மீண்டும்விளையாட்டு ஆரம்பிக்கப்படும். மந்திரியோ, சேவகனோ குற்றஞ் செய்ய மாட்டார்கள். களவெடுக்க மாட்டார்கள் என்பது அக்கால நம்பிக்கை.

இராசா, மந்திரி என விளையாட்டு விளையாடப்பட்டாலும் இன்றைய தேர்தல் ஆட்சி மாற்றம் குடியாட்சி போல இராசா, மந்திரி அடுத்த ஆட்டத்தில் மாறிவிடுவர்.

அம்மா இராசா வாகலாம். சேவகன் மந்திரியாகலாம். யாரும் யாருமாக ஆகலாம். இங்கு அம்மா என்பது குடிமக்களின் பிரதிநிதியாகச் செயற்படுகிறார்.

குற்றவாளியைப் பிடித்து வேறு நபர்களோடு அடையாள அணிவகுப்பில் நிறுத்தி பாதிக்கப்பட்ட வரைக் கொண்டு அடையாளம் காண்பிக்கும் இன்றைய நடைமுறையை ஒத்ததாக இல்லையா இந்த விளையாட்டு.

குற்றவாளியைப் பிடித்து மறைத்து விட்டு வேறொருவரைச் சேர்த்து அடையாள அணிவகுப்பை நடாத்தும் கேவலமும் நாடுகள் பலவற்றில் உண்டு.

குற்றவாளியைக் காட்டிக் கொடுத்து விட்டால் அம்மாவுக்குத் தண்டனை வழங்கும் நடைமுறையும் பல நாடுகளில் உண்டு.

நடிப்போடு பொருந்திய இக்கிராமய விளையாட்டு நடைமுறை அரசியல் விளையாட்டோடு ஒப்பிட்டு ஆராய முனைந்தால் பல பக்கங்கள் நீளும்.

எனவே இவ்விளையாட்டின் சிறப்பை நீங்களே உங்கள் அனுபவங்களினூடாக அறிவின் உடாகப் புரிந்து கொள்ளுங்கள்.

---

39ம் பக்கத் தொடர்ச்சி....

கணக்கெழுதும் புத்தகமும் அங்கே இருக்கும். அவரவர் தேவைக்கு எடுக்கும் பணத்தை பெயரிட்டு கணக்குப் புத்தகத்தில் எழுதி விட வேண்டும். அந்த வகையில் அவர் ஒரு பொதுவுடமைவாதியாக இருந்தார்.


அவர் சினிமா பக்கம் போனது மனதிற்கு கொஞ்சம் வருத்தமாக இருந்தது. ஒரு சான்றாண்மையான மனிதராக நான் அவரை மனதில் ஏற்றிப் போற்றி வைத்திருந்தேன்.

பெற்றமனம் நாவல் திரைப்படமாக வந்து பெரிய வெற்றியைப் பெறவில்லை. தெலுங்கில் வெற்றி பெற்றது.

இதன்பிறகு தனது நாவல்கள் திரைப்படமாக வருமென்று மு.வ.நம்பினார். ஆனால் பெற்ற மனத்திற்குப் பிறகு அப்படி ஏதும் நடக்கவில்லை.

மு.வ.பற்றி எனது அனுபவங்கள் ஒரு நூலுக்கான அளவு உள்ளன. இப்போதைக்கு இது போதுமென்று நினைக்கிறேன்.

# மு.பொ. பக்கம்



மிக அண்மையில் முக்கியமான பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்கள் வெளியாவதுபோல் கலாபூஷணம் பட்டமளிப்புக்கு தேர்வு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் பத்திரிகைகளில் பட்டியலிடப்பட்டிருந்ததைக் கண்டு நான் ஆச்சரியமடைந்தேன். காரணம், கிட்டமுட்ட நூறையும் தாண்டிப்போகும் தொகைபோல் தெரிந்தது என்றால் இது கணிசமான தொகைதான்! இவ்வாறான நிலை நீடிக்குமானால் நாடுபூராவும் கலாபூஷணங்களும் கலாகீர்த்திகளும் பல்கிப்பெருகி வழிய வாய்ப்புண்டெனலாம். அதாவது சோஷலிய ஆட்சியைக் கடந்து, உண்மையான கொம்யூனிசம் என்னும் பொன்னுலக (UTOPIA) ஆட்சி மலர்வில் எந்த விதத் தேவையோ கட்டாயமோ அற்று அனைவரும் தத்தம் வேலைகளை கலாரசனையாகச் செய்து ஆனந்தமுறும் காலம் நம் இலங்கையில் அண்மித்துக் கொண்டிருக்கிறது போலவே எனக்குப்படுகிறது! இதைத்தான் போலும் கம்பன் "எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வம் எய்தலாலே இல்லாரும் இல்லை உடையாரும் இல்லை மாதோ" என்று கூறினான் போலும். அதாவது கலாபூஷணம் என்ற பட்டத்தைப் பெற்றவர் என்றும் பெறாதவர் என்றும் இல்லாத பொன்னுலக மலர்ச்சி!

இப்படி இந்த விருதுகளைப் பெற்றவர்களைப் பார்த்து, 'இவங்களுக் கெல்லாம் யார் இந்த கலாபூஷணம் பட்டங்களைக் கொடுத்தது?' என்றுதம்வயிற்றெரிச்சலைக்கொட்டியவர்களும் உண்டு. இவர்கள் கவலைப்படத் தேவை யில்லை. இவர்கள் இந்தப் பட்டத்தை பெற விரும்பினால் முதலில் தமது சுயவிபரக் கோவையைத் தயாரிக்க வேண்டும். அதன் பின்னர் அதைக் கலாசார அமைச்சுக்கு அனுப்ப வேண்டும். அதன் பின்னர் இவற்றில் செல்வாக்குடையோர் யாரையாவது பிடித்து, தமக்கு மேற்படி பட்டம் கிடைப்பதற்கான சிபார்சுகளை அவர்கள் மூலம் செய்விக்க வேண்டும். இதில் அவர்கள் வெற்றிபெறும் பட்சத்தில் அவர்கள் அவாவிய பட்டம் அவர்கள் மேல் போர்க்கப்படும்.

இவ்வாறு இப்பட்டங்களை பெறுவோர் அவ்வப்போது தம் துறைசார்ந்த தரமான படைப்புகளை, ஆக்கங்களை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு வெளிப்படுத்துவார்களாயின் தாமும் தம்மை கௌரவப்படுத்திக் கொள்வதோடு தாம் பெற்றபட்டங்களையும் கௌரவப் படுத்துபவர்களாக மாறுவர்.

இவற்றின் பின்னணியில்தான் அண்மையில் மூத்த எழுத்தாளரும் 'விமர்சகரு'மான கே.எஸ். சிவகுமாரன், தாம் அளித்திருந்த பேட்டியில், "இதுவரை எனது எழுத்துகளுக்கு நாடளாவிய ரீதியில் பரிசு கிடைக்கவில்லை என்றும் கலாபூஷணம் போன்ற பட்டங்களை வழங்குவோர் அவற்றிற்கு நான் தகுதியற்றவன் என்று கருதினார்களோ என்று தெரியவில்லை என்றும் ஆதங்கப்படுவதைப் பார்க்கும்போது, இதற்காகப் போட்டிபோடும் இளையவர்களை நாம் குறை கூற முடியாது. முதியவர்களுக்கே இந்தப் பட்டங்களில் உள்ள 'மாயை' நீங்கவில்லை என்றால் இதுபற்றி யாரோடு நோவோம். யார்க்கெடுத்துரைப்போம்?

இவ்வாறு பட்டங்கள் வழங்குவது கூடாதென்றோ தேவையற்றதென்றோ நான் கூறமாட்டேன். அதை வழங்குவதற்கு செயற்படுத்தும் முறைதான் கேவலமாகவுள்ளது. மேற்குறிப்பிட்ட மூத்த எழுத்தாளர் தானே தன் சுயவிபரக்கோவையை தயாரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதையும் அதனால் ஏற்படும் வேலைப்பழுவையும் சுட்டாமல் சுட்டியிருந்தார். இவ்வாறு ஒரு எழுத்தாளன் தானே தன்னை பற்றிய சுயவிபரங்களைச் சொல்லி பட்டங்களைப் பெறும் முயற்சி இல்லாதொழிக்கப்பட வேண்டும். இதற்கென விஷயமறிந்த ஒரு குழுவை நியமித்து, தமது ஆற்றலை வெளிப்படுத்தும், கலைஞர்களை தெரிவுசெய்து பட்டங்கள் வழங்கிக் கௌரவிப்பதே தேவையாகும். இதுவே பெரும் பரிசுகளையும் விருதுகளையும் வழங்கும் அமைப்புகளின் செயல்முறையாகும்.

இவ்வாறு இலங்கைகலாசார அமைச்சுசெய்ய வேண்டிய தேவையானஒன்றையே இன்றுதகவம், Gratiaen Trust போன்ற இலக்கிய அமைப்புகள் செய்ய முன்வந்துள்ளமை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அண்மையில் 'தகவத்தி'னால் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டவர், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா ஆவார். ஆனால் இவ்வாறு கௌரவிக்கப்பட்ட ஹனிபா, நுணலும் தன்வாயால் கெடும் என்பது போல் தனக்குத் தேவையற்றவற்றைக் கதைத்து பிரச்சினைக்குள்ளானார். அவர் பேசியவற்றுக்கு எதிராக, தனிச்சுற்றுக்கு விடப்பட்டு இன்று எங்கும் வலம் வரும் எதிர்வினையால் ஹனிபா பற்றிய மறுபக்கம் அம்பலமாகியுள்ளது. ஆனால் இதற்கான பொறுப்பை தகவம் மீது சுமத்த முடியாது என்பதே எமது கருத்து.


தகவம் போன்ற அமைப்புகள் தமது கலைஞர் தேர்வு மற்றும் சிறுகதைகள் தேர்வுக்கு தனிநபர் ஒருவரில் தங்கியிருத்தல் ஆபத்தானது. காரணம் அத்தனிநபர் இலக்கிய நேர்மையற்றவராக அல்லது தன்னை எதிலும் முதன்மைப்படுத்துபவராக இருப்பாரேயானால் நிலைமை மோசமான தாகவே முடிவுறலாம்.

# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்

கே. பொன்னுத்துரை

கொழும்பில்.....

## கம்பன் விழா 2013





கம்பன் விழாவில் கௌரவம் பெறும் சான்றோர்: (இடமிருந்து வலமாக)

எழுத்தாளர் தெணியான், பேராசிரியர் வை. நந்தகுமார், பேராசிரியர் திஸ்ஸ காரியவசம், திரு. கே. ஆர். சுந்தரமூர்த்தி, அல்ஹாஜ் அலவி மௌலானா, திரு. மனோ கணேசன். 'கம்பன் புகழ்' விருது தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சிலம்பொலி சு. செல்லப்பன்.



'மகரந்தச் சிறகு' விருது கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களுக்கும், 'நுழைபுலம்' ஆய்வு விருது திரு. என். கே. எஸ். திருச்செல்வம் அவர்களுக்கும், 'ஏற்றமிகு இளைஞர்' விருது திரு. ஆ. யதீந்திரா அவர்களுக்கும் கொழும்புக் கம்பன் கழகப் பெருந்தலைவர் ஜெ. விஸ்வநாதன் அவர்கள் வழங்குவதைப் படங்களில் காணலாம்.

- புகைப்படங்கள்: கே. பொன்னுத்துரை



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப்பிரிவுத் தயாரிப்பாளர் எஸ்.மோசேஸ் அவர்களும், அவரது மனைவியான கிழக்குப்பல்கலைக்கழக சமூகவியல் விரிவுரையாளர் எம்.பகீரதி அவர்களும் அரச தொலைக்காட்சி விருதினை பெற்றுக்கொண்டனர். 2006ம் ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்டு வரும் விருது நிகழ்வுகளில் ஒரே மேடையில் கணவனும் மனைவியும் விருதினைப் பெற்றுக்கொண்டமை இதுவே முதற்தடவையாகும்.




உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 2013 பெப்ரவரி 14, 15 திகதிகளில் தமிழகத்தில் நடத்திய தேசியக் கருத்தரங்கத்தில் இலங்கையில் இருந்து பங்குபற்றியோர்:

பேராசிரியர் துரை. மனோகரன், பேராசிரியர் செ. யோகராசா, பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ், எஸ். வை. ஸ்ரீதரர், எம். ஐ. எம். ஹனீபா, சு. குணேஸ்வரன், த. அஜந்தகுமார்.

மேற் கண்டவர்களுடன் ரூபி வலன்ரீனா பிரான்சிஸ், தி. ஞானசேகரன், ஞா. பாலச்சந்திரன் ஆகியோரும் பங்குபற்றினார்.




**குறிஞ்சி நாடன்**





நூல் :
வேலணையூர் பண்டிதை த. வேதநாயகி
தொகுப்பு ஆசிரியர்:
திரு. ச. கந்தவேள்
வெளியீடு :
த. வேதநாயகி நூற்றாண்டு விழாக் குழு.

வேலணையூர் தம்பு வேதநாயகி யின் நூற்றாண்டு மலர் அவரது ஆக்கப் பணிகள் குறித்த ஆராய்ச்சி நூலாக திரு. சரவணமுத்து கந்தவேள் அவர்களால் தொகுக்கப்பட்டுள்ளது. இருநூற்று எழுபத்து இரண்டு பக்கங்களைக் கொண்ட இந்நூலில் அரிய பெரிய விடயங்கள் அடங்கியுள்ளன. பெண்கள் வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடந்த ஒரு காலகட்டத்தில் பெண்களின் விடிவுக்கு விளக்கேற்ற வந்த ஒரு தாரகையாக அவர் மிளிர்ந்தார்.

தம்புவேதநாயகி அவர்கள் தம்பு மீனாட்சி தம்பதிகளுக்கு ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்தார். தம்பதிகளுக்கு நான்கு பெண்களும் ஒரு ஆணும் பிறந்தனர். அக்காலம் தம்பு உபாத்தியாயர் புகழ்மிக்க அதிபராக எல்லோராலும் மதிக்கப்பட்டவராய் வித்துவ சிரோன்மணி கணேசையருடன் கல்விப்பணி செய்தார். நமது வேதநாயகி ஆசிரியர் சுப்பையாவிடம் பாடம் கேட்டு மதுரை தமிழ் பண்டிதர் பரீட்சையை 14ம் வயதில் சித்தி பெற்று பெற்றோரை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

அவரது சமயப் பணிகள், தத்துவப் பணிகள் கல்விப் பணிகள் ஆசிரியப் பணி, நிறுவனங்களுடன் இணைந்து ஆற்றிய பணிகள், இவரது ஆளுமை என்பன விரிவாக இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இவரது கட்டுரைகள் பல இந்நூலில் அடங்கியுள்ளன. பெண்மக்கள் விலங்கு, மருள்நீக்கும் மருத்துவம், பயனிலை மாங்கல்யம், உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளி, கந்தபுராண கலாசாரம் இவற்றோடு இன்னும் பல அடங்கியுள்ளன. இவரது கட்டுரைகள் சமூக சீர்திருத்தத்தை வேண்டியும் பெண்கள் உரிமை வேண்டியும் அழியாத கல்வியின் அவசியம் பற்றியும் விதந்து கூறுவதை அவரது கட்டுரைகளில் இருந்து அறியக் கூடியதாய் உள்ளது. இந்நூலில் பின் இணைப்பாக வம்சாவளி பட்டியில் இடம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். பல உசாத்தணை நூல்களை ஆதாரம் காட்டி இந்நூல் அமைந்துள்ளது.




நூல் :
உலகமயமாதல்
ஆசிரியர் :
சி. குமாரலிங்கம்
வெளியீடு:
ஆசிரியர்
விலை :
ரூபாய் 100/=

நூலாசிரியர் சி. குமாரலிங்கம் அவர்கள் வங்கி முகாமையாளராகப் பணியாற்றியவர். தனது தொழிலில் மிகவும் அக்கறையும் ஆர்வமும் காட்டியவர். பிறரிடம் இன்முகத்துடன் பழகியர். உதவி தேவைப்பட்டோருக்கு உதவும் நற்பண்பு கொண்டவர். இவர் 1947இல் யாழ் மண்ணில் பிறந்தவர். சிறந்த முற்போக்குச்சிந்தனையாளர். கலை இலக்கிய எழுத்துத் துறைகளில் ஈடுபாடு கொண்டவர்.

இவர் பல நூல்களை வெளியிட்டுள்ளார். செந்தமிழ் நாடென்னும் போதினிலே, ஆங்கில கவிதைத் தொகுதி இரண்டு, சாக்ரடீசும் அவரைத் தொடர்வோரும், இலங்கையில் தேர்தலும் அரசியலும், உலகப் புகழ் பெற்ற அமைப்புக்கள். சீனாவும் சிறிலங்காவும் எனப் பலநூல்களைத் தந்துள்ளார்.

கட்டுரைகளாக இருந்தாலும் கவிதை நாமத்தோடு செழிப்பாக இந்நூலைப் படைத்துள்ளார். ஐம்பது பக்கங்களைக் கொண்ட இந்நூலில் உள்ளுறையாக, முதலாம் உலகப் போர் இரண்டாம் உலகப்போர், உலகவங்கி, ஐரோப்பிய ஒன்றியம், கர்லோ குய்வானி, செவ்விந்தியர், பட்டினி உலகம், குளிர்பானங்கள், மார்க்கோ போலோ, வாஸ்கொடகாமா என்று பல்வேறு தலைப்புக்களில் கட்டுரை அமைந்துள்ளது.

வாஸ்கொடகாமா, மார்க்கோபோலோ ஆகியோரின் நிழற்படங்கள் இடம் பெற்றுள்ளன. பன்னிரெண்டு எழுத்துப் புள்ளிகளில் தெளிவாக புத்தகம் உள்ளது. கவிஞரிடம் மனக்குறை ஒன்றுளது அது என்ன?

பலர் எழுதும் கவிதைகளுக்குப் பரிசுண்டு
கதைக்கும் பரிசுண்டு
நாவலுக்குப் பரிசுண்டு
கட்டுரைக்குப் பரிசில்லையா?

என்று ஒரு வினாவை எழுப்புகிறார். சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்வார்களா?




நூல் : இந்தப் பூக்களும் மணக்கும்
ஆசிரியர்: தம்பித்துரை ஐங்கரன்
வெளியீடு: குரும்பசிட்டி சன்மார்க்க சபை
விலை : ரூபாய் 110/=


'இந்தப் பூக்களும் மணக்கும்' என்ற கவிதை நூலின் ஆசிரியர் தம்பித்துரை ஐங்கரன் ஆவார். யாழ் குரும்பசிட்டி மண்ணில் பிறந்து போரின் கொடுமையால் பல இன்னல்களை அனுபவித்து, இன்று வவுனியாவை புகலிடமாகக் கொண்டுள்ளார். இலக்கிய உலகுக்கு ஏலவே பல நூல்களைத் தந்தவர்.

இயற்கையாகவே மனிதனிடம் ரசனைப் பண்பு உண்டு. அதை அறிந்து மெருகேற்றிக் கொள்பவர்கள் சிறந்த எழுத்தாளர்களாகப் பரிணமிக்கிறார்கள் அந்தவகையில், கவிஞரின் குடும்பப் பின்னணியும் குரும்பசிட்டி மண்ணின் வளமும் சூழலும் இவரை வியக்கத் தக்க கவிஞனாக மாற்றியுள்ளது. குரும்பசிட்டி ஈழகேசரி பொன்னையா, பண்டிதர் வ.நடராஜன், இரசிகமணி கனக செந்திநாதன், ஏ.ரி.பொன்னுத்துரை. ஆவண ஞானி கனகரத்தினம் என்போர் தோன்றி தமிழ்த்தாய்க்கும் கலைத்தாய்க்கும் பெருமையாக பங்களிப்பு செய்துள்ளனர்.

இந்தப் பூக்களும் மணக்கும் என்ற இந்த கவிதை நூல் எண்பத்து மூன்று பக்கங்களைக் கொண்டு முப்பத்து நான்கு கவிதைகளைக் கொண்டுள்ளது. கவிதைகள் மரபுக்கவிதைகளாகவும் புதுக் கவிதைகளாகவும் அமைந்து பாடுபொருளை அழகாக விளக்குகின்றன. பொருத்தமான படங்கள் இடம்பெற்றிருப்பது. கவிதை களுக்கு மெருகூட்டுகிறது.

சிறந்த சிந்தனையை உருவாக்கும் கவிதைகளாக 'தொலைந்து போகும் வெளிநாடு', 'சரித்திரங்கள் பேசின' 'தேசத்தைத் தெரியுமா', நினைத்துப் பார் என்பனவற்றை அடையாளம் காணலாம். பெண்ணுரிமை, காதல் தத்துவம், சமூகச் சீரழிவுகள் என்பனபற்றியும் பாடியுள்ளார்.

மண்ணின் மூத்தோரை நேசித்தும், நினைத்தும், நன்றியுணர்வைக் காட்டும் முகமாக முதுபெரும் பதிமூன்று எழுத்தாளர்களுடையநிழற்படங்களைநூலில் இடம்பெறச் செய்தமை அவரது பணிவையும் நன்றியறிதலையும் காட்டுகின்றன.




நூல் : கடவுளின் மரணம்
ஆசிரியர் : கரணை ரவி
வெளியீடு : வடலி வெளியீடு
விலை : இந்திய ரூபாய் 80/=

கருணை ரவி. ஒரு சிறந்த படைப்பாளி யாழ்ப்பாணம் உப்பேறிய கிராம மொன்றில் பிறந்தவர். உப்பின் வீச்சமும் தெருக்களில் அலைமோதும் அவரது கதைகளின் உப்பு இருப்பதால் நல்ல உணவாகக் கொள்ளலாம். சமூக சிந்தனையுடன் விழிப்புணர்வு ஊட்டும் கதைகளாக அவரது ஆக்கங்கள் மிளிர்கின்றன.

முகப்பு அட்டையே சிந்திக்க வைப்பதாக உள்ளது. நூற்றி நான்கு பக்கங்களைக் கொண்ட இச்சிறுகதை நூலில் பதினாறு கதைகள் இடம் பெற்றுள்ளன. அவரது கதைகளில் மனிதத்தை தரிசிக்க முடிகிறது. கடவுளின் மரணம் - பிரிகை - கப்பல் எப்பவரும் முள்ளிவாய்க்காலும் முறைப்பாட்டுக் கடிதமும் - புஷ்பனுக்கு இரண்டு பொடிகாட், சாவலி - சிங்களத்தி - காணாமல் போனவர்கள் இப்படியாக பதினாறு கதைகள்.

கதை மாந்தர்களின் குணாதிசயங்கள் மனித தத்துவத்தையும் ஏமாற்றையும் இன்னும் பலவற்றையும் விளக்குகிறது. போர்க்கால சூழ்நிலையில் பாதுகாப்பு வலையம் அமைக்கப்பட்டு லட்சக்கணக்கானோர் எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லாமல் மிருகத்திலும் கேவலமான வாழ்க்கையில் குற்றியிரும் குறையுயிருமாக நடைப்பிணங்களாக இருந்தார்கள் என்பதை கதையில் தரிசிக்க கூடியதாகவுள்ளது. கப்பல் என்ற கதையில் உன்னைவிட்டுப் போகேன் போனால் உன்னுடன் தான் என்று கூறியவர் லஞ்சம் கொடுத்து கப்பல் ஏறியதும் ஒரு குருட்டுக் கிழவிக்கு ஊர்பேர் தெரியாத பெண் உதவுவதும் மனதை நெருடச் செய்கின்றது.

கதைகளில் ஒளிவு மறைவற்ற -பாசாங்குத் தனமில்லாத - சோடிக்கப்படாத உண்மைச் சம்பவங்களின் எதிரொலியாக கதைகள் அமைந்து யதார்த்தத்தை வெளிக்காட்டுகின்றன.

# வாசகர் பேசுகிறார்

ஞானம் 152ல் எழுத்துப் பிழைகள் காணப்பட்டன. வழமையாக ஞானத்தில் இவ்வாறான பிழைகள் இடம் பெறுவதில்லை. ஆனால் இம்முறை எனது கட்டுரையிலும் பத்தி எழுத்திலும் பிழைகள் இருப்பதாகக் கண்டேன். உதாரணமாக 'சோ.ப.வின்' தென்னிலங்கைக் கவிதை கட்டுரையில் "இதன் பின்னணியிலேயே தற்போதைய கவிஞர் சோ.பத்மநாதன்" என்று வரும் வசனத்தில் பாவிக்கப்படும் 'தற்போதைய' என்ற சொல்லுக்குப் பதில் 'தற்போது' என்று வந்திருக்கவேண்டும். இல்லையெனில் அது பெரும் கருத்துக் குழறுபடிகளுக்கு இட்டுச் செல்லும்.

**– மு.பொ.**

கவிஞரும் விமர்சகரும் எழுத்தாளருமான மு. பொ. அவர்களது பத்தி எழுத்தை தொடர்ந்து வாசித்து வருகிறேன். இலக்கியம் தொடர்பான பல விடயங்களை அவர் பதிவு செய்து வருகிறார். ஞானம் 149, 150, 151, 152 ஆம் இதழ்களில் அவர் கூறிய விடயங்களை நோக்கினால் அவர் அத்தனை இதழ்களிலும் தனது தமையனார் மு. த. பற்றி வலிந்து அடிக்கடி கூறுவதைக் காண முடிகிறது. இது முறையல்ல. முன்னர் பத்தி எழுத்துக்கள் எழுதிய துரை மனோகரன், விஜயன், மானா மக்கீன் போன்றவர்கள் பல வித்தியாசமான விடயங்களை எமக்குத் தந்தார்கள். மு.பொ. திறமைசாலி. பல புதிய இலக்கிய விடயங்களை ஞானம் வாசகர்களுக்கு தரக்கூடிய வல்லவர். அவர் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என வினயமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**அ. சத்தியசீலன்,** கோண்டாவில்

152 ஆவது இதழ் கிடைத்தது.

கடந்த 30, 40 வருடங்களாக எமது பிரதேசத்தை நாங்களே ஆளவேண்டும், அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற கோசம் யாழ்ப்பாணத்தில் ஓங்கி ஒலிக்கிறது. ஆனால் தென் பகுதியிலிருந்து கொண்டுவரப்படும் உருளைக் கிழங்கு, சோயா, கடலை, டின் மீன், இன்னும் பல உணவுப் பொருட்கள் அதிகமாக உபயோகிக்கப்படுகிறது; வைபவங்களிலே சமைக்கப்படுகிறது. வைபவங்கள், விழாக்கள் மண்டபங்களிலே நடக்கின்றன. வீடுகளில் நடக்கும் வைபவங்களிலும் வெளியே சமைத்த உணவு கொண்டுவரப்படுகிறது. இவை யாழ்ப்பாணப் பாரம்பரியத்துக்குப் புதியவை. தென்னிலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. இன்னும் மரணவீடு நடத்தும் மலர்ச்சாலைகள் வரவில்லை. தென்பகுதித் தொழிலாளர்கள் அதிக அளவில் இங்கு காணப்படுகிறார்கள். எமது இளைஞர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்வதற்குத் தயாராக இல்லை. ஆனால் வெளிநாடுகளுக்குச் சென்று கஷ்டமான வேலைகளைச் செய்கிறார்கள். யாழ்ப்பாணப் பாரம்பரியம் சிறிதுசிறிதாக கரைந்து கொண்டே செல்கிறது.

பல எழுத்தாளர்கள் புத்தகங்களை மொழிபெயர்த்து வெளியிட்டு சாகித்திய மண்டலப் பரிசுகளைப் பெற்றுக்கொள்கிறார்கள். பரிசுக்குத் தேர்வு செய்யும்போது நடுவர்கள் மூலப் பிரதியையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். ஒருவருடைய கவிதையை, நாவலை, சிறுகதைத் தொகுதியை மொழி பெயர்க்கும்பொழுது மூலப்பிரதியை நாங்கள் வாசித்து தரத்தை அறிய முடியாமல் இருக்கிறது. சரியாக மொழிபெயர்க்கப்படுகிறதா என்பதை அறிய முடியாமல் இருக்கிறது. அல்லது சரியாக மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் மொழிபெயர்ப்புத் திறமையைப் பாராட்ட முடியாமல் இருக்கிறது.

**சி. குமாரலிங்கம்,** நல்லூர்


## எழுத்தாளர்களே, வாசகர்களே!

எமக்கு வரும் படைப்புகள், கட்டுரைகள், வாசகர் கடிதங்கள் சில திட்டமிட்டு மற்றவர்களைச் சிறுமைப்படுத்தும் நோக்குடன் எழுதப்படுகின்றன என்பது எமக்குத் தெரிய வந்துள்ளது. இத்தகைய எழுத்துக்கள் ஞானத்தின் நோக்கத்திற்குக் குந்தகம் விளைவிப்பதோடு வாசகர்களையும் பிழையான புரிதல்களுக்கு இட்டுச் செல்லும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இனிவரும் காலங்களில் எழுதியவர் **பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம்** போன்றவற்றைத் தாங்கிவராத எந்த எழுத்துக்களும் ஞானத்தில் பிரசுரத்திற்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் படமாட்டாது.

**– ஆசிரியர்**

## 'ஞானம்' "ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ்"




கடந்த முப்பெரும் தசாப்தங்களான ஈழத்துப் போர்க்காலத்தில் மொழியையும் அதன் வழியான இலக்கியத்தையும் கலாசார ஆயுதமாக ஏந்திய பேனா மன்னர்களின் போரிலக்கியம் தொடர்பான படைப்பு, ஆய்வு, மதிப்பீடு, கருத்தாடல், ஆவணம் பற்றிய பெருந்தொகுப்பாக இச் சிறப்பிதழ் 600 பக்கங்களைக் கொண்டு வெளிவந்துள்ளது.

**இலங்கையில் இதழின் விலை ரூபா 1500/=**

---

"ஞானம்" அலுவலகத்தில் இவ்விதழ் **ரூபா 1000/=** மாத்திரமே!

தபாலில் பெற விரும்புவோர் தபாற்செலவு **ரூபா 250/=** சேர்த்து அனுப்ப வேண்டும்.

தொடர்புகளுக்கு : **0777 306506**

---

அவுஸ்திரேலியாவில் இதழின் விலை - அவுஸ்திரேலிய டொலர் **25**

தபாலில் பெறவிரும்புவோர் தபாற்செலவு வேறாக அனுப்ப வேண்டும்.

தொடர்புகளுக்கு: **(0061) 408 884 263**

## "ஞானம்" சஞ்சிகை கிடைக்கும் இடங்கள்

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
202, 340, செட்டியார் தெரு, கொழும்பு-11

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
309A/ 2/3, காலி வீதி, வெள்ளவத்தை.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**துர்க்கா**
சுன்னாகம்

**ஜீவநதி**
அல்வாய். தொலைபேசி: 077 5991949

**லங்கா சென்றல் புத்தகசாலை**
84, கொழும்பு வீதி, கண்டி.

GNANAM - Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/43/News/2013

*With Best Compliments from*

**Luckyland**

உலக சாதனை எங்கள் பாரம்பரியம்
பிஸ்கட்டிலும் தான் !




# LUCKYLAND BISCUIT MANUFACTURERS

**NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.**
**TEL : 0094-081-2420574, 2420217. FAX: 0094-081-2420740**
**Email: luckyland@sltnet.lk**